விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 மாசி 22 புதன்கிழமை (06.03.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 077

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி;
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## வடக்கு அபிவிருத்திக்கு அதிக நிதி ஒதுக்கீடு வரவேற்கத்தக்கது
### எம்.ஏ.சுமந்திரன்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு விசேடமாக 5000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளு 23

## அரச ஊழியர்களுக்கு ஜூலை முதல் 2,500 ரூபாய்
### சிறப்புக் கொடுப்பனவு

(கொழும்பு)

2019ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் அரச துறை ஊழியர்களுக்கான சம்பளத்துடன் 2 ஆயிரத்து 500 ரூபாய் சிறப்புக்கொடுப்பனவு ஒன்று இணைக்கப்படும் என்று நிதி அமைச்சர் மங்கள சமரவீர அறிவித்தார்.

இந்த அதிகரிப்பு ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதற்காக 40 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 24

## கிளிநொச்சியில் ஒருவர் வெட்டிப்படுகொலை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி உதயநகர் கிழக்கு பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுக் காலை 7.45 மணியளவில் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

கூட்டுறவு காப்புறுதி நிறுவனத்தின் கிளிநொச்சி கிளை முகாமையாளரான காந்தலிங்கம் 24

## இளம் தம்பதிகள் வீடுவாங்குவதற்கு
### ஒரு கோடி கடன் சலுகை

(கொழும்பு)

திருமணம் முடித்த இளம் தம்பதிக்கு சிறப்புச் சலுகைகளுடன் கடன் திட்டம் "ஹோம் சுவிற் ஹோம்" என்ற பெயரில் அறிமுகப் படுத்தப்படுகிறது. தம்பதிகள் வீட்டை வாங்க நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கு 10 மில்லிய 24

# 2019 - வரவு செலவுத் திட்டம்
# பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பு
## பல்வேறு சலுகைகளும், கொடுப்பனவும் இணைப்பு



(கொழும்பு)

வறுமை ஒழிப்பை இலக்காகொண்ட அரசாங்கத்தின் வரவு-செலவுத்திட்டம் பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது. பல்வேறு சலுகைகள், கொடுப்பனவுகள், திட்டங்களை உள்ளடக்கிய வரவு-செலவுத்திட்டம் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவினால் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. (23ஆம் பக்கம் பார்க்க)

## தாய்ப்பால் புரைக்கேறியதில்
### பாலகன் உயிரிழப்பு

(கரணவாய்)

தாய்ப்பால் புரைக்கேறியதில் பச்சிளம் குழந்தை ஒன்று பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை புலோலியில் 24

## மங்கள சமரவீரவின் 2019 பட்ஜெட்டில்
## வடக்கு மாகாணத்துக்கு முன்வைக்கப்பட்ட சலுகைகள்

(கொழும்பு)

2019ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் நேற்று பாராளுமன்றத்தில் நிதியமைச்சர் மங்கள சமரவீரவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு சலுகைகள், கொடுப்பனவுகளையும், திட்டங்களையும் உள்ளடக்கியதாக இந்த 23

## நிதி அமைச்சரும் அரசும் மக்களை ஏமாற்றுகின்றனர்
### மகிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு

(கொழும்பு)

நிதி அமைச்சரும் அரசாங்கமும் மக்களை தொடர்ந்தும் ஏமாற்றி வரிகளை கொண்டு ஆட்சியை நடத்த முயற்சி செய்கின்றது என எதிர்க்கட்சி தலைவர் 02



## காணாமல் போனோரின் குடும்பத்திற்கு மாதாந்தம் ரூ.6 ஆயிரம் கொடுப்பனவு
(23ஆம் பக்கம் பார்க்க)

## எமது ஆட்சிக்காலம் முடிவதற்குள்
## யாழ்-கொழும்பு அதிவேக நெடுஞ்சாலை அமைக்கப்படும்
### நிதி அமைச்சர் மங்கள சமரவீர

(கொழும்பு)

எமது அரசின் ஆட்சிக்காலம் முடிவுறுவதற்கு முன்னதாக கொழும்பு யாழ்ப்பாணத்திற்கான அதிவேக நெடுஞ்சாலை பணிகளை நிறைவு செய்வோம் என்று நிதி அமைச்சர் மங்கள சமரவீர அறிவித்தார்.

கடந்த ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட அரசியல் மாற்றத்துக்குப் பின்னர் நிறுவப்பட்ட ஐக்கிய தேசிய முன்னணி அரசின், 'மங்கள' வரவு - செலவுத்திட்டம், பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.

அதனை சமர்ப்பித்து உரையாற்றும் நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்ததாவது,

பருத்தித்துறை மற்றும் பேசாலையில் மீன்பிடி துறைமுகங்களை அமைப்பதற்கு ஆயிரத்து 300 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 23

## யாழ். மாநகர சபைக்கு கட்டடம் அமைப்பதற்கு
### 700 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

(கொழும்பு)

யாழ்ப்பாணம் மாநகர சபைக் கட்டடத்தை பழைய இடத்தில் அமைப்பதற்கு 700 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாக நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். 2019ஆம் ஆண்டில் வரவு-செலவுத்திட்ட உரையில் 24

## சிகரெட் ஒன்று 5 ரூபாயால் அதிகரிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி முதல் சிகரெட் ஒன்றின் விலை ஐந்து ரூபாயால் அதிகரிக் 24

## இலங்கை அரசியல் நிலவரம் தொடர்பில் சம்பந்தனுடன் அமெரிக்க தூதுவர் பேச்சு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை, இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலைனா பீ.டெப்லிட்ஸ் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக அமெரிக்க தூதுவர் கூறியுள்ளார்.



இந்தச் சந்திப்பின்போது சிவராத்திரி வாழ்த்துக்களை தெரிவித்ததாகவும் தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து கலந்துரையாடியதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## நிதி அமைச்சரும்...

மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த முறையை போலவே 2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத் தில் அதிக வரிச்சுமை காணப்படுவதாக அவர் கூறினார்.

அரசாங்கத்தின் 2019ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டம் நிதியமைச்சர் மங்கள சமரவீரவினால் நேற்று செவ்வாய்க்கிழமை சமர்ப்பிக்கப்பட்டது. இது தொடர்பாக ஊடக ங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மகிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார்.

இந்தவரவுசெலவு திட்டத்தின் மூலமாக நாட்டினை முன் னெடுக்கவோ அல் லது மக்களின் வாழ் வாதாரத்தை பாது காக்கவோ முடியாது என்றும் சுட்டிக்கா ட்டினார்.

இந்த வரவு-செலவு திட்டம் நாட் டினை மேலும் கடன் சுமைக்குள் தள்ளும் வேலைத்திட்டமாக அமைந்துள்ளது என்றும் குற்றம் சாட் டினார்.

நிதி அமைச்சரும் அரசாங்கமும் மக்களை தொடர்ந் தும் ஏமாற்றி வரி களை கொண்டு ஆட்சியை நடத்தவே முயற்சித்து வருகின் றனர் எனவும் அவர் குறிப்பிட்டார். (ம-3)

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-13, மருதடி வீதி, ஆதன இல 33/10 என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக்கொண்ட ஆதனம் V.A.இரத்தினகோபால் என்னும் பெயரில் ஆதனவரிப்பதிவேட்டில் காணப்படுகிறது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம், நல்லூர் 33/10, மருதடி வீதியைச் சேர்ந்த சின்னையா துரைச்சாமி கைம்பெண் திரேசம்மா பிரசித்த நொத்தாரிசு திருமதி லிங்கா துரைராஜா முகதாவில் 2004.10.07 ஆம் திகதியிட்டு 4653 இலக்கத்தில் நிறை வேற்றப்பட்ட நன்கொடை உறுதியில் 1953 ஆம் ஆண்டு ஆவணி மாதம் முதல் தனது உடமையிலும் சொந்தத்திலும் ஆட்சியிலும் இருந்ததென்றும் வெளிப்படுத்தி தனது மகள் சின்னப்பு கிருஸ்ணமூர்த்தி கைம்பெண் நீலாம்பிகைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

அதன் விபரம் :- வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை "மருதடி வளவு" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் P.தனராஜா அவர்களின் வரைபட இலக்கம் 2628/2004.09.11 இல் துண்டு-1 எனக்காட்டப்பட்ட நில.பர 01 குளி 13.05 ஆகும்.

கிழக்கு :- அப்பாப்பிள்ளை சிவயோகநாதனின் ஆதனம்.
வடக்கு :- எலியாஸ் ஜீவராஜாவின் ஆதனம்.
மேற்கு:- ஒழுங்கை
தெற்கு:- ஒழுங்கை இடதங்கலும் குறித்த ஒழுங்கைகளில் பாதை பாவிப்புரித்தும்.

தற்போது இவ்வாதனத்தை கிருஸ்ணமூர்த்தி கைம்பெண் நீலாம்பிகை தமது பெய ரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ் வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியி லிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமா றும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது கிருஸ்ணமூர்த்தி கைம்பெண் நீலாம்பிகை என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(இம்மானுவல் ஆனல்ட்)**
முதல்வர்,
மாநகர சபை.

(சி-5697)

## சமையல் ஆள் தேவை

**தங்கம்மா முதியோர் இல்லம், புதுக்குளம், கனகராயன் குளம்.**

**தகுதிகள்**

- 45 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- பலம் வாய்ந்த பெண்ணாகவும் வேறு பொறுப்பில்லாதவராவும் இருத்தல் வேண்டும்.
- முதியோர்களை பராமரிக்க கூடியவராக இருத்தல் வேண்டும்.
- நன்நடத்தை உள்ளவராகவும் நேர்மை உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
- முதியோர் இல்லத்தில் தங்கியிருந்து வாழ்வை பார்க்க வேண்டும்.
- உணவு, உறைவிடம் இலவசமாக வழங்கப்படும்.
- மாதாந்தம் சம்பளம் வழங்கப்படும்.
- மாதம் 2 நாள் விடுமுறை வழங்கப்படும்.

**முடிவுத் திகதி: 10.03.2019**

வன்னி மாவட்டத்தில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். **முகாமையாளர்: தவம் - 077 449 9619**

(சி-5696)

## வடமாகாண புகையிரத கடவையாளர்கள் சங்கம்

மேற்படி 1987 - 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எம்முடன் தொழில் புரிந்த சகல எமது சங்க உறுப்பினர்கள் அனைவரும் கீழ்க்காணும் முகவரியில் எதிர்வரும் 11.03. 2019 ஆம் திகதி காலை 9 மணியளவில் ஒன்று கூடுமாறு அவசரமாக வேண்டப்படுகின்றனர். சில முக்கியமான முடிவுகள் எட்டப்பட்டு இருப்பதனால் தாங்கள் தொழில் புரி ந்ததற்கான தங்களிடமுள்ள ஆவணங்களுடன் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

குறிப்பு :- அன்றையதினம் சமுகமளித்துத் தகவல் வழங்குபவர்களின் விபரங்கள் மாத்திரம் இறுதிப் பரி சீலனைக்காக அனுப்பி வைக்கப்படும். சமுகமளிக் காத அங்கத்தவர்களின் விபரங்கள் அன்றைய தினத் துக்குப் பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என் பதை அறியத்தருகின்றோம்.

**அரியாலை தபால்கட்டை சந்தி, ஸ்ரீபாரதி வித்தியாசாலை முன்பாக**

**செயலாளர் 0778455365**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் சின்னத்துரை இராஜேஸ்வரி

திதி: அமாவாசை

அன்பின் திருவுருவாய் அகிலம்
போற்றும் அகல்விளக்காக
இன்புற்றிருந்து நல்லறமாற்றிய
இராஜேஸ்வரித் தாயே
துன்பத்திலெமை விட்டுப்பிரிந்து
ஈராண்டு சென்றாலும்
என்றென்றும் உம்முருவம்
எம்முன்நின்று நிழலாடுதே
என்றும் நினைவாயிருக்கின்றோம்
எமைநாடி வருவதெப்போ...!



பிறப்பு: 01.06.1952
இறப்பு: 26.02.2017

பருத்தித்துறை வீதி,
குடமியன்,
வரணி.

குடும்பத்தினர்
இராஜேஸ் ஸ்ரோர்ஸ்
கண்டி றோட், கொடிகாமம்.

(C-5700)

# போதைப்பொருள் கடத்தலுக்கு எதிராக புதிய தேசிய நிகழ்ச்சித்திட்டம் இன்று

## நாட்டுக்கு அறிமுகப்படுத்தப்படும்–ஜனாதிபதி



(கொழும்பு)

போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் கட்டுப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக தேசிய ரீதியாக நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய நிகழ்ச்சித்திட்டம் இன்று நாட்டுக்கு அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இன்று முற்பகல் ஊடக நிறுவனங்களின் தலைவர்களுடன் இடம்பெறும் கலந்துரையாடலின்போது இந் நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

சட்டவிரோத போதைப்பொருள் கடத்தலை தடுப்பதற்காக விஞ்ஞான பூர்வமான முறைமைகளை பயன்படுத்துவது குறித்து நேற்று முற்பகல் பத்தரமுல்லை, வோட்டஸ் எர்ஜ் ஹோட்டலில் இடம்பெற்ற நிபுணர்கள் மாநாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முப்படையினர், பொலிஸார், சுங்க திணைக்களம், மதுவரி திணைக்களம், கரையோர பாதுகாப்பு ஆகிய அனைத்து நிறுவனங்களின் சிறந்த ஒருங்கிணைப்புடன் நடைமுறைப்படுத்தப்படும் இந்த புதிய நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் போதைப்பொருள் ஒழிப்பிற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றத்தில் புதிய நடவடிக்கைக்ளை தேசமும் மக்களும் கண்டு கொள்ள முடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சட்டவிரோத போதைப்பொருட்களை கட்டுப்படுத்துவதற்கான சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது மனித உரிமைகளை பற்றி பேசுகின்ற சிலரால் மேற்கொள்ளப்படும் தடைகள் பற்றி கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, ஒரு நாட்டை சிறந்ததோர் நாடாக கட்டியெழுப்ப வேண்டுமானால் கொள்கைகளும் தண்டனைகளும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். ஒழுக்கப் பண்பாடான சமூகம் மற்றும் சிறந்த கலாசாரம் பற்றி எமது கீர்த்திமிகு வரலாற்றில் எழுதப்பட்டிருப்பது கடந்த காலங்களில் ஆன்மீக பெறுமானங்களுடன் கூடிய தண்டனைகள் நடைமுறைப்படுத்தப்பட்டதன் காரணத்தினாலாகும் என்பதையும் ஜனாதிபதி நினைவு கூர்ந்தார்.

கிராமிய மட்டத்தில் பரவியுள்ள சட்டவிரோத மதுபானங்களை கட்டுப்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் குறித்து கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி எதிர்வரும் வெசாக் பௌர்ணமி தினத்திற்கு முன்னர் கிராமங்களிலுள்ள சட்டவிரோத மதுபானங்களை முழுமையாக ஒழிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என பொலிஸ்மா அதிபருக்குப் பணிப்புரை விடுத்தார்.

போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வளிப்பதற்காக தனது வழிகாட்டலின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள விசேட அதிகார சபையின் நடவடிக்கைகளும் அடுத்த மூன்று மாத காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சட்டவிரோத போதைப் பொருட்களை ஒழிப்பதற்காக விஞ்ஞான பூர்வமான முறைமைகளை விரிவாகவும் சிறந்த ஒருங்கிணைப்புடனும் பயன்படுத்துவது குறித்தும் இந்த நிபுணர்கள் மாநாட்டில் விரிவாக கவனம் செலுத்தப்பட்டது.(இ-7)

# பிரித்தாளும் கொள்கையின் மூலமே இலங்கைப் போர் முன்னெடுக்கப்பட்டது

(சென்னை)

பிரித்தாளும் கொள்கையின் மூலமே இலங்கைப் போர் முன்னெடுக்கப்பட்டதாக நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

இந்தியத் தொலைக்கட்சி ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## சீமான் சுட்டிக்காட்டு



மேலும் கடந்த காலங்களில் விடுதலைப் புலிகள் இருந்த போது காணப்பட்ட பாதுகாப்புக்கள் அனைத்தும் இன்று தலைகீழாக மாறியுள்ளது.

குறிப்பாக தமிழ் இஸ்லாமியர்களின் மனதை மாற்றி சில சூழ்ச்சிகளை சிங்களவர்கள் மேற்கொண்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## ராஜீவ் காந்தி படுகொலை

# பேரறிவாளன், நளினி உள்ளிட்ட எழுவரும் 10-ம் திகதி விடுதலை



(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட வழக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பேரறிவாளன், நளினி உள்ளிட்ட ஏழு பேரும் எதிர்வரும் 10 ஆம் திகதி விடுதலை செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணி புகழேந்தி இந்திய ஊடகம் ஒன்றிடம் இதனை தெரிவித்துள்ளார். ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட வழக்கில் பேரறிவாளன், நளினி உள்ளிட்ட ஏழு பேரும் பல வருடங்களாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களது விடுதலை குறித்து மாநில அரசே முடிவு செய்து கொள்ளலாம் என்று உச்ச நீதிமன்றம் கூற முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா இவர்களை விடுவிக்க முடிவு செய்திருந்தார்.

அத்துடன், இது குறித்த அமைச்சரவையின் முடிவை மத்திய அரசுக்கு அனுப்பியும் வைத்தார். எனினும், மத்திய அரசு இவர்களின் விடுதலைக்கு தடையாகவே இருந்த வந்தது.

எனினும், குறித்த ஏழு பேரின் விடுதலையை தமிழக அரசு முடிவு செய்து அதை ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்ப வேண்டும் என உச்ச நீதிமன்றம் மீண்டும் தெரிவித்திருந்தது.

இதனையடுத்து குறித்த ஏழு பேரையும் விடுவிக்க வேண்டும் என்று கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி தமிழக சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அது ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

எனினும், அதற்கும் இது வரையில் முடிவு கிடைத்ததாக இல்லை. இந்த நிலையில்தான் எதிர்வரும் 10 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக சிறையில் இருக்கும் 7 பேரையும் விடுவிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த விடயம் குறித்து சட்டத்தரணி புகழேந்தி இந்திய ஊடகம் ஒன்றிற்கு கருத்து தெரிவிக்கையில், "எதிர்வரும் 10 ஆம் திகதிக்குள் அவர்கள் அனைவரையும் விடுவிப்பார்கள் என்று முக்கியமான தகவல் நமக்கு கிடைத்துள்ளது.

இந்தத் தகவல் மத்தியிலிருந்து வந்த தகவல் என்று நம்மிடம் கூறியவர் இப்போதைக்கு இதற்கு மேல் எதுவும் கூற முடியாது.

மிக முக்கியமான நபரிடம் இருந்து வந்த தகவல் இது என்பதால் இதற்கு மேல் உள்ள தகவல்களைக் கூற இயலவில்லை. 7 பேரையும் விடுவிக்கக்கோரி மீண்டும் பெரிய அளவில் போராட்டம் நடத்துவதாக இருந்தோம்.

இந்நிலையில் மிக முக்கியமான நபரிடம் இருந்து 7 பேரும் எதிர்வரும் 10 ஆம் திகதி விடுவிக்கப்படுவார்கள் என்று கூறப்பட்டது. அதனால் போராட்டத்தை கைவிட்டுவிட்டோம்" எனத் தெரிவித்தார். (இ-7)

# புதிய வரவு- செலவுத் திட்டம் அபிவிருத்திக்கானது- சுஜீவ



(கொழும்பு)

புதிய வரவு-செலவுத் திட்டம் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டது என, அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

புதிய வரவு-செலவுத் திட்டம் குறித்து நாடாளுமன்ற வளாகத்தில் வைத்து நேற்றுக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதாக தெரிவித்த அமைச்சர் இதனை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

இதேவேளை, சுற்றுலாத்துறையிலும் பாரிய முன்னேற்றத்தை ஏற்படுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் அதற்கமைய எதிர்காலத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகையை 50 இலட்சமாக அதிகரிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (இ-7)

# வரவேண்டிய நேரத்தில் வருவேன்

## கோத்தபாய கூறுகிறார்

(கொழும்பு)

உரிய தருணத்தில் அரசியலில் நுழைவேன் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

உரியநேரம் வராத வரை நான் அரசியல் அரங்கில் காலடி எடுத்துவைக்க மாட்டேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தன்னால் மாற்றத்தை மேற்கொள்வதற்காக பணியாற்ற முடியும் எனக் குறிப்பிட்டுள்ள கோத்தபாய தற்போது வாய்ப்பேச்சில் வல்லவர்கள் மாத்திரமே அரசியலில் உள்ளனர். செயற்றிறன் மிக்கவர்கள் இல்லை எனவும் தெரிவித்தார்.



இலங்கையின் தற்போதைய பொருளாதார கொள்கைகளை மாற்றவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நாக்பூரில் விஜய் 'சர்கார்' இறுதி ஓவரில் 'மெர்சல்'

## ● இந்தியா திரில் வெற்றி ● பதறி வீழ்ந்தது அவுஸ்திரேலியா

பரபரப்பான நாக்பூர் ஒருநாள் போட்டியில் இந்திய அணி 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றி பெற்றது. கடைசி ஓவரை கட்டுக் கோப்பாக பந்துவீசி ரசிகர்களை மயக்கினார் (மெர்சல்) தமிழகத்தின் விஜய் ஷங்கர். அணித் தலைவர் ஹோலி, 40ஆவது சதம் கடந்து அசத்தினார்.

இந்தியா சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டியில் இந்தியா வென்றது. இரண்டாவது போட்டி நாக்பூரில் நேற்று நடந்தது. நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணித் தலைவர் பின்ச் பந்துவீச்சைத் தேர்வு செய்தார்.

இந்திய அணியில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை. அவுஸ்திரேலிய அணியில் பெஹ்ரன்டார்ப், ரேர்னருக்குப்பதில் ஷோன் மார்ஷ், லயன் இடம் பிடித்தனர்.

**ரோகித் அதிர்ச்சி**

இந்திய அணிக்கு ரோகித் சர்மா - தவான் ஜோடி மோசமான ஆரம்பம் கொடுத்தது. கம்மின்ஸ் வீசிய முதல் ஓவரின் கடைசி பந்தில் ரோகித் 'டக்' அவுட்டானார். மூன்று பவுண்டரி அடித்த தவான் 21 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின் இணைந்த அணித் தலைவர் ஹோலி, ராயுடு ஜோடி அணியை சரிவில் இருந்து மீட்க போராடியது. இந்நிலையில் லயன் 'சுழலில்' ராயுடு (18) ஆட்டமிழந்தார்.

**விஜய் விளாசல்**

தமிழகத்தின் விஜய் ஷங்கர் இம்முறை முன்னதாக களமிறங்கினார். வாய்ப்பை பயன்படுத்திக் கொண்ட இவர் வேகமாக ஓட்டங்கள் சேர்த்தார். ஸ்டாய்னிஸ் ஓவரில் பவுண்டரி, சிக்சர் விளாசினார். நான்காவது விக்கெட்டுக்கு 81 ஓட்டங்கள் சேர்த்த போது, விஜய் ஷங்கர் (46) துரதிர்ஷ்டவசமாக ரன் அவுட்டானார்.



40ஆவது சதம் அடித்து கெத்து காட்டிய இந்திய அணித் தலைவர் ஹோலி

**ஹோலி சதம்**

இந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்குள், ஷாம்பாவின் 33வது ஓவரில் கேதர் ஜாதவ் (11), தோனி (0) ஆட்டமிழக்க அணியின் ஓட்ட வேகம் குறைந்தது. ஒருபுறம் விக்கெட் சரிந்தாலும் மறுபக்கம் தனி ஒருவனாக போராடினார் ஹோலி. கூல்டர் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய ஹோலி, ஒரு நாள் அரங்கில் 40ஆவது சதம் எட்டினார்.

ஜடேஜா (21) நீடிக்கவில்லை. ஹோலி 116 ஓட்டங்களில் (120 பந்து, 10 பவுண்டரி) ஆட்டமிழந்தார். குல்தீப் (3), பும்ரா (0) கிளம்ப, இந்திய அணி 48.2 ஓவரில் 250 ஓட்டங்களுக்கு ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. அவுஸ்திரேலியா சார்பில் அதிகபட்சமாக கம்மின்ஸ் 4 விக்கெட்டுக் களை வீழ்த்தினார்.

**நல்ல ஆரம்பம்**

அவுஸ்திரேலிய அணிக்கு பின்ச், கவாஜா ஜோடி சற்று நல்ல ஆரம்பம் கொடுத்தது. முதல் விக்கெட்டுக்காக 83 ஓட்டங்கள் சேர்த்தபோது பின்ச் (37) ஆட்டமிழந்தார். கவாஜா 38 ஓட்டங்கள் எடுக்க, ஷோன் மார்ஷ் (16) ஏமாற்றினார். வழக்கத்துக்கு மாறாக தடுமாறிய மக்ஸ்வெல் (4) குல்தீப் 'சுழலில்' போல்டானார்.

**சபாஷ் பும்ரா**

வேகமாக ஓட்டங்கள் சேர்த்து இந்தியாவுக்கு நெருக்கடி கொடுத்த ஹேண்ட்ஸ்கோம்ப் (48), ஜடேஜாவின் துல்லிய 'த்ரோ' காரணமாக ரன் அவுட்டானார். கரே (22) போல்டானார். பும்ரா வீசிய 46வது ஓவரில் கூல்டர் நைல் (4), கம்மின்ஸ் (0) போல்டாகினர். ஸ்ரொய்னிஸ் அரைசதம் அடித்தார்.

**ஹீரோ விஜய்**

அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு கடைசி ஓவரில் 11 ஓட்டங்கள் தேவைப்பட்டன. இந்த ஓவரில் அவுஸ்திரேலியாவை மயக்கினார் விஜய் ஷங்கர். முதல் பந்தில் ஸ்ரொய்னிஸை (52) அவுட்டாக்கினார். 2ஆவது பந்தில் 2 ஓட்டங்கள் எடுத்த ஜாம்பாவை 3வது பந்தில் போல்டாக்கி, நாக்பூரில் தனது அரசாங்கத்தை நிலைநாட்டினார்.

அவுஸ்திரேலிய அணி 49.3 ஓவரில் 242 ஓட்டங்களுக்கு சுருண்டது. இந்திய அணி 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றி பெற்றது.

பந்துவீச்சில் இந்தியா சார்பில் குல்தீப் 3, விஜய் ஷங்கர் 2, பும்ரா 2 விக்கெட் வீழ்த்தினார். ஒருநாள் தொடரில் இந்தியா 2-0 என முன்னிலை பெற்றது.

**அதிவேக 9 ஆயிரம்**

சர்வதேச அரங்கில் அணித் தலைவராக 9 ஆயிரம் ஓட்டங்களை எட்டினார் ஹோலி. இதன்மூலம், இந்த இலக்கை அதிவேகமாக எட்டிய (159 இன்னிங்ஸ்) முதல் அணித் தலைவர் என்ற பெருமை பெற்றார். இதற்கு முன், அவுஸ்திரேலியாவின் பொன்ரிங் 204 இன்னிங்சில் எட்டி இருந்தார். ஒட்டுமொத்தமாக, இந்த இலக்கை எட்டிய 6ஆவது வீரர் ஆனார்.

**ஜடேஜா '2000'**

இப்போட்டியில் 10 ஓட்டங்கள் எடுத்த போது, இந்தியாவின் ஜடேஜா ஒரு நாள் அரங்கில் 2 ஆயிரம் ஓட்டங்களை எட்டினார். ஏற்கெனவே 171 விக்கெட் வீழ்த்தி இருந்தார். இதன்மூலம், ஒரு நாள் போட்டியில் 2 ஆயிரம் ஓட்டங்கள், 150 விக்கெட்டுக்கள் என்ற இலக்கை எட்டிய 3ஆவது இந் தியரானார். முதலிரண்டு இடங் களில் முறையே கபில், சச்சின் உள்ளனர்.

**முதல் முறை**

ஒரு நாள் அரங்கில் இந்திய வீரர் ரோகித் சர்மா 13வது முறையாக 'டக் அவுட்' ஆனார். ஆனால், சொந்த மண்ணில் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்ட மிழந்தது இதுதான் முதல் முறை.

**வெறுப்பேற்றிய ராயுடு**

லயன் பந்தில் ராயுடுவுக்கு (18 ஓட்.,) எல்.பி.டபிள்யு., முறையில் ஆட்டமிழப்பு வழங்கினார். அம்பயர் நிடின் மேனன். இதற்காக, 'ரிவியூ' கேட்டார் ராயுடு. 'ரீப்ளேயில்' பந்து 'மிடில் ஸ்டம்ப்பை' தகர்ப்பது துல்லியமாக தெரிந்தது. ராயுடுவின் அவசர எண்ணத்தால் இந்தியாவின் 'ரிவியூ' வாய்ப்பு பறிபோனது.

**5**

ஒரு நாள் அரங்கில் இந்தியாவின் தோனி 5வது முறையாக கோல்டன் டக் அவுட்டானார் (முதல் பந்தில் அவுட்). இதற்கு முன், சிட்டகொங் ( எதிர் பங்களாதேஷ், 2004, அறிமுகம்), அகமதாபாத் (எதிர் இலங்கை, 2005), போர்ட் ஒப் ஸ்பெயின் (எதிர் இலங்கை, 2007), விசாகப்பட்டனம் (எதிர் ஆஸி., 2010) மைதானங்களில் இப்படி ஆட்டமிழந்திருந்தார்.

**2**

ஹோலி சதம் விளாசி, இவரது தலைமையில் அணி குறைந்த ஓட்ட எண்ணிக்கை (250) எடுத்த போட்டிகளின் வரிசையில் இது 2வது இடம் பிடித்தது. முதலிடத்தில் புனே போட்டியில் 240 ஓட்டங்கள் எடுக்கப்பட்ட (எதிர் மே.தீவுகள், 2018) புனே போட்டி உள்ளது.

**7**

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக ஒரு நாள் போட்டியில் அதிக சதம் அடித்த இந்திய வீரர்கள் பட்டியலில் ஹோலி 2வது இடத்தை ரோகித்துடன் பகிர்ந்து கொண்டார்.

இருவரும் 7 சதம் விளாசி உள்ளனர். முதலிடத்தை ஜாம்பவான் சச்சின் (9) வகிக்கிறார்.

**நீடிக்கும் '2'**

ஒரு நாள் போட்டியில் அதிக சதம் (40) அடித்த வீரர்கள் பட்டியலில் கோஹ்லி 2வது இடத்தில் நீடிக்கிறார். மூன்றாவது இடத்தில் அவுஸ்திரேலிய முன்னாள் வீரர் பொன்ரிங் (30) உள்ளார். முதலிடத்தை ஜாம்பவான் சச்சின் (49) வகிக்கிறார்.

**3**

ஆசிய மண்ணில் சர்வதேச போட்டிகளில் அதிக சதம் (40) அடித்தவர்கள் பட்டியலில் அணித் தலைவர் ஹோலி, இலங்கையின் ஜெயவர்த்தனவை (39) முந்தி 3வது இடத்திற்கு முன்னேறினார்.

முதலிரண்டு இடங்களில் முறையே ஜாம்பவான் சச்சின் (71), இலங்கையின் சங்கக்கார (45) உள் ளனர்.

# தாஹிர் ஓய்வு எப்போது?



"உலக கிண்ணத் தொடருக்கு பின், ஒருநாள் போட்டியில் இருந்து ஓய்வு பெறப் போவதாக," தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர் இம்ரான் தாகிர் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்க சுழற்பந்துவீச்சாளர் இம்ரான் தாகிர் (வயது-39). இதுவரை 20 டெஸ்ட் (57 விக் கெட்), 95 ஒருநாள் (156), 37 சர்வதேச 'ரி20' (62) போட்டிகளில் விளையாடி உள்ளார்.

சமீபத்தில் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை வெளியிட்ட 2019-20ஆம் ஆண்டுக்கான வீரர்கள் ஒப்பந்தப் பட்டியலில் இவரது பெயர் இடம் பெறவில்லை. இருப்பினும் பரஸ் பர புரிந்துணர்வு காரணமாக 2018-19ம் ஆண்டு இவரது ஒப்பந்தத்தை வரும் ஜூலை மாதம் வரை நீட்டித்துள்ளது.

இந்நிலையில் இவர், இங்கிலாந்தில் நடக்கவுள்ள உலக கிண்ண (மே 30 - ஜூலை 14) தொடருக்கு பின், ஒருநாள் போட்டியில் இருந்து ஓய்வு பெறப் போவதாக தெரிவித்துள்ளார். கடந்த 2011, 2015ல் நடந்த உலக கிண்ணத் தொடரில் (50வது ஓவர்) பங்கேற்ற இவர், 2014, 2016ல் நடந்த 'ரி20' உலக கிண்ண தொடரிலும் விளையாடி உள்ளார்.

இதுகுறித்து இம்ரான் தாகிர் கூறுகையில், "இங்கிலாந்தில் நடக்கவுள்ள உலக கிண்ணத் தொடரில் விளையாட விரும்பினேன். இதற்கு அனுமதி வழங்கிய தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை எனது ஒப்பந்தத்தை நீட்டித்தது.

தென்னாபிரிக்காவுக்காக நீண்ட நாள் விளையாட விரும்பம். ஆனால் என்றாவது ஒரு நாள் கடினமான முடிவை எடுத்தாக வேண்டும்.

எனவே உலக கிண்ணத் தொடருக்குப் பின் ஒருநாள் போட்டியில் இருந்து ஓய்வு பெற உள்ளேன். தொடர்ந்து 'ரி20' போட்டிகளில் பங்கேற்பேன்," என்றார்.


11ம் ஆண்டு நினைவு நாள்



மாமனிதர்
கிட்டினன் சிவநேசன்

முந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)
முந்நாள் பொது முகாமையாளர்
(வட மாகாண பனை தென்னை வள கூட்டுறவு நிறுவன பேரிணையம்)

தாயின் மடியில் 21-01-1957
தாயக மண்ணில் 06-03-2008

கருணையின் திருவுருவே
கடமையே கண்ணாயிருந்து
காவியம் படைத்தவரே
தேசத்தை நேசித்தவரே – உங்கள்
பாசப் பிணைப்பு என்றென்றும்
எம்மிலிருந்து அகலாது!

இந்நாளில் அன்னாருடன் சாவடைந்த சாரதி பெரியண்ணன் மகேஸ்வரராசா அவர்களையும் நினைவுகூருகிறோம்.

தகவல்: குடும்பத்தினர்
யார்க்கரு, கரவெட்டி, கிழக்கு, கரவெட்டி.

(C-5701)

# ஐ.தே.கவின் வரவு-செலவுத்திட்டம் மக்களை ஏமாற்றும் செயற்பாடு

## மகிந்த விசனம்

(பாணந்துறை)

2019ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டம் மக்களுக்கு சலுகைகளை வழங்குவதாக கூறி அவர்களை ஏமாற்றுவதாகவே இருக்குமென எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாணந்துறையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியால் தயாரிக்கப்பட்டுள்ள இந்த வரவு- செலவுத்திட்டம் எதிர்வரும் தேர்தலை நோக்காகக் கொண்டு அமைக்கப்பட்டிருக்குமென மகிந்த ராஜபக்ஷ சந்தேகம் வெளியிட்டுள்ளார்.




அந்தவகையில் இவ்வரவு- செலவுத் திட்டத்தில் மக்கள் நலன்களைப் பெற்றுக் கொள்வார்களென்பது வெறும் நம்பிக்கையே எனவும் மகிந்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் தேர்தல்களை இலக்கு வைத்து, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாளை மறுதினம் 8ஆம் திகதி, கண்டியில் பாரிய பேரணி ஒன்றை நடத்தவுள்ளது.

இக்கூட்டத்தில் எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, பொதுஜன பெரமுனவின் நிறுவுநரான பசில் ராஜபக்ஷ ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, அரசியல் அரங்கில் அறிமுகமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 13ஆம் ஆண்டு நினைவலைகள் 8ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்.செல்லையா வீரசிங்கம்



அமரர் திருமதி .இராசமணி வீரசிங்கம்

திதி: அமாவாசை 06.03.2019

ஆண்டுகள் கோடி ஓடி மறையும் அழிந்திடுமோ உம் நினைவலைகள்
நாம் வாழ்ந்திடும் காலம் முழுவதும் எம் நெஞ்சினில் நிலையாய் வாழ்வீர்
மாண்டவர் மீண்டிலர் என்பது உண்மை உம் காலடிகளை தொழுதே வாழ்கிறோம்.

(C-5687)

இல. 14, சிறிவெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுகளுடன்
மகன் சிறிதரன்

## இராசி பலன்

**மீனம்:** தூர தேசத்திலிருந்து வரும் செய்திகள் ஆச்சரியப்படவைக்கும், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மேடம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் வகையில் தகவல்கள் வந்து சேரலாம்.

**இடபம்:** தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, புதிய முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, குல தெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர்.

**கும்பம்:** உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை அதிகரிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| | செவ் | | ராகு |
| சூரி, சந், புத | கிரகநிலை | | |
| சுக் | | | |
| கேது, சனி | குரு. | | |

சந்திராஷ்டமம்
ஆயில்யம், மகம்

**06.03.2019**
மாசி 22, புதன்கிழமை
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
அமாவாசை முன்னிரவு10.02மணிவரை
சதயம் முன்னிரவு 6.40 மணிவரை
சுபநேரம் 4.55 - 6.25 மணிவரை
இராகுகாலம் 12.26 - 1.55 மணிவரை
அமாவாசை விரதம்,
தவக்காலம் ஆரம்பம்
விபூதிப்புதன்
வளவன்

**கடகம்:** உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், குடும்பத்தினரிடையே சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மகரம்:** நண்பர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**சிம்மம்:** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.

**தனுசு:** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்:** சுப செய்திகள் வந்து சேரலாம், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பாராட்டும் புகழும் கூடும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்:** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறலாம், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கன்னி:** செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், உடல் நலனில் முன்னேற்றமுண்டு, குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், பகைவர்கள் விலகுவர்.



யாழ்ப்பாணம் - நல்லூர் சட்டநாதர் கோவிலில் மஹா சிவராத்திரி வழிபாடுகள் இடம்பெற்றன. இதில் சிறப்பு அபிசேக ஆராதனைகளுடன் பஜனை வழிபாடுகளும் இடம்பெற்றன. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# ஆலயத்திற்கு அருகில் மயானம்; அதிருப்தியில் வடமராட்சி மக்கள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கின் எல்லைப் புறத்தில் தாளையடி புதுக்காடு வீதிக்கு அருகாமையில் கல்லடி வைரவர் ஆலயத்திற்கு அண்மையாக பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினால் சுடுகாடும் அதற்கான எரி கொட்டகையும் அமைக்கப்பட்டுள்ளது.

இச் சுடலை அமைந்தது தொடர்பாக வடமராட்சிக் கிழக்கு மக்களும் புத்திஜீவிகளும் கடும் எதிர்ப்பினையும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவது, வடமராட்சி கிழக்கு மக்கள் தமது பிரதேசத்தை விட்டு வேறு இடங்களுக்கு வெளியேறும் பிரதான பாதை இதுவாகவே இருக்கின்றது.

வடமராட்சி கிழக்கிற்கு வருபவர்களை வரவேற்கும் இடமாகவும் இச் சுடலை அமையப் பெற்றுள்ளது. சுடலைக்கு மிக அண்மையாக பிரசித்தி பெற்ற இந்து ஆலயமாகிய கல்லடி வைரவர் ஆலயமும்காணப்படுகின்றது.


இப்போது சுடலை அமைக்கப்பட்ட இடத்திற்கு அண்மையாக பல ஒதுக்குப் புறமான இடங்கள் காணப்படுகின்ற போதும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினர் வடமராட்சி கிழக்கு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காது அவ் இடத்தில் சுடலையினை அமைத்தது அவர்களை மேலும் விசனத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

வடமராட்சி கிழக்கு மக்கள் சமய சடங்கு சம்பிரதாயங்களை கடைப்பிடிக்கும் மக்களாக காணப்படுகின்றனர்.

காலையில் எழுந்து இவ் வீதியூடாக அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வேலைக்கு செல்வோர் மற்றும் ஏனைய பல நன்மையான காரியங்களுக்கு செல்லும் பல மக்கள் சுடலையில் விழித்தே செல்லவேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

எனவே சுடலை அமையப் பெற்ற இடம் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் எல்லைப் புற பிரதேசம் என்றால் கூட அப்பாதையினை பயன்படுத்துபவர்கள் வடமராட்சி கிழக்கு மக்கள் என்பதனால் அந்த இடத்தில் உள்ள சுடலையினை அகற்றவோ அல்லது அதனைச்சுற்றி பெரிய அளவில் உயரமான மதில் அமைக்கவோ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென வடமராட்சி கிழக்கு மக்களும் புத்திஜீவிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-64)

# தெரு மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன



(வரணி)

சாவகச்சேரி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட வரணி சந்தையடிப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை பிரதேச சபையினரால் தெரு மின் விளக்குகள் பொருத்தப்பட்டன.

இவ்விடயம் தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளர் கந்தையா வாமதேவனிடம் சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

அதுமட்டுமன்றி வலம்புரி பத்திரிகையிலும் அடிக்கடி இச் செய்தி வெளிவந்தது.

இதனைத் தொடர்ந்து தவிசாளரின் பணிப்புரைக்கு அமைய பொருத்தப்பட்டுள்ளன. இதனால் இப்பகுதி வெளிச்சம் பெற்றுள்ளது.

மக்களின் கோரிக்கையை நிறைவேற்றிய தவிசாளருக்கு பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள், சமூக ஆர்வலர்கள் மனதார நன்றியைத் தெரிவித்துள்ளனர்.

மேலும் அன்றைய தினம் முதலாம் வட்டாரத்தில் உள்ள கிராமங்களுக்கும் தெரு மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-103)



தூண்டி இலக்கிய வட்டம் நடத்திய தேவகாந்தனின் எழுத்துலகம் ஒரு பன்முகப்பார்வை நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.நூலக கேட்போர் கூடத்தில் க.சட்டநாதன் தலைமையில் நடைபெற்றது.

# சர்வதேச மகளிர் தினம்

வடக்கு மாகாண மகளிர் விவகார சமூக சேவைகள், சிறு கைத்தொழில் மற்றும் கூட்டுறவு அமைச்சினால் சர்வதேச மகளிர் தினம் 2019 மார்ச் 8 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறுகதை நாவலாசிரியர் திருமதி கோகிலா மகேந்திரன், சிறப்பு விருந்தினராக வைத்திய கலாநிதி ஜெயதேவி கணேசமூர்த்தி, கௌரவ விருந்தினராக திருமதி சுவர்ணா நவரட்ணம் ஆகியோர் பங்குபற்றவிருப்பதுடன் இந் நிகழ்வானது மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இச் சர்வதேச மகளிர் தின நிகழ்வின் போது மகளிர் மத்தியில் சமத்துவ சிந்தனையையும் சுறுசுறுப்பையும் மற்றும் சமூக மாற்றத்திற்கான பல்வேறு துறைகளிலும் புதிய வடிவங்களை முன்னெடுத்து செல்கின்ற வடமாகாணத்தைச் சேர்ந்த பத்து சாதனைப் பெண்களுக்கு "உத்வேகமூட்டக்கூடிய பெண்கள் விருது" (Inspirational Women Award) வழங்கப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளது.

வட மாகாணத்தில் சிறிய நடுத்தர கைத்தொழில் முயற்சியில் ஈடுபடும் சிறந்த பெண் தொழில் முயற்சியாளர்களில் சமூகமட்ட மற்றும் தனிநபர்கள் இடையேயான தெரிவில் சாதனையாளர்களாக திகழும் பெண்கள் கௌரவிக்கப்பட்டு சான்றிதழ்களும் கேடயங்களும் வழங்கப்படவுள்ளன.

இம் மகளிர் தின நிகழ்விற்காக நடத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையேயான கவிதை, கட்டுரை மற்றும் சித்திரப் போட்டிகளில் பங்குபற்றி முன்னணி வகித்த மாணவ மாணவிகளுக்கும் பரிசில்களும் கேடயங்களும் வழங்கப்படவுள்ளன என மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார். (5)

# ஆளுநரின் பொதுமக்கள் தினம்

(யாழ்ப்பாணம்)

ஆளுநரின் பொதுமக்கள் தினம் கைதடியில் அமைந்துள்ள முதலமைச்சர் அமைச்சு செயலகத்தில் இன்று 6 ஆம் திகதி புதன்கிழமை ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வு வடமாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-7)




# வழக்காடு மன்றம் இன்று

(யாழ்ப்பாணம்)

கோயிற்கடவை சித்தி விநாயகர் ஆலயத்தில் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் வழங்கும் வழக்காடு மன்றம் இன்று 6 ஆம்திகதி இரவு 10.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

குற்றவாளிக் கூண்டில் இன்றைய இளைஞர்கள் என்ற தலைப்பில் தமிழ்ச் சங்கத்தின் பொருளாளர் பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சட்டத்தரணி ஜே. ரஞ்சித்குமார் ,அ.பௌநந்தி, இ.சர்வேஸ்வரா , ந.ஐங்கரன் ஆகியோர் பங்குபற்ற உள்ளனர். (5)

# திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் இன்று

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டு தோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை சித்திரிக்கும் திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்ப நாளாகிய இன்று 6 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் இல.17, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் 'கலைஞான சுரபி தியான' இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.கொழும்புத்துறை அமலமரித்தியாகிகளின் டி மசெனற் இறையியலக அதிபர் அருள்பணி சூ.டேமியன் அடிகள் கலந்து கொண்டு இவ் ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள நடிகர்கள் உட்பட ஏனைய துறைசார்ந்த பிரிவுகளுக்கான பிரதிகளை வழங்கவுள்ளார்.

பிரதி வழங்கும் வைபவத்தில் வழமையாக திருப்பாடுகளின் நாடகத்தில் பங்கேற்கின்ற அனைத்துக் கலைஞர்களையும் இம்முறை புதிதாக இணைந்து பங்குபற்ற விருப்பமுடையவர்களையும் கலந்து கொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

திருப்பாடுகளின் நாடகம் ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை பிற்பகல் 6.45 மணியளவில் 'அன்பில் மலர்ந்த அமர காவியம்' என்னும் பெயரில் யாழ். திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்பட வுள்ளது.

'அன்பில் மலர்ந்த அமர காவியம்' திருப்பாடுகளின் நாடகம் இறுதியாக 2015 ஆம் ஆண்டு மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5-7)



யாழ்.கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா கடந்த வெள்ளிக்கிழமை அதிபர் வி.இ.ஹஸ்ரன் றோய் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா, கலந்து கொண்டார்.

# யாழ்ப்பாணக் கம்பன் விழா

உயர் கம்பனின் புகழ் பாடி நமது தமிழ்மொழி, கலை, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை வளர்க்கும் முயற்சியில் அகில இலங்கைக் கம்பன் கழகம் கடந்த 39 ஆண்டுகளாக ஈடுபட்டு வருகிறது. ஆண்டுதோறும் கம்பனின் பெயரால் இயல், இசை, நாட்டிய விழாக்களை எமது கழகம் நடத்தி வருவதை அனைவரும் அறிவர்.

தற்போது கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலுமாக அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் முயற்சிகள் சிறப்புடன் நடைபெற்று வருகின்றன. கம்பன் கழகத்தின் கம்பன் விழாக்களின் வரிசையில் 2019 ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாணக் கம்பன்விழா இம்மாதம் 15,16, 17 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளது. இவ்விழாவின் காலை நிகழ்ச்சிகள் நல்லூர் கம்பன் கோட்ட மண்டபத்திலும் மாலை நிகழ்ச்சிகள் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்திலும் நடைபெறவுள்ளன.

இவ்வாண்டுக் கம்பன் விழாவின் முதலாம் நாளான எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு, நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணி மண்டபத்தில் தட்சணாமூர்த்தி உதயசங்கர் குழுவினரின் மங்கல இசையுடன் விழா நிகழ்ச்சிகள் இனிதே ஆரம்பிக்கவுள்ளன.

சமயத் தலைவர்களான நல்லை ஆதீனத்தின் முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும், பாதுகாவலன் இதழ்ஆசிரியர்அருட்திரு எயின்சிலி றொசான் அடிகளார், முஸிதின் ஜும்மா பள்ளிவாசல்இமாம்மௌலவி எம். றழீம் ஆகியோர் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பிக்கவுள்ளனர்.

யாழ். மேன்முறையீட்டு நீதிமன்ற முன்னாள் நீதியரசரும் கொழும்புக் கம்பன் கழகப் பெருந்தலைவருமான ஜெ. விஸ்வ நாதன் தலைமையில் விழாவின் முதல்நாள் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வில் வட மாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ. கே. சிவஞானம் தொடக்கவுரையை ஆற்றவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டு சினிமா இயக்குநரும் இலக்கியச் சொற்பொழிவாளருமான பாரதி கிருஸ்ணகுமாரின் சிறப்புரை "முதல் நூலும் முதன்மை நூலும்" எனும்தலைப்பில் இடம்பெறவுள்ளது. நிறைவாக பொன்னாலை சந்திரபரத கலாலய அதிபர் ஸ்ரீமதி ஸ்ரீதேவி கண்ணதாசனின் மாணவிகளின் "தமிழ் அமுதம்" எனும் நாட்டிய நிகழ்ச்சி அரங்கேறவுள்ளது.

### விழாவில் கலந்து கொள்ளும் தமிழ்நாட்டு அறிஞர்கள்

புகழ்பெற்ற பேச்சாளர்களான சினிமா இயக்குநர் பாரதி கிருஸ்ணகுமார், பேராசிரியர் இராம சௌந்தரவள்ளி, கலாநிதி இரா. மாது ஆகிய அறிஞர்கள் இவ்வாண்டுக் கம்பன் விழாவில் கலந்து கொள்வதற்காய் தமிழ் நாட்டிலிருந்து வருகை தரவுள்ளனர்.

### விழாவில் கலந்துகொள்ளும் நம்நாட்டு பிரமுகர்கள்

தேசிய ஒருமைப்பாட்டு, அரசகரும மொழிகள் சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய கலாசார அமைச்சர் மனோ கணேசன், வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், வடமாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வி.கே சிவஞானம், யாழ்.மாநகர முதல்வர் இமானுவேல் ஆனல்ட், இந்தியத் துணைத்தூதுவர் எஸ். பாலச்சந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன், வடகிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் ஏ. வரதராஜப்பெருமாள், வடமாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா, வடமாகாண சபையின் முன்னாள் அமைச்சர் ப. சத்தியலிங்கம், வடகிழக்கு மாகாண கலை, பண்பாட்டு அலுவலக அமைச்சு முன்னாள் செயலர் சுந்தரம் டிவகலாலா, தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் அதிவண. எஸ். ஜெபநேசன் ஆகிய நம்நாட்டுப் பிரமுகர்களும் இவ்வாண்டு விழாவில் கலந்து கொள்ளவுள்ளனர்.

### கம்பன் விழா நிகழ்ச்சிகள்

இவ்வாண்டுக் கம்பன் விழாவில் எழிலுரை, நாட்டியவேள்வி, இலக்கியப் பேருரை, உரையரங்கம், பட்டிமண்டபம், கவியரங்கம், கருத்தரங்கம், விவாத அரங்கு, வழக்காடு மன்றம் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

### விழாவில் கலந்துகொள்ளும் நம்நாட்டு அறிஞர்கள்

இவ்வாண்டு விழா நிகழ்ச்சிகளில் கம்பவாரிதி இ.ஜெயராஜ், கலாநிதி ஆறு திருமுருகன், கவிஞர் சோ. பத்மநாதன், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, பேராசிரியர் தி. வேல்நம்பி, செஞ்சொற் செல்வர் இரா. செல்வவடிவேல், வலம்புரி ந. விஜயசுந்தரம், கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன், கவிஞர் ஜின்னா ஷெரிபுதீன், கவிஞர் ச.முகுந்தன், கவிஞர் நாக. சிவசிதம்பரம், கவிஞர் சிதம்பரப்பிள்ளை சிவகுமார், ந. ஐங்கரன், விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா, த. நாகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

### மங்கல இசை

விழாவின் மாலை நிகழ்ச்சிகளில் தினமும் மாலை 4.30 மணி முதல் நம் நாட்டின் பிரபல மங்கல இசைக் கலைஞர்களின் நாதஸ்வரக் கச்சேரிகளும் நடைபெறவுள்ளன. முதலாம் நாளில் த. உதயசங்கர் குழுவினரதும், இரண்டாம் நாளில் வி. கே. பஞ்சமூர்த்தி குழுவினரதும், மூன்றாம் நாளில் பி. ரஜீபன் குழுவினரதும் மங்கல இசைக் கச்சேரிகள் நடைபெறவுள்ளன.

### புத்தக, சி.டி விற்பனை

விழா நாட்களில் மண்டப வாயிலில் கம்பன் கழகத்தால் இதுவரை வெளியிடப்பட்ட நூல்களும் இறுவெட்டுக்களும் கம்பவாரிதி இ.ஜெயராஜின் சொற் பொழிவுகளின் இறுவெட்டுக்களும் இதுவரை நடைபெற்ற கம்பன் விழாக்களின் இறுவெட்டுக்களும் விற்பனைக்காக வைக்கப்படும்.

### ரசிகர்களுக்கு வேண்டுகோள்

கம்பன் விழா நிகழ்ச்சிகள் அனைத்தும் நேர ஒழுங்கின்படி நடத்தப்படவுள்ளதால் ரசிகர்கள் குறித்த நேரத்தில் வருகைதந்து விழாவைச்சிறப்பிக்கவேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். காலை நிகழ்ச்சிகள் நல்லூர் கம்பன் கோட்ட மேல் மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் ஒரு மணிவரையும், மாலை நிகழ்ச்சிகள் ஸ்ரீதுர்க்கா மணி மண்டபத்தில் மாலை 4.30 மணி முதல் இரவு 9 மணிவரையும் நடை பெறவுள்ளன.

கழக முகவரிப் பட்டியலில் பதிவு செய்யப்பட் டோருக்கு அழைப்பிதழ்கள் நேரடியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மற்றைய தமிழ் ரசிகர்களுக்கு ஊடகங்கள் மூலம் விழாவிற்கான அழைப்பினை கம்பன்கழகம் மனமகிழ்வுடன் விடுக்கிறது.(5)

## தன்னை விடுதலை செய்யக்கோரி

# திருச்சி சிறப்பு முகாமில் ஈழத்தமிழன் உண்ணாவிரதம்

(திருச்சி)

தன்னை விடுதலை செய்யக்கோரி இலங்கைத் தமிழர் ஒருவர் திருச்சி சிறப்பு முகாமில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

கடந்த 2016 ஆம்ஆண்டு சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயன்றதாக, பொள்ளாச்சியில் வைத்து நிமலன் என்னும் இலங்கைத் தமிழர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட அவர் திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் பொய் வழக்கில் கைது செய்து, அதற்குரிய தண்டனையை அனுபவித்துவிட்ட நிலையில், தன்னை விடுவிக்கக் கோரி நிமலன் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

இதேவேளை அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தியும் நிமலன் உண்ணா விரதத்தைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார். (இ-7)

# கோணேஸ்வரருக்கு பிரமாண்ட சிலை



(திருகோணமலை)

திருகோணமலையில் புனருத்தாரணம் செய்யப்பட்ட திருக்கோணேஸ்வர பெருமானின் திருவுருவச் சிலை நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப் பினர்களான கே. துரை ரட்ணசிங்கம், சுசந்த புஞ்சி நிலமே, தமிழரசுக் கட்சி யின் திருகோண மலை மாவட்ட தலை வர் குகதாசன் ஆகியோர் இத் திருவு ருவ சிலையைத் திறந்து வைத்துள்ளனர்.

குறித்த நிகழ்வில் ஆலய நிர்வாக சபையினர், தொண் டர் சபையினர், திருமலை மாவட்ட கடற்படைத் தளபதி மற்றும் சைவ அடியார்கள் எனப்பலரும் கலந்து கொண் டிருந்தனர். (இ-7)

# அரசியல் வியாபாரிகளை வீட்டுக்குத் திருப்பி அனுப்பக் கூடியதான அரசியல் யாப்பே தேவை

## விக்டர் ஐவன்

(கிண்ணியா)

அரசியல் தலைவர்களைப் பாதுகாக்கும் அரசியல் யாப்பு இந்த நாட்டுக்குத் தேவையில்லை, நாட்டு மக்களைப் பாதுகாக்கின்ற அரசியல் யாப்பே இந்தத் தேசத்துக்குத் தேவை. மக்களுக்கு தேவையான அரசியல்யாப்பை மக்களே உருவாக்க வேண்டும் என்று சிரேஷ்ட ஊடகவியலாளர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

தேசத்தைக் கட்டியெழுப்புவோம் என்ற தொனிப் பொருளில் மறுமலர்ச்சி இயக்கமும் ஆய்வுக்கும் கலந்துரையாடலுக்குமான நிலையமும் இணைந்து கிண்ணியாவில் நடத்திய சமூக ஆர்வலர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நாட்டை எல்லோரும் சேர்ந்து பாதுகாக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. 18ஆவது திருத்தமோ 19ஆவது திருத்தமோ அரசியல்வாதிகள் வர்த்தகம் செய்யக் கூடாது என்று கூறவில்லை. இப்போது ஜே.வி.பி. கொண்டு வந்திருக்கின்ற 20ஆவது திருத்தில் கூட அரசியல் வாதிகள் வியாபாரம் செய்யக் கூடாது என்று ஏன் கூறவில்லை என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

1977ஆம் ஆண்டுக்குப் பிறகு அரச சொத்துக்களைக் கொள்ளையிடுவதென்பது அரசியல்வாதிகளின் இலட்சியமாக மாறிவருகின்றது. இன்று அரச காணிகளை எடுத்து அரசாங்கத்துடன் வர்த்தகம் செய்து தொழில் அதிபராக மாறிய பாராளுமன்ற உறுப்பினர்களையே இலங்கை அரசியலில் காணக் கூடியதாகவுள்ளது.

மக்களின் பிரதிநிதிகளாக இருந்துகொண்டு வியாபாரம் செய்கின்ற அரசியல் வாதிகளை, பாராளுமன்றத்தில் இருந்து வீட்டுக்குத் திருப்பி அனுப்பக்கூடியதான அரசியல் யாப்பு தற்போது தேவையாக இருக்கின்றது என்றும் விக்டர் ஐவன் மேலும் தெரிவித்தார். (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி 1செவ் 8இல்<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில்:O/L, அரச அலுவலக உதவியாளர்<br>எதிர்பார்ப்பு:O/L,அரசதொழில்<br>தொ.இ: B/9401 | பிறப்பு: 1971 இந்து,கிறிஸ்தவம் (கலப்பு)<br>நட்சத்திரம்: பூரம் 2செவ் 1 இல்<br>தகைமை/தொழில்:A/L, கூட்டுறவு கணக்காளர்<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம், சொந்ததொழில் (கடை,சாரதி)<br>தொ.இ: G/9403 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்:விசாகம் 2<br>கி.பா:33 1/2செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:B.Sc , M.Sc, Structural & Design Engineer<br>எதிர்பார்ப்பு:Engineer,Doctor, IT Field Degree (Computer Science)<br>தொ.இ: B/9405 | பிறப்பு: 1973 இந்து,கிறிஸ்தவம்(கலப்பு)<br>நட்சத்திரம்: மூலம் 1கி.பா: 20<br>தகைமை/தொழில்:B.Com, MBA,HNDAஅரசஅபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரசதனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/9404 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L, France<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு PR<br>தொ.இ: B/9406 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:B.Sc , Software Quanlity Engineer<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி,வெளிநாடு, சைவபோசணம்<br>தொ.இ: G/9409 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:உத்தரம் 4<br>கி.பா: 15 1/4<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:B.Sc, Software Engineer, Singapore<br>எதிர்பார்ப்பு: படித்தபெண்(A/L) , தொழில் (ஆசிரியர்) விரும்பதக்கது<br>தொ.இ: B/9407 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்:ரேவதி<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/9415 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.





மஹா சிவராத்திரி நிகழ்வானது நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு மன்னாரில் பாடல் பெற்ற தலமான திருக்கேதீஸ்வரத்தில் சிறப்பாக இடம் பெற்றது. இலங்கையின் வடக்கு,கிழக்கு மற்றும் தென் பகுதிகளில் இருந்து மக்கள் வருகை தந்ததோடு புலம்பெயர் நாடுகளில் இருந்தும் விசேடமாக பக்தர்கள் வருகை தந்திருந்தனர். காலை தொடக்கம் பல்வேறு பட்ட சமய நிகழ்வுகள்,பூஜைகள் இடம் பெற்றதுடன் பல்வேறு சொற்பொழிவுகள் இடம் பெற்றன. (படங்கள்:-மன்னார் செய்தியாளர்)

# கண்ணகிபுரம் வாய்க்கால் பகுதியில் வெடிபொருட்கள் நேற்று மீட்பு




(பரந்தன்)

கிளிநொச்சி கண்ணகிபுரம் பகுதியில் வெடிபொருட்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன. குறித்த பகுதியில் வெடிபொருட்கள் இருப்பதாக தெரிவித்து பொலிஸார் தேடுதலிற்காக கிளிநாச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றிடம் அனுமதி கோரியிருந்தனர்.

அதற்கமைய குறித்த பகுதியில் தேடுதல் மேற்கொள்ளப்பட்டு வெடி பொருட்கள் சில மீட்கப்பட்டுள்ளன. குறித்த இடத்தில் வெடிபொருட்கள் இருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலிற்கமைய பொலிஸார் தேடுதல் மேற்கொள்வதற்காக மன்றில் அனுமதி கோரியிருந்தனர்.

மன்றின் அனுமதியுடன் குறித்த கிராமத்தின் வாய்க்கால் பகுதியில் நீர் வெளியேற்றப்பட்டு வெடி பொருட்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை அக்கராயன் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (2-312-315)

## புன்னைநீராவி கிராமத்தில் குரங்குகளை முழுமையாக கட்டுப்படுத்த கிராம அபிவிருத்திச் சங்கம் துரித நடவடிக்கை

(கண்டாவளை)

புன்னை நீராவிக் கிராமத்தில் குரங்குகளின் நடமாட்டம் காரணமாக பல வருட காலமாக பல்வேறு இடர்களை தொடர்ச்சியாக எதிர்நோக்கி வந்த மக்களின் வாழ்வாதாரத்தை குரங்குத் தொல்லையிலிருந்து முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு புன்னைநீராவி கிராம அபிவிருத்திச்சங்க தலைவர் குமாரசாமி கோகிலன் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இந்தியாவிலிருந்து குரங்குகளை கட்டுப்படுத்தக் கூடிய தேர்ச்சி பெற்றவர்களுடைய அனுசரணையோடு இரும்பு கம்பி வடிவிலான கூண்டுகளுக்குள் ஒவ்வொன்றாக உயிரோடு பிடித்து பாரிய கூண்டுகளுக்குள் பல நூறாகச் சேர்த்து பல மைல் தூர வனாந்தர காடுகளுக்குள் குரங்குகளை கொண்டு சென்று அப்புறப்படுத்தும் இச் சிறப்பான வேலைத் திட்டம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் தொடக்கத்தில் ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டு புன்னைநீராவி கிராமத்தில் பாரியளவில் படையெடுத்துள்ள குரங்குத் தொல்லைக்கு முற்றாக முடிவெடுக்கப்படும் என்று கிராம புன்னைநீராவி அபிவிருத்திச் சங்க தலைவர் கு. கோகிலன் தெரிவித்துள்ளார்.

இவரின் இந்த முன்னுதாரண இச்செயற்பாட்டுக்கு பலரும் தங்கள் பூரண ஒத்துழைப்பையும் வழங்குவதாக மக்கள் பலரும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(2-315)

## முல்லைத்தீவு இளைஞர்கழக சம்மேளன நிர்வாகத்தெரிவு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் 2019 ஆம் ஆண்டிற்கான இளைஞர் கழக மாவட்ட சம்மேளன தலைவராக தரணிதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இளைஞர்களுக்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அவர்களுடைய திறன்களை வளர்க்கும் முகமாக தன்னுடைய சேவைகளை ஆற்றி வருகின்ற தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஒரு அங்கமாக திகழ்கின்ற இளைஞர் கழகத்தின் முல்லைத்தீவு மாவட்டத்துக்கான இளைஞர் கழக மாவட்ட சம்மேளன நிர்வாக தெரிவுகள் இடம்பெற்றுள்ளன.

இதன் அடிப்படையில் துணுக்காய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தை சேர்ந்த கி.தரணிதரன், முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவராக தேர்தல் மூலம் தெரிவாகியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு முல்லைத்தீவு மாவட்டத்துக்கான 2019 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (2-281)




## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்விற்கு கரைதுறைப்பற்று பிரதேச சபை ஆதரவு

(பனிக்கன்குளம்)

முள்ளிவாய்க்கால் மே-18 10 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு பொது மக்கள் தலைமையில் அனுஷ்டிப்பதற்கு கரைதுறைப்பற்று பிரதேச சபை முழு ஆதரவு வழங்கவுள்ளதாக கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் சு. தவராசா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் ஊடக சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் உள்ளிட்ட பிரதேசங்களில் நடைபெற்ற இறுதி யுத்தத்தில் சிக்கிய பல்லாயிரக் கணக்கான அப்பாவி பொதுமக்கள் கொத்துக்குண்டுகள் உள்ளிட்ட கொடிய தாக்குதல்களில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

இந்த கோரச்சம்பவங்களை நேரில் பார்த்து அனுபவித்த பொதுமக்கள் முள்ளிவாய்க்கால் மே 18 நினைவேந்தல் நிகழ்வை அனுஷ்டிப்பதே பொருத்தமானது.

முள்ளிவாய்க்கால் 10 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு பொதுமக்கள் தலைமையில் நடைபெற முள்ளிவாய்க்கால் பகுதி பொதுமக்களினால் ஏற்பாடுகள் நடைபெறுகின்றதை நாங்கள் அறிகின்றோம்.

இதற்கு கரைதுறைபற்று பிரதேச சபை முழு ஆதரவு வழங்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால்நினைவேந்தல் வளாகப்பகுதி கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் முள்ளிவாய்க்கால் பகுதி பொதுமக்களின் ஏற்பாட்டில் இதுவரை நடைபெற்ற 10 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பான பல்வேறு கலந்துரையாடல் கூட்டங்களில் முன்னாள் போராளிகள் புனர்வாழ்வு வழங்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள்,தமிழர் மரபுரிமைப் பேரவை, மாற்றத்துக்கான இளைஞர் அணி யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டு ஆர்வம் காட்டிவருகின்றனர்.

மேலும் முள்ளிவாய்க்கால் 10 ஆம் ஆண்டு நினைவேந்தல் அனுஷ்டிப்பை முன்னாள் போராளிகள் இளைஞர் அமைப்புக்கள், வடக்கு-கிழக்கு மாணவர் ஒன்றியங்கள் , அரசியல் கட்சிகள் , பொதுமக்கள் என அனைவரும் இணைந்து ஒழுங்கமைப்பதற்கான கலந் துரையாடல்கள் முள்ளிவாய்க்கால் பகுதியில் தொடர்ச்சியாக நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

## ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தொடரில் அரசிற்கு கால அவகாசம் வழங்கக்கூடாது

### செல்வம் எம்.பி.வலியுறுத்து

(குருமன்காடு)

ஐ.நா.தீர்மானங்களை இலங்கை அரசாங்கம் தட்டிக் கழிக்கும் போக்கே காணப்படுகின்றது. இதனால் கால நீடிப்பு வழங்கப்படக் கூடாது என தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) அமைப்பின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவரது வவுனியா அலுவலகத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் எல்லாம் ஐ.நா. சபையின் கூட்டத் தொடரில் கால அவகாசம் வழங்கக் கூடாது என வலியுறுத்தி வருகின்றோம். எங்களைப் பொறுத்தவரை ஐ.நா.தீர்மானம் நடைமுறைப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி வருகின்றோம்.

இன்றைய காலகட்டத்தில் தற்போது நடைபெறும் ஐ.நா.சபையில் இலங்கை தொடர்பாக கருத்துக்களை கூறுவது ஒரு எதிர்பார்ப்புடன் இல்லை. ஐ.நா.தீர்மானங்களில் பல தீர்மானங்கள் இலங்கை அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படவில்லை: அதைத் தட்டிக் கழிக்கும் செயற்பாடே காணப்படுகின்றது. இப்பொழுது ஜனாதிபதி, தாம் விசாரிப்பதாக, நடைமுறைப்படுத்துவதாக இணங்கிக் கொண்ட விடயங்களில் இருந்து விலகிக் கொள்ளப் போவதாக கூறுகின்றார். ஆனால் நாங்கள் இலங்கை அரசாங்கத்திற்கு காலஅவகாசம் வழங்கக் கூடாது என வலியுறுத்துகின்றோம். இதில் எந்த உள்நோக்கும்கொண்டு நாம் சொல்லவில்லை.

எங்களைப் பொறுத்தவரை எங்கள் மக்களது விடுதலை, பிரச்சினைகள் வெல்லப்பட வேண்டும் என்பதில் தொடர்ச்சியாக குரல் கொடுத்து வருகின்றோம். எங்கள் மக்களது பிரச்சினைகளை நாம் சர்வதேசத்திற்கு தெளிவாக சொல்லி வருகின்றோம். அதேபோல் ஐ.நா. கூட்டத்தொடரில் இலங்கை அரசாங்கம் மற்றும் சர்வதேசம் பொறுப்பு கூற வேண்டும். அந்த வகையில் கால நீடிப்பு என்பது இந்த அர சாங்கம் தொடர்ச்சியாக ஏமாற்றி வருகின்ற செயற்பாடாக மாறும். அழுத்தங்கள் தொடர்ச்சியாக கொடு க்க வேண்டும். காலநீடிப்பு வழங்கக் கூடாது என தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) எல்லா தமிழ் கட்சிகளுடனும் பேசி வருகின்றது. ஒற்றுமையாக எல்லா தமிழ் கட்சிகளும் காலநீடிப்பு வழங்கக் கூடாது என வலியுறுத்த வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். ஆகவே அனைவரும் ஒற்றுமையாக இந்த விடயத்தில் செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.(2-250)

# பாடசாலைகளில் ஆதிக்கம் செலுத்தும் இலஞ்ச மாபியாவை தோற்கடிப்பேன்

## ஆளுநர் கீர்த்தி தென்னகோன் சபதம்

(கொழும்பு)

**தெற்கிலுள்ள பாடசாலைகளில் ஆதிக்கம் செலுத்தும் இலஞ்ச மாபியாவை தோற்கடிக்க சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என தென்மாகாண ஆளுநர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்தார். தென் மாகாணத்திலுள்ள பாடசாலைகளுக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்காக இலஞ்சம் பெறுவதற்கு எதிராக தொடர்ச்சியாகச் செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்ட அவர், 37 பாடசாலைகளில் இலஞ்சம் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.**



5 இலட்சம் ரூபாய் முதல் 10 இலட்சம் ரூபாய் வரை இலஞ்சம் கொடுத்தும் மாணவர்களை சேர்க்க முடியாத நிலை இருக்கிறது. குறித்த பிரபல பாடசாலைக்கு அடுத்த வேலியில் இருக்கும் மாணவனுக்கு இடம் கிடைக்க வேண்டும். தெற்கில் பாடசாலை அனுமதி கிடைக்காத 207 மாணவர்களுக்கு எவ்வாறாவது பாடசாலையொன்றை பெற்றுக் கொடுப்பேன்.

தெற்கு மாணவர்களின் கல்வி உரிமையைப் பாதுகாப்பேன். மோசடிக் காரர்களைப் பாதுகாக்க முயலும் அரசியல்வாதிகள், அதிகாரிகள் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்களைக் கண்டு நான் அஞ்ச மாட்டேன்.

தெற்கிலுள்ள 37 பாடசாலைகளில் இலஞ்சம் பெறுபவர்கள் இருக்கிறார்கள். மாணவர்களை நியாயமாக சேர்ப்பதற்கு ஆவன செய்யுமாறு இலஞ்ச ஊழல் எதிர்ப்பு அதிகாரிகளை அழைத்து கோரியுள்ளேன். அவ்வாறு நியாயமாக நடக்காத ஒரு அதிபர் ஒரு இலட்சம் ரூபாய் இலஞ்சம் பெறுகையில் பிடிபட்டார்.

இதற்குத் தரகராக உள்ளூராட்சி சபை உறுப்பினர் ஒருவர் செயற்பட்டிருந்தார்.

காலி சவுத்லண்ட் கல்லூரிக்கு முதலாம் வகுப்பிற்கு மாணவர்களை இணைத்தது தொடர்பில் முழுமையான விசாரணை நடத்துமாறு கணக்காய்வாளரை எழுத்துமூலம் கேட்டுள்ளேன். ஆவணங்களை பரீட்சிக்கும் போது அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் குழப்பமடைவார்கள். காலியிலுள்ள மற்றொரு பிரபல பாடசாலையில் இருந்து 250 அடி தூரத்தில் இருக்கும் 7 பிள்ளைகளுக்கு பாடசாலை கிடைக்கவில்லை. ஆனால் 45 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கும் பிள்ளைகளுக்கு பாடசாலை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பாடசாலை அதிபரிடம் விளக்கம் கோரி 6 வாரங்கள் கடந்துள்ளன. உரிய முறைமையின் கீழ் பாடசாலைக்கு மாணவர்களை இணைக்க வேண்டும்.

தெற்கு பாடசாலைகளில் காணப்படும் இலஞ்ச மாபியாவை தோற்கடிப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# போலிப் பிறப்புச் சான்றிதழ் ஊடாக 750 சிசுக்கள் சுவிட்சர்லாந்திற்கு கடத்தல்

(கொழும்பு)

போலிப் பிறப்புச் சான்றிதழ் உள்ளிட்ட போலி ஆவணங்களைப் பயன்படுத்தி 750 சிசுக்கள் சுவிட்சர்லாந்திற்கு கடத்தப்பட்டுள்ளதாக சுவிட்சர்லாந்து மற்றும் ஜேர்மனிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒலிவ் ரம்யா என்ற யுவதி சுவிட்சர்லாந்திலிருந்து தனது பெற்றோரைத் தேடி இரத்தினபுரிக்கு வந்த போது மேற்கொண்ட விசாரணைகளில் இந்த மோசடிகள் அம்பலமாகியுள்ளன.

குறித்த யுவதியின் பிறப்புச் சான்றிதழ் வைத்தியசாலையில் பதியப்பட்டிருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலைகளில் சிசுக்கள் கொல்லப்பட்டதாக தாய்மாரிடம் கூறி வெளிநாடுகளில் அந்த சிசுக்களை வளர்ப்பதற்காக வழங்கப்பட்டுள்ளது என விசாரணைகளின் மூலம் தெரியவந்து-ள்ளது.

இலங்கையிலிருந்து சுவிட்சர்லாந்திற்கு சிசுக்களை கடத்தும் நடவடிக்கைகளை எலிஸ் நோதிகர் என்ற பெண் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1981ஆம் ஆண்டில் நோதிகர் என்ற பெண், ஒலிவ் ரம்யாவை சுவிட்சர்லாந்து நாட்டவர்களுக்கு பணத்திற்கு விற்பனை செய்துள்ளார்என்பது தெரியவந்துள்ளது. (இ-7)

# குறை'களை' பதிகம் 28

## மீண்டெழுமா பழைய பூங்கா



*பழைய பூங்கா பகைப்புலங் கண்டு*  
*பதை பதைத்துப் போனது*  
*பழைய பசுமை இழந்தது.*

*மரங்களை வெட்டி மாடிகள் கட்டினர்*  
*மாநகர மாதா மார்பைப் பிளந்தனர்*

*வரலாற்றுப் பொக்கிசம் வளங்கொழித்த பூங்கா*  
*வாரி வழங்கி வரண்டு போனது*

*குளிர்ந்த காற்று குட்டிச் சுவரானது*  
*கூடல் நகரம் கூனிக் குறுகியது*

*மருந்து மூலிகைகள் அருந்தலானதால்*  
*பெருந்துயர் சூழ்ந்தது பெருநகர மாந்தரை*

*வாஞ்ஞையுடன் வலம்வந்த*  
*வெளவால் கூட்டம்*  
*வழிதவறினவோ? வாழ்விழந்தனவோ?*

*செந்தமிழர் பூங்கா செம்மை இழந்ததால்*  
*செண்பகக் கூட்டம் செத்து மடிந்தன*

*தேன் மலர்ச் சோலையில் தேன் வண்டுகள்*  
*தேன் தேடி அலைந்து தேகம் இழந்தன*

*அலைபேசிகள் அலறும் போதெல்லாம்*  
*அழகுக் குருவிகள் அலறி அடங்கின*

*சிறுவர் களிப்புற சீமெந்து உயிரினம்*  
*உயிரின்றிய உருவில் மகிழ்ந்தனர்*

*கானகச் சோலையில் கருஞ்சுவடிகள்*  
*கருவண்டுகளாய் கடுகிடும் வண்டிகள்*

*பூஞ்சிட்டெல்லாம் பூங்கா பார்க்க*  
*புகையிரதமேறி புலம்பெயரலாமோ?*

*மக்கள் எல்லாம் மந்தைகளாயினர்*  
*மந்தைகள் ஓட்ட மகேசனும் உண்டோ?*

**செ.திருச்செல்வநாதன்**

## இராணுவ முகாமை அகற்ற

# மகிந்தவிடம் பேசியும் பலன்கிட்டவில்லை!

## யோகேஸ்வரன் பதில்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதான வீதியில் முறக்கொட்டாஞ்சேனையில் அமைந்துள்ள இராணுவ முகாமை அகற்றுவது தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரனின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதில் கருத்துத் தெரிவித்த யோகேஸ்வரன், முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமை அகற்றும் நடவடிக்கை இடம்பெற்று வரும்வேளை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினர் கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது தொடர்பான ஏற்பாடுகள் அறிந்து அதற்கு விளக்கமளிக்கும் முகமாக இவ் ஊடகவியலாளர் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது.

முறக்கொட்டாஞ்சேனை இராமகிருஷ்ணன் மிஷன் வித்தியாலய காணியினுள் இராணுவ முகாம் அமைந்துள்ளது. இவ் இராணுவ முகாமை பலப்படுத்தும் முகமாக அருகிலுள்ள குடியிருப்பாளர்களின் காணியும் அபகரிக்கப்பட்டுள்ளது.

பல உயிர்கள் இவ் இராணுவ முகாமில் சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர். முன்பு இவ் வீதியால் செல்லும் போது மக்கள் அச்சமடைந்தார்கள். இராணுவப் புலனாய்வாளர்களால் பலர் கடத்தப்பட்ட நிலை காணப்பட்டது.

இதன்போது முறக்கொட்டாஞ்சேனை பாடசாலைப் பிரதேசத்தின் ஆற்றோரமாக மாற்றப்பட்டது. இவ்விடம் வெள்ள அனர்த்தம் ஏற்படக் கூடியதும் பாதுகாப்பற்றதும் குறைந்த நிலப்பரப்பையும் கட்டடத்தையும் கொண்டமைந்து காணப்படுகிறது.

மாணவர்கள் ஏற்கனவே கல்வி பயின்ற இப் பாடசாலையானது மீளவும் பெறப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய நாங்கள் கடந்த காலத்தில் பல பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளோம்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பேசியும் பலன் கிடைக்கவில்லை. 2015 இல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் பேசி பல நடவடிக்கைகளை மேற்கொண்டோம். வடக்கு-கிழக்கு அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதி செயலணி கூட்டத்திலும் இவ்விடயம் தொடர்பான கருத்து முன்வைக்கப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கிலுள்ள பாடசாலைகளில் இராணுவ முகாம் இருந்தால் 31.12.2018 இற்கு முன்பு அவற்றினை அகற்றித்தருவதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார். அவ்வேளையில் இம்முகாம் பாரிய முகாமாக காணப்படுவதனால் இடமாற்றி செல்வதற்குப் போதியளவு காணி இல்லாமை தொடர்பான கருத்து இராணுவத் தரப்பில் முன்வைக்கப்பட்டது.

அவ் வேளையில் புன்னைக்குடா பிரதேசத்தில் இதற்கான காணியை வழங்குமாறு அரசாங்க அதிபர் மற்றும் ஜனாதிபதியிடம் கோரியிருந்தோம். அதற்கு தற்போதைய இராஜாங்க அமைச்சர் குறித்த பிரதேசத்தில் காணி வழங்க முடியாது எனவும் கிரான் பிரதேசத்தில் காணி வழங்குவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு தெரிவித்திருந்தார். அதற்கு கிரான் பிரதேசம், மக்கள் பிரதேச குடியிருப்பு காணிகள் காணப்படுவதனால் அங்கு காணி வழங்க முடியாது எனத் தெரிவித்திருந்தேன்.

புன்னைக்குடா பிரதேசமே பொருத்தமான பிரதேசம் என்றும் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமான அரச காணி காணப்படுவதாகத் தெரிவித்தேன். அதற்கு இராணுவத்தினரும் சம்மதம் தெரிவித்திருந்தனர்.

இதன்போது 31.12.2018 இற்கு முன்பு குறித்த பிரதேசத்திற்கு செல்ல முடியாத நிலை காணப்படுவதாகவும் புதிதாக கட்டட வசதிகள் இல்லாமை தொடர்பாகவும் அதற்கான கால அவகாசம் தேவையென இராணுவத் தரப்பில் கோரியிருந்தனர். இராணுவத்தினருக்கு தேவையான அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டதும் இராணுவத்தினர் அங்கு சென்று விடுவார்கள். அதன்பின்பு மீண்டும் பாடசாலை காணியும் தனியாருக்கு சொந்தான காணியும் உரியவர்களிடம் கையளிக்கப்படும் என்றார்.

இதற்கான ஏற்பாடுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம். அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுத்தவர்கள் என்ற வகையில் இந் நடவடிக்கையைக் கவனமாக மேற்கொண்டு வருகின்றோம்.

இவ் வேளையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினர் குறித்த இராணுவ முகாமை அகற்றுமாறு கோரி கவனயீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ள ஏற்பாடு செய்யவுள்ளதாக அறிகின்றேன். கவனயீர்ப்புப் போராட்டம் மேற்கொள்வது மக்களின் ஜனநாயக உரிமை. அதற்கு நான் எதிரானவன் அல்லன்.

முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் 2008 தொடக்கம் 2012 வரை மகிந்த ராஜபக்ஷவின் செல்லப் பிள்ளையாக இருந்தவர். அவர் நினைத்திருந்தால் இராணுவ முகாமை அப்போதே அகற்றியிருக்கலாம். அதனை அகற்ற வேண்டும் என குரல் கொடுத்தவர்கள் நாங்கள்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி மீண்டும் ஜனாதிபதி செயலணி குழுக் கூட்டம் இடம் பெறவுள்ளது. அவ்வேளை இவ் விடயம் தொடர்பாக எப்போது, எந்த காலப்பகுதியில் அகற்றப்படும் என்பதை மீண்டும் ஜனாதிபதியிடம் கோருவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலந்தைமோட்டை தீவுப்பிட்டி மக்களின் காணிப்பிரச்சினை தொடர்பில் ஆராய்வு

## அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் நேரடி விஜயம்



(மன்னார்)

கடந்த 25 வருடங்களுக்கு மேலாக அரச காணிகளில் வாழ்ந்து வரும் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலந்தை மோட்டை கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட தீவுப்பிட்டி கிராம மக்கள் காணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

தற்போது அரச தரப்புகளில் இருந்து தங்களின் குடியிருப்புகளுக்கு இடையூறுகள் வழங்குவதாகவும் அங்கிருந்து தம்மை வெளியேற்ற திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் இதற்கான தீர்வை பெற்றுத் தருமாறு குறித்த கிராம மக்கள் அமைச்சர் றிசாத் பதியுதீனிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அமைச்சரின் கோரிக்கைக்கு அமைவாக அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் றிப்கான் பதியுதீன் தலைமையிலான குழுவினர் குறித்த கிராமத்திற்கு நேற்று காலை விஜயம் மேற் கொண்டிருந்தனர்.

இதன்போது குறித்த கிராமத்தைச் சேர்ந்த மக்கள் கருத்துக் கூறுகையில், சுமார் 25 வருடங்களுக்கு மேலாக இக்கிராமத்தில் வாழ்ந்து வருகின்றோம். அண்மைக்காலமாக பல இன்னல்களை தாம் அனுபவித்து வருவதாக அம் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் குறித்த மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்ததோடு இம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று அதற்கான தீர்வினைப் பெற்றுத் தர நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதாக உறுதியளித்தார். (2-285)




# தொடருந்திலிருந்து தவறி வீழ்ந்து இளைஞன் படுகாயம்

(குருமன்காடு)

கொழும்பிலிருந்து மன்னார் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த தொடருந்தில் இருந்து நேற்று அதிகாலை 2.40 மணிக்கு இளைஞர் ஒருவர் தவறி வீழ்ந்து படுகாயமடைந்த சம்பவம் வவுனியா செட்டிகுளத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்தவர் மடு பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் என்பதுடன் பிரஸ்தாப நபர் வவுனியா பொது வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞர் மிதிபலகையில் அமர்ந்தவாறு பயணம் செய்ததாகவும் தூக்கத்தின் காரணமாகவே தொடருந்திலிருந்து தவறி கீழே விழுந்ததாக முதற்கட்ட விசாரணையிலிருந்து தெரியவருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்

இச்சம்பவம் குறித்து பிரதேச மக்கள் கருத்துத் தெரிவிக்கையில், அதிகாலையில் இளைஞர் ஒருவரின் அலறல் சத்தம் கேட்டு சம்பவ இடத்திற்கு சென்ற போது குறித்த இளைஞர் நடக்க முடியாத நிலையில் தண்டவாளத்தின் அருகில் கூக்குரலிட்ட நிலையில் இருந்ததை அவதானித்து பறயனாலங்குளம் பொலிஸாருக்கு சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் குறித்த இளைஞனை மீட்டு செட்டிகுளம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்த நிலையில் அங்கிருந்து வவுனியா பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவிற்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (2-250)

# நுண்நிதி நிறுவனங்களின் செயற்பாட்டுக்கு எதிர்ப்பு 8 ஆம் திகதி பாரிய ஆர்ப்பாட்டம்

(குருமன்காடு)

நுண்நிதி நிறுவனங்களின் செயற்பாட்டால் பெண்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருவதை கண்டித்தும் நுண்நிதி நிறுவனங்களின் பிடியில் சிக்கியுள்ள பெண்களை அரசு மீட்க வேண்டியும் உழைக்கும் பெண்கள் முன்னணியினால் ஆர்ப்பாட்டமொன்று மேற்கொள்ளப்படவுள்ளதாக குறித்த முன்னணியினர் ஏற்பாடு செய்த ஊடக வியலாளர் சந்திப்பில் தெரிவித்தனர்.

வவுனியாவில் உள்ள தனியார் மண்டபம் ஒன்றில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர்கள் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்,

நுண்நிதி நிறுவனங்களுக்கு எதிராக நாம் பல போராட்டங்களை நடத்தியிருந்தோம். எனினும் இதுவரை ஏதுவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. ஒரு சில பெண்களின் ஒரு இலட்சத்திற்குட்பட்ட கடனை மட்டும் தள்ளுபடி செய்துள்ளனர். ஏனைய கடனைப்பற்றிய அறிவுறுத்தல்களும் எங்கள் கிராமங்களில் உள்ள பெண்களுக்கு வழங்கப்படவில்லை.

வட மாகாணத்தில் மிகவும் பின்தங்கிய கிராமங்களில் உள்ள பெண்களை குழுவாக தயார் செய்து அவர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. அவர்களது வருமானம் பற்றி எந்தவிதமான ஆய்வும் இன்றி கடன்கள் வழங்கப்படுகின்றன. பெண்கள் ஒரு வங்கியில் எடுத்த கடனை கட்ட முடியாமல் இருக்கும்போது மற்றைய வங்கியில் கடனைப் பெறுகின்ற நிலை காணப்படுகின்றது.

இவ்வாறு கடனைக்கட்ட முடியாத பெண்கள் பலர் சீரழியும் நிலை காணப்படுகின்றது. பிள்ளைகளுக்கு சரியான உணவு வழங்கப்படுவதில்லை. பாடசாலைக்கு ஒழுங்கான முறையில் அனுப்புவதில்லை என தெரிவித்தனர்.

இவ்வாறான நிலையில் எதிர் வரும் 8 ஆம் திகதி அனைதுலக பெண்கள் தினத்தில் பாரியளவில் ஆர்ப்பாட்டமொன்றினை நடத்த நாம் தீர்மானித்துள்ளோம். வவுனியா பிரதேச செயலகத்திற்கு முன்பாகவும் மட்டக்களப்பிலும் பொலநறுவையிலும் இப் போராட்டம் சம நேரத்தில் இடம்பெறும் என அவர்கள் தெரிவித்தனர்.(2-250)

# சட்டவிரோத சூது விளையாட்டில் ஈடுபட்ட 5 பேர் பணத்துடன் கைது

(குருமன்காடு)

வவுனியா தட்சணாங்குளம் பகுதியிலுள்ள கள்ளுத்தவறணை ஒன்றில் சட்டவிரோத சூது விளையாட்டில் ஈடுபட்ட 5 பேர் ஒரு தொகைப்பணத்துடன் நேற்று முன்தினம் பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளதாக வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் செயற்படும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

பண்டாரிக்குளம் குளக்கட்டு வீதியூடாக தட்சணாங்குளம் செல்லும் குளக்கட்டிலுள்ள கள்ளுத் தவறணையில் நீண்டகாலமாக சட்டவிரோதமான முறையில் பணம் வைத்து சூது விளையாட்டு இடம்பெற்று வருவதாக வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுரா அபேவிக்கிரம தலைமையின் கீழ் செயற்படும் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவல் அடிப்படையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் செயற்படும் போதை ஒழிப்புப் பிரிவினருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பு நடவடிக்கையின் போது கள்ளுத் தவறணையில் சட்ட விரோதமான சூது விளையாட்டில் ஈடுபட்ட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து சூது விளையாட்டிற்குப் பயன்படுத்திய ஒரு தொகைப்பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேக நபர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர். (2-250)

# அம்பலப்பெருமாள் குளத்தின் வான்பகுதியில் மேம்பாலம் அமைக்க 125 மில்லியன் மதிப்பீடு

(கண்டாவளை)

முல்லைத்தீவு அம்பலப்பெருமாள் குளத்தின் வான் பகுதியில் மேம்பாலம் அமைத்தல், புனரமைத்தல் என்பவற்றுக்கு 125 மில்லியன் ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அம்பலப்பெருமாள் குளத்தின் வான் பகுதி துணுக்காயில் இருந்து அக்கராயன், முழங்காவில், கிளிநொச்சி ஆகிய இடங்களுக்கான முக்கிய போக்குவரத்து வீதியாக உள்ளது.

சுமைகளுடன் செல்லும் பாரவூர்திகளினால் மீண்டும் மீண்டும் வான்பகுதி சேதமடைகின்ற நிலையில் வான் பகுதியில் மேம்பாலத்தை அமைப்பதற்கான திட்டமிடல்களை வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

இதற்காக 125 மில்லியன் ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போதைய நிலையில் கனமழை பெய்யுமானால் அம்பலப்பெருமாள் குளத்தின் வான்பகுதி உடைப்பெடுக்கக்கூடிய அபாய நிலையே காணப்படுகின்றது. (2-315)

# மலையாளபுரத்தில் யானைகள் அட்டகாசம் லத்தியில் சிங்களமொழியில் எழுதப்பட்ட பொலித்தீன்



(பரந்தன்)

கிளிநொச்சி மலையாளபுரம் பகுதியில் என்றுமில்லாதவாறு யானை நுழைந்து விவசாய உற்பத்திகளுக்கு சேதம் விளைவித்துள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் இரவு குறித்த பகுதிக்குள் நுழைந்த மூன்று யானைகள் இவ்வாறு பயன்தரும் மரங்களைச் சேதமாக்கியுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

யானைகள் இரவு வேளை நுழைந்தவிடம் தொடர்பில் அறிந்து துரத்த முற்பட்டபோது தாக்க முற்பட்டதாகவும் கிராமத்தவர்களின் உதவியுடன் யானைகளை விரட்டியதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

வளர்ப்பு யானைகள் போன்றே செயற்பட்டதாகவும் மக்கள் மத்தியில் பழகிய யானைகள் போலவே இருந்ததாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் சுமார் 100 இற்கு மேற்பட்ட பயன்தரும் மரங்கள் சேதமாகியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். தென்னை, இறப்பர் உள்ளிட்ட பல மரங்களை இவ்வாறு சேதமாக்கியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவை வளர்க்கப்பட்டு இங்கு கொண்டுவந்து விடப்பட்டுள்ளதாக சந்தேகிக்கும் மக்கள், குறித்த யானையின் லத்தியில் சிங்கள மொழியில் எழுதப்பட்டுள்ள பொலித்தீன்கள், கித்துல் மர கழிவு ஆகியன காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இரவோடு இரவாக இங்கு கொண்டுவந்து விடப்பட்டுள்ளதாக மக்கள் சந்தேகிக்கின்றனர். இவ்வாறான சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் கோருகின்றனர். (2-312)

# தலைமன்னார்-மன்னார் வீதியில் ஹயஸ்-ஆட்டோ விபத்து



ஐவர் காயம்

(மன்னார்)

மன்னார் -தலைமன்னார் வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஐந்து பேர் காயங்களுக்குள்ளான நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று பிற்பகல் 12.45 மணியளவில் மன்னார்-தலைமன்னார் வீதியில் ஐந்தாம் கட்டை நாற்சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

தென்பகுதி பன்னம்பிட்டியைச் சேர்ந்த வாகனம் ஒன்று ஆறு பேருடன் தலைமன்னார் பகுதியிலிருந்து மன்னார் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போது மன்னார் எருக்கலம்பிட்டி ஐந்தாம் கட்டை நாற்சந்தியில் தோட்ட வெளியிலிருந்து கணவனும் மனைவியும் ஆட்டோ ஒன்றில் விறகு ஏற்றிக் கொண்டு எருக்கலம்பிட்டி நோக்கிச் செல்வதற்கு வீதியை கடக்க முற்பட்டபோது பிரதான வீதியில் இவ்விரு வாகனங்களும் மோதுண்டன.

இதனால் ஆட்டோ பலத்த சேதத்துக்கு உள்ளாகியதுடன் இதில் பயணித்த எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த அனசீப் (வயது-31), பஸ்மியா (வயது-25) ஆகியோரும் ஹயஸ் வாகனத்தில் பயணித்தவர்களில் சமரசிங்க (வயது-35), சம்பத் (வயது-39), சிறியா (வயது-56) ஆகியோரும் காயங்களுக்குள்ளாகி மன்னார் பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ் விபத்துத் தொடர்பில் மன்னார் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (2-285)

## 4 வழக்குகளும் ஒத்திவைப்பு

அமைச்சராக இருந்த போது, தமது சொத்து விபரங்களை வெளியிடாமை தொடர்பில், முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு எதிராக இலஞ்ச ஆணைக்குழுவால் தொடுக்கப்பட்டுள்ள 4 வழக்குகளும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. குறித்த வழக்குகளை எதிர்வரும் 19ஆம் திகதி வரை ஒத்திவைக்க கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜெயரத்ன நேற்று உத்தரவிட்டுள்ளார்.


2010ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதி முதல் 2011 மார்ச் 31ஆம் திகதி வரையில் தமது சொத்து விபரங்கள் குறித்து அவர் வெளியிடாமை தொடர்பிலேயே குறித்த வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு எதிராக ஐந்து வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

அவற்றில் ஒரு வழக்கில் இருந்து அவர் குற்றமற்றவர் என தெரிவிக்கப்பட்டு கடந்த 29ஆம் திகதி விடுவிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மரண அறிவித்தல்

## செல்லையா பரமானந்தன்

### (ஓய்வுபெற்ற கட்டட பொறியியலாளர்)



பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணி, கொழும்பு ஆகியவற்றை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பரமானந்தன் சிவராத்திரி தினமான 04.03.2019 திங்கட்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா- இராசம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வரும் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம்- செல்வரஞ்சிதம் (வெற்றிப்பிள்ளை) தம்பதியரின் மூத்த மருமகனும் காலஞ்சென்ற புனிதவதியின் அன்புக் கணவரும் சபானந்தன் (லண்டன்), தர்மினி(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. பிறிந்திகா (லண்டன்), திருமாறன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தனுசிறியின் பாசமிகு பேரனும்,

காலஞ்சென்றவர்களான சபாநாயகர், மகேஸ்வரி மற்றும் புவனேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பத்மலோசனா (கனடா), காலஞ்சென்றவர்களான எதிர்வீரசிங்கம், சீவரத்தினம் ஆகியோரின் மைத்துனரும்,

நேசராஜா, இந்திராவதி, ரஞ்சினி, சிவசீலன், ரவீந்தினி, காலஞ்சென்றவர்களான கலாவதி, வனிதா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 07.03.2019 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (7754)

சிவ்புரம், சித்தன்கேணி. தகவல்: மகன் (ப.சபானந்தன்)

# மரண அறிவித்தல்

## திருமதி ராதாராணி சந்திரகாந்தன்



யாழ்.புலோலி தெற்கு உபய கதிர்காமத்தை பிறப்பிடமாகவும்,சவுதி அரேபியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட ராதாராணி சந்திரகாந்தன் 25-02-2019 அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவகுரு நாதன் மகேசு தம்பதியரின் அன்பு மருமகளும்,

சந்திரகாந்தனின் அன்பு மனைவியும்,

சுகந்தினி, சிவகண்ணன், செந்தூரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும்,

நாகேந்திரராசா,ரதிராணி ஆகியோரின் சகோதரியும். சதாசிவம், காலஞ்சென்ற சரவணபவன், இலக்குமிதேவி, சிவதேவி,சிவராசன் பத்மநாதன், ஈஸ்வரி,ஜீவா,நந்தினி, கீதா ஆகியோரின் மைத்துனியும், யசோதரன்,பிரணவி, மாதினி ஆகியோரின் மாமியாரும், ராகேஷ்,ராகிதா,ரக்ஸிதா ஆகியோரின் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07/03/2019 நாளை காலை 6.30 மணிக்கு திகிரி, புலோலி வடகிழக்கு, பருத்தித்துறையில் ஆரம்பித்து தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(சி-5685)

தொடர்புகளுக்கு தகவல்:
076 573 0204,077 432 0946 குடும்பத்தினர்.

# சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்

**15.03.2019 முதல் 31.12.2019 வரை மரக்கறிச் சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், களஞ்சிய அறைகள் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான பகிரங்க ஏல அறிவித்தல் - 2019**

ஏலத்தில் பங்குபெற விரும்புவோர் 06.03.2019 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் 14.03.2019ஆம் திகதி வியாழக்கிழமை (மு.ப 10.00) வரையான காலப்பகுதியில் சாவகச்சேரி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் வைப்புப் பணத்தினைச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளவும்.

**இடம் :- சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப் பணிமனை.**
**காலம் :- 14.03.2019 வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணி.**

### ஏல அறிவித்தல் அட்டவணை

| இல | குத்தகை விபரம் | ஆரம்ப கேள்வி தொகை (VAT,NBT தவிர) | வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) |
|---|---|---|---|
| 01 | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 666.000.00 | 6,700.00 |
| 02 | கொடிகாமம் கருவாட்டுக்கடை-01 | 53,500.00 | 500.00 |
| 03 | கொடிகாமம் கருவாட்டுக்கடை-02 | 46.000.00 | 500.00 |
| 04 | களஞ்சிய அறை இல.-01 | 24,900.00 | 500.00 |
| 05 | களஞ்சிய அறை இல.-02 | 23,700.00 | 500.00 |
| 06 | வரணி பொதுச்சந்தை | 77,400.00 | 800.00 |
| 07 | வரணி இயற்றாலை பொதுச்சந்தை | 5,300.00 | 500.00 |
| 08 | கைதடி மாட்டிறைச்சிக்கடை | 135,800.00 | 1,400.00 |
| 09 | மிருசுவில் மாட்டிறைச்சிக்கடை | 232,600.00 | 2,300.00 |
| 10 | எழுதுமட்டுவாழ் கோழி இறைச்சிக்கடை | 30.100.00 | 500.00 |
| 11 | மிருசுவில் பொதுச்சந்தை | 3,600.00 | 500.00 |
| 12 | எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை | 3,900.00 | 500.00 |

நிபந்தனைகள்:

1. கேள்வி கோர விரும்புவோர் கோரிக்கைக் கடிதமும், ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் தேசிய அடையாள அட்டை பிரதியினையும் சமர்ப்பிக்க வேண்டும்.
2. இறைச்சிக் கடைகளுக்கு சபையால் விதிக்கப்படும் மாத வாடகை கேள்வித்தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
3. சந்தை வளவில் உள்ள கடைகளுக்கு தெரிவு செய்யப்படும் குத்தகைகாரர் எவ்வித வரி அறவீடுகளையும் மேற்கொள்ள முடியாது.
4. கால்நடைகள் சுகாதார பரிசோதகரின் அனுமதியுடன் கொல்களத்தில் வெட்டப்பட்டு இறைச்சிக்காக கொண்டு வரப்படல் வேண்டும். அத்துடன் சபையால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.
5. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் 1/3 பகுதியை முற்பணமாக செலுத்த வேண்டும். மிகுதித் தொகையினை பிரதேசசபையினால் வழங்கப்படும் அறிவுறுத்தலுக்கு ஏற்ப செலுத்துதல் வேண்டும்.
6. கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் தவிசாளர் / செயலாளருக்கு உண்டு.
7. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**தவிசாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம். 06.03.2019** (சி-5694)

## ம.வி.மு-மகிந்த சந்திப்பு

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பொன்று இன்று இடம் பெறவுள்ளது.நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வது தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள. அரசமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பாகவே மகிந்தவுடன் கலந்துரை யாடப்படவுள்ளது.

அத்துடன் இந்தத் திருத்தம் தொடர்பில் ஏனைய கட்சித் தலைவர்களுடனும் மக்கள் விடுதலை முன்னணி கலந்துரையாடலை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## பொலிஸ் பிரிவில் 70 மோப்ப நாய்கள்

(கொழும்பு)

போதைப் பொருட்களை கண்டு பிடிக்க மேலதிகமாக 70 பொலிஸ் நாய்களுக்கு பயிற்சியளித்து சேவையில் இணைத்துக் கொள்ளப்பட் டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கொக்கெய்ன், கஞ்சா, ஹெரோயின் என அனைத்து வகையான போதைப் பொருட்களையும் இவை அடையாளம் காட்ட பயிற்றுவிக்கப்பட்டுள்ளன. (இ-7)

பழைமை வாய்ந்த
ஆதி சக்தி வாய்ந்த
மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்


ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களுக்கும் மூன்று பொழுதில் பலன்
(உங்களால் நேரில் வர முடியாவிட்டால்
பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

# புல்வாமாவில் தொடர்கிறது தீவிரவாதத் தாக்குதல்கள்

## இருவர் உயிரிழப்பு



(புல்வாமா)

ஜம்மு-காஷ்மீர் புல்வாமாப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கித் தாக்குதலில் தீவிரவாதிகள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

குறித்த தாக்குதல் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை நடத்தப்பட்டுள்ளது.

புல்வாமா மாவட்டம் டிரால் பகுதியில் உள்ள மிர் மொகல்லா என்ற இடத்தில் பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாக தகவல் கிடைத்ததையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போதே ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது தீவிரவாதிகள் பதுங்கியிருந்த வீட்டையும் படையினர் குண்டுவீசி தகர்த்துள்ளதுடன், குறித்த பகுதியில் தொடர்ந்தும் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்ற புல்வாமா தாக்குதலில் சுமார் 40 இற்கும் மேற்பட்ட சி.ஆர்.பி.எப் வீரர்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (7)

# கென்யாவில் ஹெலி
# 4 அமெரிக்கர்கள் உ



(நைரோபி)

கென்யாவின் துர்கானா பகுதியில் உள்ள பூங்காவிற்கு பயணித்த ஹெலிகொப்டர் ஒன்று தரையிறங்கிய போது தரையில் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணியளவில் சம்பவித்துள்ளது.

கென்யாவின் வடமேற்கு பகுதியில் உள்ள துர்கானா எரியின் மத்தியில் உள்ள தீவில் தேசிய பூங்கா அமையப்பெற்றுள்ளது. இந்த பூங்காவை சுற்றிப் பார்ப்பதற்காக ஏராளமான சுற்றுலாப் பயணிகள் ஹெலிகொப்டர்கள் மூலம் அழைத்து வரப்படுகின்றனர்.

இந்நிலையில், நேற்று முந்தினம் மாலை இந்த தேசிய பூங்கா

# பாகிஸ்தானின் ஆளில்லா விமானத்தை சுட்டு வீழ்த்திய இந்திய விமானப்படை



(ராஜஸ்தான்)

ராஜஸ்தான், பிகானரில் சர்வதேச எல்லை அருகே பறந்த பாகிஸ்தானைச் சேர்ந்த ஆளில்லா விமானத்தை இந்திய விமானப்படைச் சுட்டு வீழ்த்தியது.

இது குறித்து இந்தியப் பாதுகாப்புத்துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் நேற்று முன்தினம் திங்கள் முற்பகல் 11.30 மணியளவில் விமான ஊடுருவலைக் கண்டுபிடித்தோம். உடனடியாக Su-30MKIs (போர்விமானம்) வானில் எழும்பியது. இதனையடுத்து பாகிஸ்தானைச் சேர்ந்த ஆளில்லா போர்விமானம் ஏவுகணையினால் சுட்டு வீழ்த்தப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது. ஆளில்லா விமானம் சர்வதேச எல்லையின் இன்னொரு புறத்தில் போய் விழுந்தது.

இந்தியா, பாகிஸ்தான் இருநாடுகளுமே ஆளில்லா விமானத்தை கண்காணிப்பு நோக்கங்களுக்காக எல்லைப்பகுதியில் பயன்படுத்தி வருகின்றன.

கடந்த செவ்வாயன்று பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரிலுள்ள பாலகோட்டில் இந்திய இராணுவத்தினர் தீவிரவாத முகாம்கள் மீது தாக்குதல் நடத்தினர். அதன் பிறகே இந்திய விமானப்படை உச்சபட்ச எச்சரிக்கையில் பணியாற்றி வருகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் தரையில் உள்ள ரேடார் சாதனம் பாகிஸ்தான் ஆளில்லா போர் விமானம் ஊடுருவியதைக் கண்டுபிடித்தது.

பிறகு சுகாய்-30 ரக ஜெட் ஒன்று வான்வெளியில் கண்காணிப்புச் செய்து கொண்டிருந்த போது ஊடுருவல் பாகிஸ்தான் விமானத்தைச் சுட்டு வீழ்த்தியது. (7)

# 2020 ஜனாதிப
# நான் போட்டியிட

## அமெ.முன்னாள் ஜனாதிபதி ஹே

(வோஷிங்டன்)

2020 அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் நான் போட்டியிடவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி வேட்பாளர் ஹிலாரி கிளின்டன் அறிவித்துள்ளார்.

1947 ஆம் ஆண்டு பிறந்த ஹிலாரி கிளின்டன், அமெரிக்க அரசியலில் பிரபலமானவர். ஐக்கிய அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மற்றும் அமெரிக்க செனட் சபை உறுப்பினராகவும் இவர் இருந்துள்ளார்.

அமெரிக்க வரலாற்றில், ஒரு பெரிய அரசியல் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தேர்வான முதல் பெண்மணி இவரே. கடந்த 2016 ஆம் ஆண்டு குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான ட்ரம்ப்பை எதிர்த்துப் போட்டியிட்டார். தேர்தல் கணிப்புகள் ஹிலாரியின் பக்கம் இருந்தாலும் முடிவுகள் அவருக்கு எதிராக இருந்தன.

தேர்தலில் தோற்றாலும் தொடர்ந்து மக்களுக்காக உழைப்பேன் என்று அறிவித்தார் ஹிலாரி. அடுத்த ஆண்டு தேர்தலுக்காக அமெரிக்கா தயாராகி வரும் நிலையில் அமெரிக்க ஊடகம் ஒன்றுக்குப் பேட்டியளித்த ஹிலாரி, "நான் எதை நம்புகிறேனோ அதற்காகத் தொடர்ந்து பணியாற்று

# ரபேல் போர் விமானங்கள் எதிரிகளை அழிக்கும் திறனுள்ளவை

## இந்திய விமானப்படைத் தளபதி தெரிவிப்பு

(கோவை)

ரபேல் போர் விமானங்கள் எதிர்வரும் செப்டெம்பர் ம்ரதம் விமானப்படையில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதுடன், அனைத்து விமானங்களும் எதிரிகளை அழிக்கும் திறன் கொண்டவை என இந்திய விமானப்படை தளபதி பிரேந்தர் சிங் தனோவா தெரிவித்துள்ளார்.

கோவை மாவட்டம் சூலூர் விமானப்படை தளத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், அபிநந்தன் செலுத்திய மிக் 21 பைசன் ரக விமானங்கள் பழையவை அல்ல. அவை நவீனமயப்படுத்தப்பட்டவை. எங்கள் இலக்கு தெளிவாக இருந்தது. இலக்கை துல்லியமாக திட்டமிட்டபடி தாக்கியுள்ளோம்.

அபிநந்தனின் உடல் தகுதி உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அவர் பணியில் இணைந்து கொள்ளப்படுவார். மருத்துவ சோதனைக்கு பின்னரே அவர் மீண்டும் விமானத்தை இயக்குவாரா? என்பது பற்றி தெரிவிக்க முடியும்.

அவர் முழு உடற்தகுதியை பெற்றுவிட்டாரா? என்பதை மருத்துவர்கள் உறுதி செய்ய வேண்டும். சூலூர் விமானப்படை தளம் தற்போது மேம்படுத்தப்பட்டு வருவதுடன் அதனை தற்போது பயிற்சிக்காக மட்டுமே பயன்படுத்துகின்றோம்.

அண்மையில் இடம்பெற்ற தாக்குதலில் எத்தனை பாகிஸ்தானியர்கள் உயிரிழந்தனர் என்பதை நாம் கணக்கிடவில்லை என தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அண்மையில் பாலகோட் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விமான தாக்குதலில் 250 தீவிரவாதிகள் உயிரிழந்ததை பா.ஜ.க. அரசு உறுதிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# ஏமனில் தற்போது நில
# சில வாரங்களுக்குள் தே

## பிரிட்டன் அமைச்சர்



(சனா)

ஏமனில் தற்போது நிலவும் போர் நிறுத்தம் சில வாரங்களுக்குள் தோல்வியடையக்கூடுமென ஏமனுக்கு விஜயம் செய்துள்ள பிரித்தானிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெரமி ஹண்ட் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த 20 வருடங்களில் ஏமனுக்கு விஜயம் செய்துள்ள முதல் பிரித்தானிய வெளியுறவுத்துறை அமைச்சரும் ஏமனில் போர் ஆரம்பித்ததன் பின்னர் அங்கு பயணிக்கும் முதல் மேற்குலக சிரேஷ்ட அரசியல் பிரமுகரும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏமன் அரசுக்கும் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்குமிடையிலான போரை முடிவுக்கு கொண்டுவரும் பொருட்டு இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஐக்கிய நாடுகள் சபையினால் சமாதான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்

# ஜமாலின் உடல் எரிக்கப்பட்டுவிட்டது

## ஏ.என்.ஐ.செய்தி நிறுவனம் தகவல்



ஜமால் கஷோக்கி உடற்பாகங்கள் சவுதி தூதரக அதிகாரி இல்லத்தில் எரிக்கப்பட்டதாக செய்தி வெளியாகியுள்ளது.

இதுகுறித்துஏ.என்ஐ. வெளியிட்ட செய்தியில், "மத்திய கிழக்கு நாடுகளில் இயங்கும் அல்- ஜசிராவின் விசாரணையில் சவுதி பத்திரிகையாளர் ஜமாலின் உடல் துருக்கியில் உள்ள சவுதி தூதரக அதிகாரி வீட்டில் எரிக்கப்பட்டது கண்டறியப்பட்டது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

துருக்கியில் கொல்லப்பட்ட சவுதி பத்திரிகையாளர் ஜமாலின் உடல் குறித்து தொடர்ந்து விசாரணை நடத்தி வருவதாகவும், இறுதியில் உண்மை கண்டறியப்படும் என்றும் சவுதி வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிலையில் இந்தத் தகவலை ஏ.என்.ஐ. செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

முன்னதாக, சவுதி அரசை விமர்சித்து வந்த சவுதி பத்திரிகையாளர் ஜமால் துருக்கியில் உள்ள சவுதி தூதரகத்தில் ஒக்டோபர் 2 ஆம் திகதி கொல்லப்பட்டார்.

இது தொடர்பாக நடந்த விசாரணையில் சவுதி அரேபியாவின் அதிகாரிகள் திட்டமிட்டு மிருகத்தனமாக ஜமாலைக் கொலை செய்துள்ளனர்.

மேலும், துருக்கி அரசு இந்தக் கொலை குற்றத்தை விசாரிக்க சவுதி அனுமதி அளிக்காமல் 13 நாட்கள் தாமதப்படுத்தியது என்று ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்ட அறிக்கையில் கூறியிருந்தது.

ஜமால் கஷோக்கி கொல்லப்படுவதற்கு முன்னரே சவுதி இளவரசர் முகமது பின் சல்மான், அவரைக் கொல்லத் திட்டமிட்டிருந்ததாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (7)

# வெளிநாடு

## லிகொப்டர் விபத்து! உட்பட ஐவர் மரணம்!



விற்கு இரண்டு ஹெலிகொப்டர்களில் சுற்றுலாப் பயணிகள் அழைத்து வரப்பட்டனர். அதில் ஒரு ஹெலி கொப்டர் தரையிறங்கும்போது, தரையில் மோதி விபத்துக் குள்ளாகியுள்ளது. இதில் அமெரிக்காவைச் சேர்ந்த 4 பேரும், கென்யாவைச் சேர்ந்த ஹெலிகொப்டர் செலுத்தியவரும் உயிரிழந்துள்ளனர்.

விபத்துக்கான காரணம் இதுவரை கண்டுபிடிக்கவில்லை. எவ்வாறெனினும் மற்றைய ஹெலிகொப்டர் பாதுகாப்பாக தரையிறங்கியுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு பூங்கா நிர்வாகம் இரங்கல் தெரிவித்துள்ளது. (7)

## இந்தியாவின் புதிய மின்வர்த்தக முறைகளில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கடும் அதிருப்தி

### சிறப்புரிமைகளை நிறுத்த முடிவு

(வோஷிங்டன்)

அமேசான் மற்றும் வால் மார்ட் ஆதரவுடன் செயற்படும் பிளிப்கார்ட் ஆகிய ஒன்லைன் வர்த்தக நிறுவனங்களின் போக்குகளைக் கட்டுப்படுத்தும் விதமாக இந்தியா கொண்டு வந்த புதிய மின் வர்த்தக விதிமுறைகளில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இந்தியா மீது கடும் அதிருப்தி அடைந்துள்ளார்.

இதனையடுத்து அமெரிக்காவுக்குள் வரியின்றி நுழையும் 5.6 பில்லியன் டொலர்கள் பெறுமான இந்திய ஏற்றுமதிகளுக்கு கிடுக்கிப்பிடி போட்டு இந்தியப் பொருட்களுக்கு அமெரிக்காவில் வழங்கப்படும் வர்த்தக சிறப்புரிமைகளை நிறுத்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் முடிவெடுத்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் இது குறித்து எழுதிய கடிதத்தில், "நான் ஏன் இந்த நடவடிக்கையை எடுக்கிறேன் என்றால் இந்திய அரசுடன் அமெரிக்க அரசு மிக ஆழமாகப் பேச்சுவார்த்தை நடத்தி இந்திய சந்தைகளில் அமெரிக்கப் பொருட்கள் தங்கு தடையின்றி நுழைவதற்கான அனுமதிகளைக் கோரிய பின்பும் இந்தியா எந்தவித உத்தரவாதங்களையும் அளிக்கவில்லை" என்று கூறியுள்ளார் ட்ரம்ப்.

அமெரிக்காவில் 'பொதுப் படையான முன்னுரிமைகள்/சிறப்புரிமைகள் திட்டம்' உள்ளது. அதில் இந்தியா உள்ளது. இதிலிருந்து இந்தியாவை அகற்ற அமெரிக்க ஜனாதிபதி தற்போது தனிப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.


2017 இல் இந்தியாவுடனான அமெரிக்காவின் சரக்கு மற்றும் சேவை வர்த்தகப் பற்றாக்குறை 27.3 பில்லியன் டொலர்கள் என்று அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதித்துவ அலுவலகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் பொதுப் படையான சிறப்புரிமைகள் கீழ் இந்தியா நிறைய பயனடைந்து வருகிறது.

தற்போது இதிலிருந்து இந்தியாவை ட்ரம்ப் நிர்வாகம் நீக்கிவிட்டால் இது ஒரு பெரிய தண்டனை தான் என்று நிபுணர்கள் கூறுகின்றனர். (7)

## பதித் தேர்தலில் டப் போவதில்லை

### வேட்பாளர் ஹிலாரி அறிவிப்பு



வேன். அதுகுறித்துப் பேசுவேன்.

நாட்டில் இப்போது நடக்கும் சம்பவங்கள் என்னை மிகுந்த சங்கடத்துக்கு ஆளாக்குகின்றன. 2020 ஜனாதிபதி தேர்தலில் நான் போட்டியிடப் போவதில்லை. ஆனால் அதற்காக எங்கும் போய் விடமாட்டேன்.

ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர்களாகப் போட்டியிட எண்ணுபவர்களிடம் பேசி வருகிறேன். ட்ரம்ப் நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் மற்றும் நிறைவேற்றாத வாக்குறுதிகளின் பட்டியலே நீளமாக இருக்கிறது.

அது குறித்துப் பேசுங்கள் என்று கூறியுள்ளேன்" என ஹிலாரி மேலும் தெரிவித்துள்ளார். (7)

## சவால்கள் இன்னும் முடியவில்லை பதிலடி கொடுக்கத் தயாராகுங்கள்

### பாக்.படையினருக்கு தளபதி முஜாகித் அழைப்பு

(இஸ்லாமாபாத்)

சவால்கள் இன்னும் முடியவில்லை, எதிரியிடம் இருந்து ஏதேனும் அத்து மீறல் உருவானால் பதிலடி கொடுக்க தயாராக இருங்கள் என பாக். விமானப் படை தளபதி முஜாகித் அன்வர் கான் பாக். படையினரை சந்தித்து கூறியுள்ளார்.

இந்தியா-பாகிஸ்தான் இடையே பதற்றம் நிலவி வரும் நிலையில், பாகிஸ்தான் விமானப்படை தளபதி முஜாகித் அன்வர் கான், நேற்று முன்தினம் எல்லைப்புற இராணுவ முகாம்களுக்கு நேரில் சென்றார். அங்கு இராணுவ, விமானப்படை வீரர்களையும் ஊழியர்களையும் சந்தித்து பேசினார். பின்னர், அவர்களிடையே பேசுகையில் விமானப் படை தளபதி கூறியதாவது.

அண்மையில் எதிரியுடனான மோதலின்போது, நாட்டின் இறையாண்மையைப் பாதுகாக்க பாகிஸ்தான் விமானப்படை சிறப்பாகச் செயற்பட்டது. இதற்காக விமானப்படை குறித்து



நாடு பெருமைப்படுகிறது. சவால்கள் இன்னும் முடியவில்லை. எனவே, படைகளை உஷாராக வைத்திருங்கள்.

எதிரியிடம் இருந்து ஏதேனும் அத்துமீறல் உருவானால், பதிலடி கொடுக்க தயாராக இருங்கள். இவ்வாறு அவர் தெரிவித்தார். (7)

## லவும் போர் நிறுத்தம் தோல்வியடையக் கூடும்

### ர் ஜெரமி எச்சரிக்கை



கப்பட்டன.


இந்த சமாதான பேச்சுவார்த்தைகளின்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளை இருதரப்பினரும் பின்பற்ற தவறினால் போர் நிறுத்தம் தோல்வியடைவதற்கான சாத்தியமுள்ளதாக ஜெரெமி ஹண்ட் எச்சரித்துள்ளார்.

நான்கு வருடங்களாக இடம்பெற்றுவரும் உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள ஏமன் நாட்டுக்கும் பட்டினியின் விளிம்பிலிருக்கும் 20 மில்லியன் ஏமன் மக்களுக்கும் இது முக்கியமான ஒரு தருணமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

போர்நிறுத்தம் தோல்வியடைந்து மறுபடியும் யுத்தம் ஆரம்பிக்கும் நிலை ஏற்பட்டால் அது மிகக் கொடூரமான மனிதாபிமான நெருக்கடியாக அமையுமெனவும் ஹண்ட் எச்சரிக்கை விடுத்துள்ளார். (7)

## தீவிரவாத அமைப்புக்களை உடன் அழிக்காவிட்டால் இந்தியாவைப் போல சர்ஜிக்கல் ஸ்ரைக் நடத்துவோம்

### பாகிஸ்தானுக்கு ஈரான் மிரட்டல்



(டெஹ்ரான்)

பாகிஸ்தானில் செயற்பட்டுவரும் தீவிரவாத அமைப்புகள் மீது இந்தியா நடத்திய சர்ஜிக்கல் ஸ்டிரைக் போல நடவடிக்கை எடுக்கப்போவதாக பாகிஸ்தானுக்கு ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈரானின் பாதுகாப்புப் படை தளபதி மேஜர் ஜெனரல் காசிம் சோலிமணி (Qasem Soleimani) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் தெரிவித்த அவர், "பாகிஸ்தான் அனைத்து அயல் நாடுகளுக்கும் தீவிரவாத அச்சுறுத்தலை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. பாகிஸ்தான் அயல் நாடுகளை அழிக்கும் அளவுக்குப் பலம்வாய்ந்த அணுகுண்டை வைத்திருக்கின்றது. அதேநேரம், உங்கள் மண்ணில் செயற்பட்டுவரும் தீவிரவாத அமைப்புகளை அழிக்க முடியவில்லையே ஏன்?" என கேள்வியும் எழுப்பியுள்ளார்.

ஈரானில் கடந்த 13 ஆம் திகதி பாதுகாப்புப் படையினர் மீது தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்தப்பட்டது. பாகிஸ்தானில் செயற்படும் தீவிரவாத அமைப்பே இந்தத் தாக்குதலை நடத்தியதாக ஈரான் குற்றஞ்சாட்டியுள்ளது. இதையடுத்தே இந்த எச்சரிக்கையை ஈரான் விடுத்துள்ளது. (7)

## சவுதி தூதரக அதிகாரியான கலாப் அல் அலியை கொன்றவருக்கு மரண தண்டனை நிறைவேற்றம்

(டாக்கா)

பங்களாதேஷில் சவுதி அரேபியா நாட்டு தூதரக அதிகாரியைக் கொன்றவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. பங்களாதேஷிற்கான சவுதி அரேபியா தூதரகத்தில் பணியாற்றி வந்தவர் கலாப் அல் அலி. பங்களாதேஷ் நாட்டின் தலைநகரான டாக்காவிலுள்ள குல்ஷான் பகுதியில் கடந்த 6.3.2012 அன்று ஒரு கும்பலால் கலாப் அல் அலி சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தக் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்ட 5 பேருக்கு டாக்கா விரைவு நீதிமன்றத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர், இந்தத் தண்டனையை எதிர்த்து குற்றவாளிகள் தொடர்ந்த மேன்முறையீட்டு வழக்கில் 4 பேரின் மரண தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது.

மரண தண்டனை உறுதிப்படுத்தப்பட்ட ஒரே குற்றவாளியான சைபுல் இஸ்லாம் மாமுன் என்பவருக்கு காசிப்பூரில் உள்ள மத்திய சிறையில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. (7)

# பாரிய மாற்றங்களுடன் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பது மாத்திரமல்லாமல் பாரிய மாற்றங்களுடனான புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று டிஜிற்றல் உட்கட்டமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் அஜித் பி.பெரேரா வலியுறுத்தியுள்ளார்.



மேலும் நிறைவேற்று அதிகாரத்தை நீக்கி புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவதாக மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியில் ஐக்கிய தேசிய முன்னணி உறுதியாகவுள்ளது.

புதிய அரசியலமைப்பினூடாக ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் நீக்கப்படுவது மாத்திரமல்லாமல் பாராளுமன்றத்தில் தெரிவு செய்யப்படும் அமைச்சரவைக்கு நிறைவேற்று அதிகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக வழிமுறைகளும் உருவாக்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

டிஜிற்றல் உட்கட்டமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவது தொடர்பில் விளக்கமளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# இலங்கை, அமெரிக்காவுடன் இரகசிய பாதுகாப்பு உடன்பாடு

## மைத்திரி–ரணில் கையெழுத்து–பிமல் எதிர்ப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அமெரிக்காவுடன் இரகசிய பாதுகாப்பு உடன்பாடுகளில் கையெழுத்திட்டுள்ளனர் என்றும் இதனால் அமெரிக்காவின் கொல்லைப் புறமாக இலங்கை மாறும் என்றும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பிமல் ரத்நாயக்க கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இதுபற்றிக் கருத்து வெளியிடுகையில்,

"இதுபோன்ற அடிபணிவு பாதுகாப்பு உடன்பாடுகளில் கையெழுத்திடுவதற்கு இலங்கையின் அரசாங்கங்களுக்கு அதிகாரமில்லை. எனவே, அரசாங்கம் உடனடியாக இந்த முயற்சியை நிறுத்த வேண்டும்.

அதிகாரபூர்வமாக ஒரு இராணுவத் தளம் நிறுவப்படாத போதிலும் 20 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகக் கூடிய இந்த இரண்டு உடன்பாடுகளும் இலங்கையில் ஒரு அமெரிக்க இராணுவத் தளத்தை அமைப்பதற்குச் சமமானதாக இருக்கும்.

இந்த உடன்படிக்கைகளின்படி அமெரிக்காவின் இராணுவ தளத்தை பராமரிப்பதற்கான அனைத்து வசதிகளையும் வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது.

அத்துடன் எந்தவொரு போரின் போதும் அமெரிக்காவின் பக்கமே இலங்கை நிற்க வேண்டும் என்றும் அழுத்தம் கொடுக்கிறது.

இந்த உடன்பாடுகளில் இருந்து விலகிக் கொள்வது இலகுவான விடயம் அல்ல.

இந்த உடன்பாடுகளால் இலங்கை, அமெரிக்காவின் ஒரு தளமாக மாறுவது தவிர்க்க முடியாதாகிவிடும்.

எனவே, இந்த உடன்பாடுகளில் கையெழுத்திடவோ, அல்லது இந்த உடன்பாடுகளை நீடித்துக் கொள்ளவோ கூடாது என்று அரசாங்கத்தைக் கோருகின்றோம்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கையின் சுகாதாரத் துறைக்கு ஜப்பான் ரூ20 பில்லியன் கொடை

(கொழும்பு)

இலங்கையின் சுகாதாரத் துறையை முன்னேற்றுவதற்கு 20 பில்லியன் ரூபாய் கொடையை வழங்குவதற்கு ஜப்பானிய அரசாங்கம் முன்வந்துள்ளது.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவிடம், இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அகிரா சுகியாமா இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

ஜப்பான் அனைத்துலக ஒத்துழைப்பு முகவரகம் ஊடாக இந்த நிதி வழங்கப்படும் என்றும் ஜப்பான் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு 2020 இற்கு முன்னதாக அறுவைச் சிகிச்சைக்கூடம் ஒன்றை வழங்க ஜப்பான் முடிவு செய்துள்ளது என்றும், இலங்கையின் சுகாதாரத் துறையை வலுப்படுத்த ஜப்பான் தொடர்ந்து ஆதரவு வழங்கும் என்றும் அவர் உறுதி அளித்துள்ளார். (இ-7)

# மாகந்துரே மதூஷால் கடத்தப்பட்ட வைரக்கல்லுடன் ஒருவர் கைது!

(பன்னிப்பிட்டிய)

பன்னிப்பிட்டிய பகுதியில் கொள்ளையிடப்பட்ட பெரும் மதிப்புடைய வைரக்கல்லுடன் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பன்னிப்பிட்டி பகுதியில் மாகந்துரே மதூஷினால் கடத்தப்பட்ட 700 கோடி ரூபாவிற்கும் அதிகம் பெறுமதியான வைரக்கல் கடத்தலுடன் தொடர்புடைய நபரே பேலியகொடையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கடத்தப்பட்ட வைரக்கல் பாணந்துறை. கெசல்வத்த பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பாணந்துறையைச் சேர்ந்தவர் ஆவார்.

இவ்வாறு மீட்கப்பட்டுள்ள வைரக்கல் மாகந்துரே மதூஷின் வழிநடத்தலில் கடத்தப்பட்ட ரூபாய் 700 கோடிக்கும் அதிகம் பெறுமதியான வைரக்கல் என பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## உணவுப்பாதையில் வெப்பநிலை

"ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப் பொறுக்கக் கூடாதா?" என்று கேட்பார்கள்.

அப்படி ஒரு பழமொழி இருக்கின்றது!

எங்களிலே ஆறப் பொறுக்காதவர்கள் பலபேர் உண்டு. சூடாவே எல்லாவற்றையும் முழுங்குபவர்கள் இவர்கள்!

சூடாக கோப்பியைக் கொண்டுவந்து அவர்கள் முன்னாள் வையுங்கள். அடுத்தவர்கள் யாரும் அதை எடுத்துக் கொள்வார்கள் என்று அவசரப்படுகின்ற மாதிரி இவர்கள் அதை "டபக்" என்று எடுத்து லபக் என்று முழுங்கிடுவார்கள்!

இப்படிச் சூடாக சாப்பிடுவது வயிற்றுக்குக் கெடுதல்!

கொதிக்க கொதிக்க ஒருத்தர் ஒரு கோப்பை கோப்பியை அவசர அவசரமாக முழுங்குகின்றார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது அவரது குடல் படாத பாடுபடுகின்றது.

முக்கியமாக அந்த உணவுக்குழல் இருக்கின்றதே அது சூடு தாங்காமல் துடிதுடிக்கின்றது!

உணவுக்குழலுடைய மேற்புறப் பகுதி இருக்கின்றதில்லையா...அது ஒரு சில விநாடிக்குள்ளே கிட்டத்தட்ட 60 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலைக்கு வந்து விடுகின்றது! அதாவது இரண்டு மடங்கு வெப்ப நிலைக்கு வந்துவிடுகின்றது!

அதேமாதிரி ஐஸ்கிறீம் சாப்பிடுகிற பொழுதும் அது உணவுக்குழலை கிட்டத்தட்ட உறைய வைத்து விடுகின்றது! மறுபடியும் உணவுக்குழல் பழைய நிலைமைக்கு வருவதற்கு கொஞ்சநேரம் ஆகின்றது! இதனால் வயிறும் குடலும் கெட்டு பெப்டிக் அல்சரும் வேறு பல வயிற்றுக்கோளாறுகளும் உண்டாகிறதுக்கு வழி ஏற்பட்டு போய் விடுகின்றது!

இதுமாதிரி மிகவும் சூடான அல்லது மிகவும் குளிர்ச்சியான உணவை சாப்பிடுகின்ற பொழுது உணவுப் பாதையின் வெவ்வேறு இடங்களிலே வெப்பநிலை எந்த அளவிலே இருக்கின்றது என்பதை தெரிந்து கொள்வதற்கு ஒரு உத்தியை கண்டு பிடித்திருக்கிறார்கள்!

பிரிட்டனிலே ஒரு விஞ்ஞானக் குழு இந்த உத்தியை உருவாக்கியிருக்கின்றது!

ஒரு மெல்லிய குழாய்! அதிலே ஆறு நுண்ணிய வெப்ப மின்னிரட்டை வெப்ப நிலைமானிகள் பொருத்தியிருப்பார்கள்!

இந்தக் குழாயை நோயாளியினுடைய தொண்டை வழியாக வயிற்றுக்குள்ளே இறக்கிறது! அது உள்ளே போய் ஜீரணப் பாதையில் பல்வேறு இடங்களிலே உள்ள வெப்பநிலையை மிகவும் துல்லியமாகக் காட்டுகின்றது!

சரி, இதைத் தெரிந்து கொண்டு என்ன ஆகப் போகின்றது என்கின்றீர்களோ? மிகவும் சூடான அல்லது குளிர்ச்சியான ஆகாரத்தை உள்ளே தள்ளுகின்ற பொழுது அதெல்லாம் வயிற்றுக்குள்ளே போய் பெப்டிக் அல்சரையும் வேறு சில ஜீரணக் கோளாறுகளையும் உண்டாக்குகிறது. எப்படி, அப்படி என்பது இதன்மூலமாகப் புரிந்துகொள்ள முடியும். அதைப் புரிந்து கொண்டால் சிகிச்சை செய்வதற்கு சுலபமாக இருக்கும் அல்லவா! செரிமானப் பாதையிலே வெவ்வேறு இடங்களிலுள்ள வெப்ப நிலையைக் கண்டு பிடிப்பதற்கு சில நாட்களாகவே பலவிதமான உத்திகளை கையாண்டு கொண்டு வருகிறார்கள்.

போன நூற்றாண்டிலே ஒரு ஆராய்ச்சியாளர் இருந்தார். அவர் ஒரு வித்தைக்காரரிடம் பேச்சுக் கொடுத்து அவரை மெதுவாக மசியவைத்து அழைத்துக் கொண்டு வந்தார். அவர் எப்படியென்றால்...ஒரு பெரிய பட்டாக்கத்தியையே முழுங்கி பின்பு வெளியே அதை எடுத்துக் காட்டுகின்ற வித்தைக்காரர். அப்பொழுதெல்லாம் இது மாதிரி வித்தைகள் அதிகம். இவருடைய ஆராய்ச்சிக்கு அதுமாதிரி ஆள்தானே தேவை. அதனாலே அவரைக் கொண்டு வந்தார்.

ஒரு நீளமான வெப்பநிலைமானியைக் கொடுத்து முழுங்கச் சொன்னார். கத்தியையே முழுங்கிறவருக்கு இதை முழுங்கிறது கஷ்டமாவா இருக்கும்? அவருக்கு இது அல்வாத் துண்டு சாப்பிடுறது மாதிரி...!

அவர் வயிற்றிலே வெப்ப நிலைமானியைச் செலுத்தி வயிற்றிலே உள்ள வெப்ப நிலையைத் தெரிந்து கொண்டார். இப்பொழுதெல்லாம்...அதுமாதிரி வயிற்றுப் பிழைப்புக்காகவோ, பொழுது போக்காகவோ பட்டாக்கத்திகளை முழுங்கிக் காட்டுகின்ற வித்தைக்காரர்கள் கிடைக்கிறது மிகவும் கஷ்டமாக இருக்கு பிரிட்டனிலே!

அதனாலே வேறுவிதமான உத்திகளைக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது! இப்பொழுது கண்டு பிடித்திருக்கின்றது கம்பியூட்டர் சம்பந்தப்பட்டது. அதனாலே துல்லியமாக கணக்கெடுக்க முடிகின்றது!

"விஞ்ஞானிகள் கணக்கெடுகின்றது ஒரு பக்கம் இருக்கட்டும்"

"இதிலே நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால்..."

எந்த ஆகாரத்தையும் அதிக சூடாகவோ அதிக குளிர்ச்சியாகவோ சாப்பிடக் கூடாது! அபூர்வமாக சில பேருக்கு உடம்பு ஒத்துக் கொள்ளும்.

அதனாலே அப்படிச் சாப்பிட்டாலும் ஒன்றும் செய்யாது...அதற்காக எல்லோரும் அதே வழியிலே போகமுடியாது!

வித்தை காட்டுகின்றவர்களுக்கு வெளியூரிலே வேணும் என்றால் பஞ்சம் இருக்கலாம்! நம்மூரிலே அப்படி இல்லை! இப்பவும் நிறைய வித்தை காட்டுகிறவர்கள் இருக்கின்றார்கள். பாம்பை முழுங்குகின்றவர்கள்...பிளேடை முழுங்கிறவர்கள்... இப்படி அப்படிப்பட்ட நண்பர் ஒருத்தர் இருக்கின்றார். அவர் எப்படி என்றால் ரூபா நோட்டையே முழுங்குவார். பின்பு வெளியே எடுத்துக்காட்டுவார்.

"என்னுடைய வயிற்றிலே ஒரு பாங்கே இருக்கும் பார்!"

"ஒரு பத்து ரூபா கொடுங்கள்" என்றார்...கொடுத்தேன்!"

அதை வாங்கி வாயிலே போட்டு முழுங்கினார். சிறிது நேரத்திலே வெளியே எடுத்தார். பார்த்தால்...11 ரூபாய் இருந்தது!

"ஒரு ரூபா அதிகமாக இருக்கின்றதே" என்றேன்.

"நான் சொன்னேனே...வயிற்றிலே பாங் இருக்கின்றது என்று...அதுதான் வட்டியோடு வந்திருக்கின்றது!" என்று சொல்லி அதை என்னிடம் கொடுத்துவிட்டார்.

இன்னொரு தடவை அப்படி கேட்டார். நான் நூறு ரூபா நோட்டை கொடுத்தேன். வட்டி அதிகமாக வருமே என்கின்ற ஆசையிலே...!

அதை வாங்கி முழுங்கினார். சிறிதுநேரம் கழித்து ஒன்றும் வரவில்லை!

"என்னங்க இது... ஒன்றையும் காணவில்லையே ..." என்றேன்.

அவர் மெதுவாக "வேறு ஒன்றுமில்லை.. இதை Fixed Deposit இலே போட்டாச்சு! ஐந்து வருடம் கழித்துத்தான் வெளியே வரும்!" என்று சொல்லிவிட்டு புறப்பட்டுப் போய்விட்டார்!


### ஐ.நாவின் விசேட பிரதிநிதியை அழைத்து

# இலங்கையின் போர்க் குற்றங்களை விசாரிப்பது பாரதூரமான செயல்

## மகிந்தவின் விசுவாசி திஸ்ஸ எதிர்ப்பு

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதி ஒருவரை இலங்கைக்கு அழைத்து போர்க்குற்றங்களை விசாரிப்பது பாரதூரமான செயல் என முன்னாள் அமைச்சரும் மகிந்த ராஜபக்ஷவின் தீவிர விசுவாசியுமான திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், "அண்மையில் வடக்கில் 5 தமிழ் கட்சிகள் கூட்டம் ஒன்றை நடத்தின. அதில் போர்க் குற்றங்களை விசாரிக்க ஐ.நா.பிரதிநிதி ஒருவரை நாட்டுக்கு அழைப்பது குறித்து தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த யோசனையை அவர்கள் மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கவுள்ளனர். அவர்களின் இந்த நடவடிக்கை நாட்டுக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

ஐ.நாவுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றாமல் இருப்பதாகவும், அரசியல் கைதிகளை விடுவிக்காதிருப்பது தொடர்பாகவும் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் பல குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

அதில்சில உண்மைகளும் காணப்படுகின்றன. ஆகவே இவற்றுக்கு அரசாங்கத்தால் பதில் வழங்க முடியும். பிள்ளையானை பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி சிறையில் அடைத்திருப்பதும் அரசாங்கத்தின் செயற்பாடாகும். மேலும் இராணுவத்துடன் உள்ள காணிகளுக்கு நட்டஈடு வழங்கினால் மக்கள் வேறு இடங்களுக்கு செல்ல தயாராகவுள்ளனர்.

இவ்வாறான விடயங்களை உள்நாட்டுக்குள்ளேயே தீர்க்க முடியும். இதற்கு ஜெனீவாவின் விசேட பிரதிநிதி ஒருவர் அவசியம் இல்லை. நாட்டை இரண்டாக பிரிப்பதற்கே இந்த செயற்பாடு நடைபெறுகின்றது.

புலம்பெயர்ந்தோர் சார்பில் பிரித்தானியாவில் செயற்பட்ட இமானுவேல் என்ற பாதிரியார் தற்போது யாழில் உள்ளார். அவருக்கும், விக்னேஸ்வரனுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது.

அரசாங்கம் ஆறு மாதங்களுக்குள்தேசிய பிரச்சினையை தீர்ப்பதாக கூறியது. ஆனால் அதனை செய்யவில்லை.

தற்போது மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கம் சார்பில் யாரையும் அனுப்பாமல் இருக்க எடுத்த முடிவு பிரித்தானியாவிற்கு ஏற்றவகையில் செயற்பட வழிவகுத்துள்ளது. அமெரிக்காவே இதன் பின்னால் இருந்து செயற்படுகின்றது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ராஜீவ் படுகொலையையும் விபத்து என்பீர்களா?

## காங்கிரஸிடம் பா.ஜ.க.கேள்வி

(சென்னை)

ராஜீவ் காந்தி படுகொலையையும் விபத்து என்பீர்களா என்று புல்வாமா தாக்குதல் குறித்து காங்கிரஸின் கருத்துக்கு பா.ஜ.க.பதிலடி கொடுத்துள்ளது.

பாலகோட் தாக்குதலில் உயிரிழந்த தீவிரவாதிகளின் எண்ணிக்கையில் குழப்பம் நீடித்துவருவதாகவும்புல்வாமா தாக்குதலை விபத்து என்றும் காங்கிரஸ் மூத்த தலைவர் திக்விஜய் சிங் கருத்து தெரிவித்திருந்தார். இது பலத்த சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், இதுகுறித்துப் பேசிய மத்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் வி.கே.சிங், "புல்வாமா தாக்குதலை விபத்து என்று காங்கிரஸ் சிரேஷ்ட தலைவர் திக்விஜய் சிங் கூறியுள்ளார். மிகுந்த மரியாதையுடன் அவரிடம்ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். ராஜீவ் காந்தியின் படுகொலையை விபத்து என்பீர்களா அல்லது தீவிரவாதிகளின் தாக்குதல் என்பீர்களா?

பாலகோட் விமானத் தாக்குதல் ஒரேயோரு இடத்தில் மட்டுமே நடைபெற்றது. வேறெங்கும் இல்லை. தாக்குதல் நடைபெறும் இடம் கவனத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்டது. பொதுமக்கள் உயிரிழப்பைத் தடுக்கும் வகையில், தாக்குதல் நடத்தப்பட்டது.


தாக்குதலில் இறந்தவர்களின் எண்ணிக்கை குறித்துக் கேட்கிறீர்கள். அங்கிருந்த கட்டடங்களில் உள்ள வீடுகளின் எண்ணிக்கையையும் அங்கு வசித்தவர்களின் எண்ணிக்கையையும் தோராயமாக மதிப்பிட்டோம். அதைத்தான் அமித்ஷா, 25இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகத் தெரிவித்தார். இது உத்தேசமான தகவலே தவிர உறுதிப்படுத்தப்பட்ட தகவல் அல்ல" என்றார் வி.கே.சிங்.(7)

# எமது இனம் இன்னொரு இனத்தைச் சாரும் நிலையை நாமே ஏற்படுத்துகின்றோம்

## வியாழேந்திரன் விசனம்

(ஏறாவூர்)

எங்களுடைய இனம் இன்னொரு இனத்திடம் கையேந்துகின்ற நிலையை நாமே ஏற்படுத்துகின்றோம் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.



அத்துடன் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இருப்பு பேராபத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. இந்நிலையில் தமிழர்களை நேசிக்கின்ற தமிழ்த் தலைமைகளுடன் இணைந்து செயற்படுவதற்குத் தயாராகவிருப்பதாக அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பில்நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர்மேலும் தெரிவிக்கையில், "கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இருப்பானது பேராபத்தை நோக்கி சென்றுகொண்டிருக்கின்றது. நல்லிணக்கம் என்ற பெயரில் தமிழர்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகின்றனர்.

சிலருக்கு இதைச் சொல்வதற்கு பயம். காரணம் தங்கள் நல்லிணக்க உறவுகள் கெட்டுவிடும் என்பதாலாகும். தங்கள் உறவுகளைப் பற்றி மட்டுமே சிந்திக்கின்றனரே தவிர தங்கள் இனம் சார்ந்து சிந்திக்கின்ற தன்மை இல்லாமற்போய்விட்டது.

ஒரு இனத்தின் இருப்பை தக்க வைத்துக்கொள்வதற்கான நான்கு தூண்களாக இருப்பவை நிலம்,மொழி, கல்வி மற்றும் பொருளாதார பண்பாட்டு அம்சங்கள் போன்றவையாகும்.

இந்த நான்கு தூண்களையும் நாங்கள் பாதுகாக்க வேண்டும். ஆனால் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் நிலம், தமிழர்களின் கல்வி, மொழி, பண்பாடு, பொருளாதாரம் ஆகிய நான்கு தூண்களிலும் பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன. தமிழர்கள் தங்கள் இருப்பை தக்கவைத்துக்கொள்வதற்கு போராடவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணம் இன்று முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண அமைச்சராக நாட்டின் பிரதமரே இருக்கும்போது கிழக்கு மாகாணம் முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளது.


கிழக்கு மாகாணத்தையும் இங்குள்ள தமிழ் மக்களையும் வளங்களையும் எங்களது உயிருக்கும் மேலாக நாம் நேசிக்கின்றோம்.

எனவே, எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலானாலும் கிழக்கில் உள்ள தமிழர்களை நேசிக்கின்ற தமிழ்த் தலைமைகளுடன் இணைந்துசெயற்படுவதற்கு நாங்கள் தயாராகவிருக்கின்றோம். நான் பிரதேசவாதம் பேசவில்லை. ஆனால் எமது மாகாணம் பாதுகாக்கப்பட வேண்டும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நிறைவேற்று அதிகாரத்தை நீக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது

## அமைச்சர் திகாம்பரம் திட்டவட்டம்

(ஹற்றன்)



நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையால் சிறுபான்மை மக்கள் பயனடைவர் எனத் தெரிவித்துள்ள, மலையக புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம், அதை நீக்கும் முயற்சிக்கு இடமளிக்க முடியாதெனவும் தெரிவித்துள்ளார்.

ஹிங்குராங்கத்த லூல்கந்துர தோட்டத்தில், 335 வீடுகளை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெருந்தோட்ட மக்களுக்கு, கடந்த நான்கு ஆண்டுகளாகத்தான், அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கான சந்தர்ப்பம் அமைந்துள்ளது என்றும் அதை வலுப்படுத்தும் வகையிலேயே, பிரதேச சபைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் கூறிய அவர், அதேபோல, விரைவில் பிரதேச செயலகங்களும் அமையவுள்ளன என்றும் தெரிவித்தார்.

வீடமைப்புத் திட்டங்கள் விரைவாக மேற்கொள்ளப் படுவதுடன், காணி, வீட்டு உரிமைப் பத்திரங்களும் வழங்கப்பட்டு வருதாகத் தெரிவித்த அவர், மலையகத்துக்கான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு வசதியாகவே, மலையக அபிவிருத்தி அதிகார சபையும் உருவாக்கப்பட்டுள்ளதெனவும் தெரிவித்தார்.

வீடுகள் கிடைக்கவில்லையென, மக்கள் தம்முடன் முரண்படுவதாகவும் மலையக தொழிலாளர்களுக்கு, கட்டப்பட வேண்டியுள்ள ஒரு இலட்சத்துக்கு 60 ஆயிரம் வீடுகளையும் ஒரே தடவையில் கட்டிக்கொடுத்துவிட முடியாதென்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில், 8 ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாகவும் நான்கு ஆண்டுகளில், இவ்வளவு செய்ய முடியுமாயின், கடந்த 40 ஆண்டுகளாக அரசியல் செய்தவர்கள் நினைத்திருந்தால், வீட்டுப்பிரச்சினைக்கு முழுமையாக தீர்வு கண்டிருக்கலாம் எனவும் தெரிவித்தார்.

மேலும் மலையகத்தில் நீர் வசதிகளை மேம்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகவும் தனித்து நின்று வெற்றிபெற முடியாத காரணத்தால், தமிழ் முற்போக்குக்கூட்டணியாக இணைந்து நாடாளுமன்றத்தில் அரசியல் பலத்துடன் செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் இந்நாட்டின் அனைத்து இன மக்களும் பயனடையும் வகையிலேயே, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை கொண்டுவரப்பட்டதாகவும் இந்த முறையே, நாட்டுக்கு பொருத்தமானதெனவும் இந்த முறை காணப்பட்டதாலேயே, அமிர்தலிங்கம், எதிர்க்கட்சி தலைவராகத் தெரிவாகக் கூடிய வாய்ப்பு கிடைத்ததெனவும் அவர் தெரிவித்தார்.

அதனால், ஜனாதிபதி முறைமையை மாற்ற முயற்சிப்பவர்களுக்கு இடமளிக்க கூடாதெனக் கூறிய அவர், மாற்றப்படும் பட்சத்தில், சிறுபான்மை மக்களே பாதிக்கப்படுவர் என்றும் எச்சரித்ததோடு, பழைய முறையிலேயே அடுத்த தேர்தல்களை நடத்த வேண்டுமெனவும் தெரிவித்தார்.

மேலும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டால், அவருக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாகவும், 2020ஆம் ஆண்டு மலையக மக்களின் வீட்டுத் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்த பின்னர், அடுத்த ஆட்சியில் மேலும் பல அபிவிருத்திகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# எனது எதிர்பார்ப்பு அனைவருக்கும் ஒன்றுபோல் சட்டத்தை அமுல்படுத்தும் பொலிஸ் சேவையே

## ஜனாதிபதி மைத்திரி வெளிப்படுத்தல்

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் தான் பொலிஸ் திணைக்களத்திடம் எதிர்பார்ப்பது பட்டம், பதவி, கட்சி என்ற எவ்வித வேறுபாடுகளும் இன்றி அனைவருக்கும் ஒன்றுபோல் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொலிஸ் சேவையாகும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இலங்கை பொலிஸ்திணைக்களத்தின் எதிர்காலச் செயற்பாடுகள் மற்றும் சவால்கள் தொடர்பாக நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொலிஸ் திணைக்களத்தின் அனைத்துப் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி சிரேஷ்ட அதிகாரிகள் இந்த கலந்துரையாடலில் பங்குபற்றியதுடன், ஒவ்வொரு பிரிவினதும் செயற்பாடுகள் பற்றி அவர்கள் விளக்கமளித்தனர்.

இதன் போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி தனது அரசியல் வாழ்க்கையில் குற்றவாளிகள் பற்றி பேசுவதற்கு தான் எந்தவொரு பொலிஸ் நிலையத்திற்கும் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டதில்லை என்றும் தெரிவித்தார்.

மக்கள் நேய சேவையை வழங்கும் அதேநேரம் குற்றவாளிகளுக்கு எதிராக உரிய நடவடிக்கையை எடுத்து நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களை உரிய முறையில் மேற்கொள்வதற்கு பொலிஸ் சேவையிலுள்ள அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.





மேலும் பொலிஸ் திணைக்களத்தின் பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்து அதன் முன்னேற்றத்திற்காக நடவடிக்கை எடுப்பது போன்று நாளாந்தம் பொலிஸ் நிலையங்களுக்கு கிடைக்கும் முறைப்பாடுகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கு விஞ்ஞான பூர்வமாக தயாரிக்கப்பட்ட முறைமையொன்று அவசியம் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இதற்காக நிபுணர்களின் உதவியைப் பெற்று உரிய முறைமையொன்றை தயாரிக்க வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி முன்னைய முறைப்பாடுகள் பற்றி ஆராய்ந்து குறுங்கால, இடைக்கால மற்றும் நீண்ட கால நிகழ்ச்சித்திட்டங்களின் அடிப்படையில் அந்த திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும் என்றும் தெரிவித்தார்.

அபிவிருத்தியடைந்த நாடொன்றின்பண்பு பொலிஸ் நிலையம் அல்லது சிறைக்கூடங்களை அதிகரிப்பதன்றி குற்றங்களை தவிர்ப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய சமூக மாற்றம் பற்றி கவனம் செலுத்துவதாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பொலிஸ் அதிகாரிகளின் ஆட்சேர்ப்பு, இடமாற்றம் மற்றும் நலன்பேணல் நடவடிக்கைகள் பற்றியும் இதன் போது விரிவாக கலந்துரையாடப்பட்டது. கொள்கை ரீதியான தீர்மானமொன்று இல்லாமல் பொலிஸ் நிலையங்களை தாபிப்பதன் மூலம் ஏற்படும் பௌதீக வளம் தொடர்பான பிரச்சினைகள் பற்றியும் ஜனாதிபதி கவனம் செலுத்தியதுடன், எதிர்காலத்தில் பொலிஸ் நிலையங்களை தாபிக்கும் போது ஒரு குழுவொன்றின் ஊடாக அதுபற்றி தீர்மானம் மேற்கொள்வதை கொள்கை சார்ந்த விடயமாக நடைமுறைப்படுத்துமாறும் பணிப்புரை விடுத்தார்.

இதன்போது அப்பிரதேசத்தின் மக்கள் தொகை, கிடைக்கும்முறைப்பாடுகள் உள்ளிட்ட ஏனைய பின்னணிகள் பற்றி கவனம் செலுத்த வேண்டிய தன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

குறிப்பாக வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்களுக்கு தமிழ் மொழி பேசக்கூடிய பொலிஸ் அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் பற்றியும் கேட்டறிந்த ஜனாதிபதி, இந்த விடயத்தை மேலும் பலப்படுத்துமாறும் பணிப்புரை விடுத்தார்.

கணனி குற்றங்களை ஒழிப்பதற்காக பொலிஸ் அதிகாரிகளை பயிற்றுவித்தல் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகளின் பயிற்சி நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டதுடன், வடக்கில் நிர்மாணிக்கப்படவுள்ள பொலிஸ் பயிற்சி நிலையத்தின் பணிகளைக் துரிதப்படுத்துமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

இதேநேரம் கொழும்புக்கு வெளியே பிரதான வைத்தியசாலைகளில் பொலிஸ் அதிகாரிகளுக்கு தனியான வாட்டுத் தொகுதிகளை அமைக்கும் நிகழ்ச்சித்திட்டம் பற்றியும் ஜனாதிபதி கவனம் செலுத்தினார்.


மேலும் தூரப் பிரதேசங்களில் இருந்து கடமை நிமித்தம் கொழும்புக்கு வரும் பெண் பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகளின் வசதிகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் பற்றியும் ஜனாதிபதி அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

பொலித்தீன் தடையை நடைமுறைப்படுத்தல் உள்ளிட்ட சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் பொலிஸ் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகள் பற்றியும் ஜனாதிபதி குறிப்பிட்டதுடன், தூரப் பிரதேச பேருந்துகளில் இடம்பெறும் கப்பம் வாங்கும் விடயம் பற்றியும் தெரிவித்தார். அது பற்றி துரிதமாக கவனம் செலுத்தி நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துமாறும் பொலிஸ் திணைக்களத்திற்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

திருப்தியாக தனது மக்கள் சேவையை வழங்குவதற்காக பொலிஸ் திணைக்களத்தின் கீழ் வகுப்பு அதிகாரிகளின் அனைத்து பிரச்சினைகளுக்கும் கட்டம் கட்டமாக தீர்வுகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இதே நேரம் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளிலும் குற்றங்களை ஒழிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களிலும் பொலிஸ் திணைக்களம் வழங்கும் ஒத்துழைப்பை பாராட்டிய ஜனாதிபதி , பொலிஸ் திணைக்களத்தை தனக்குக் கீழ் கொண்டு வந்தது முதல் தனக்கு அனைவரும் வழங்கும் ஒத்துழைப்புக்காக நன்றி தெரிவித்தார். (இ-7)

## இந்திய சிற்பி கௌரவிப்பு





(கண்டி)

இந்தியாவின் புத்தகயாவையொத்த அமைப்பைக் கொண்டதாக புத்தகயா ஸ்தூபி ஒன்று கண்டி பேராதனை சுபோதாராம மஹா விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

மேற்படி திறப்பு விழா நிகழ்வின் போது அதனை நிர்மாணித்த இந்திய சிற்பியான மாமல்லபுரம் ஸ்தபதி அசோக்குமார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் கௌரவிக்கப்பட்டார். (இ-7)

## திரவ எரிவாயு மின்னுற்பத்தி நிலையங்களை இலங்கையில் அமைக்க சீனா உதவுமாம்

(கொழும்பு)

இலங்கையில் மின் விநியோக கட்டமைப்பை வலுப்படுத்த, திரவ எரிவாயு மின்னுற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கு உதவத் தயாராக இருப்பதாக சீனா தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சக்தி மற்றும் வணிக அபிவிருத்தி அமைச்சர் ரவி கருணாநாயக்கவைச் சந்தித்த இலங்கைக்கான சீனத் தூதுவர் செங் ஷியுவான், இந்த விருப்பத்தை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் எரிவாயு மின் நிலையங்களை அமைப்பது குறித்து இந்தச் சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டதுடன், அம்பாந்தோட்டையில் எரிவாயு மின் நிலையம் ஒன்றை சீனாவின் உதவியுடன் அமைப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டுளளது.

அத்துடன், சீனாவின் பிரதான மின் நிலையங்களைப் பார்வையிடுவதற்கு அங்கு பயணம் மேற்கொள்ளுமாறும் அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு சீனத் தூதுவர் அழைப்பு விடுத்துள்ளார். (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

187



“தமிழரின் சமூக-பொருளாதார நிலைமை 1870 வரை ஒப்பீட்டளவில் மாற்றத்திற்கு உள்ளாகவில்லை. 1870லிருந்து சனத்தொகை பெருகி நெடுஞ்சாலைகள், புகையிரதப் பாதைகள் என்பன அமைத்தல் விரிவாக்கமடைந்து, விவசாயம், நீர்ப்பாசனம், கைத் தொழில், வியாபாரம், கல்வி, வேலைவாய்ப்பு என்பன செழிக்கத் தொடங்கின”

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

தீபகற்பத்தின் எல்லாப் பாகங்களிலிருந்தும் பல அறிஞர்கள் இதன் ஆரம்பக் கூட்டத்திற்கு சமுகமளித்திருந்தனர். தமிழ் மாணவரின் ஆற்றலைக் கவனிப்பதற்கான தமிழ்க் கல்விப் பரீட்சைகளை நடத்தி அவற்றின் பெறுபேற்றின் அடிப்படையில் அவர்களுக்கு வெகுமதிகளும் பட்டங்களும் அளிப்பது இச்சங்கத்தின் பிரதான நோக்கமாக இருந்தது.

இதே நோக்கங்களுக்காக ஒரு தமிழ்ச் சங்கம் 1901 இல் தமிழ் நாட்டில் மதுரையில் உருவாக்கப்பட்டது. தோற்றுவிக்கப்பட்ட காலத்திலிருந்தே இவ்விரு சங்கங்களும் தமிழ்க் கல்வி, கலாசாரம் என்பவற்றை மேம்படுத்துவதற்கும் விருத்தி செய்வதற்கும் மிகுந்த பங்களிப்பை ஆற்றின.

சைவ பரிபாலனசபை; தமிழ்ச் சங்கம் இரண்டும் இணைந்ததமிழ்க் கலாசாரக் கல்வியை மேம்படுத்துவதிலும் பெருமளவிலான சமூக, அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் மேற்கொண்ட முயற்சிகள், சைவம் என்ற பதாகையின் கீழன்றி தமிழ் இலட்சியம் என்ற பதாகையின் கீழ் தமிழ்ச் சமூகம் முழுவதையுமே தழுவி இதன்வழி இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் அவர்களது சமூக, அரசியல் அபிலாசைகளைத் தூண்டுவதில் முக்கிய பங்கை ஆற்றின.

### சமூக, பொருளாதார நிலைமைகள்

இதற்கு முந்திய அத்தியாயத்தில் பிரித்தானிய கால ஆரம்ப கட்டத்திலான (1850 வரை) தமிழரின் சமூக-பொருளாதார வளர்நிலை பற்றி நாம் ஆராய்ந்தோம். தமிழரின் சமூக-பொருளாதார நிலைமை 1870 வரை ஒப்பீட்டளவில் மாற்றத்திற்கு உள்ளாகவில்லை.

1870லிருந்து சனத்தொகை பெருகி நெடுஞ்சாலைகள், புகையிரதப் பாதைகள் என்பன அமைத்தல் விரிவாக்கமடைந்து, விவசாயம், நீர்ப்பாசனம், கைத்தொழில், வியாபாரம், கல்வி, வேலைவாய்ப்பு என்பன செழிக்கத் தொடங்கின.

இக் காலகட்டத்தின் மையமாக விளங்கும் 1900 வரையிலான இந்த வளர்நிலைகளை இவ் அத்தியாயத்தில் மேற்கொண்டு நோக்குவது அவசியமாகும்.

துரிதமாக அதிகரித்த மக்கள் தொகைப் பெருக்கமும், நில மற்றும் ஏனைய வளங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலே காணப்பட்டதும், யாழ். குடா நாட்டுத் தமிழரைப் பெருந்தொகையில் இடம்பெயர வைத்தன.

அவர்கள் வன்னிப் பெருநிலப்பரப்புக்கும் கிழக்கு மாகாணத்தின் தமிழ்ப் பிரதேசங்களுக்கும், தெற்கிலும் மேற்கிலுமுள்ள சிங்களப் பிரதேசங்களுக்கும், இந்தியாவுக்கும் மலேசிய தீபகற்பத்துக்கும் இடம் பெயர்ந்தனர். நெடுஞ்சாலை, புகையிரதப் பாதைகள் அமைக்கப்பட்டது இடப்பெயர்வுக்கு இடமளித்தது. அதைப் போன்றே இந்த இடங்களில் நிலவிய விவசாய நிலைமைகள் நீர்ப்பாசன அபிவிருத்திகள், வர்த்தகச் செயற்பாடுகள், கல்விவாய்ப்புகள் என்பவற்றின் அபிவிருத்தியடைந்த சூழ்நிலைகளும் இந்த இடப் பெயர்வுக் காரணமாகின.

இவற்றின் விளைவாக பல் வேறு அரச, தனியார் துறைகளிலும் தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டு அவற்றில் தமிழர் இடம்பெறுவதற்கு வரவேற்பு வழங்கப்பட்டது. தமிழர் சமூக, பொருளாதாரத் துறையில் பலம் பெற ஆரம்பிக்கையில் ஒரு பரந்த அளவிலான தமிழ்ச் சமூக ஒற்றுமையுணர்வு தோன்றலாயிற்று. இந்த உணர்வே ஈற்றில் இருபதாம் நூற்றாண்டில் அரசியல் ரீதியான தமிழ் அடையாளம் மேலும் அதிக விருத்தியடைவதற்கு வழிசமைத்தது.

### தமிழர் சனத்தொகை

இலங்கையின் சனத்தொகையை கவனத்துக்கெடுக்காது தமிழர் சனத்தொகையையிட்டு ஆராய்வது மிகவும் சிரமமாகும். 1871 குடிசனமதிப்பு நியாயமான அளவு சரியானதெனச் சொல்லப்படுகின்றது.

1901 குடிசனமதிப்பு பல்வேறு தகைமையான தகவல்களைத் தந்ததுடன் முதற் தடவையான இனவேறுபாடு களை விடப் பிரதேச வேறு பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. 1911 ஆண்டின் சனத்தொகைக் கணக்கெடுப்பு இன அடிப்படையில் அமைந்திருந்தது.

இந்தக் காலகட்டத்தில், இரு காரணங்களின் நிமித்தம் இலங்கைச் சனத்தொகையில் குறிப்பிட்டுச் சொல்லுமளவு அதிகரிப்புக் காணப்பட்டது. இவை இயற்கை அதிகரிப்பு, குடிவரவு என்பனவாகும்.

1871 இல் இலங்கை முழுவதுமான சனத்தொகை 2,400,380 ஆகவிருந்து 1901 இல், 3,565,954 ஆகி இதன்வழி 1,165,574 எண்ணிக்கையால் அதிகரித்திருந்தது.

பின்வரும் அட்டவணையில் காணப்படுவதுபோல், 1871-1881 மற்றும் 1891-1901 காலப் பகுதிகளில் குடிவரவில் ஏற்பட்ட அதிகரிப்பு இயற்கை அதிகரிப்பை விடக் கூடியதாக விருந்தது. இலங்கைச் சனத்தொகையின் இயல்பானதும் குடிவரவால் ஏற்பட்டதுமான அதிகரிப்பு 1871-1901

| காலம் | குடிசன மதிப்பிற்கு இடைப்பட்ட கால அதிகரிப்பு | பிறப்பு | இறப்பு | இயற்கை அதிகரிப்பு | குடிவரவால் ஏற்பட்ட அதிகரிப்பு |
|---|---|---|---|---|---|
| 1871-1881 | 359,358 | 08,150 | 588,358 | 119,792 | 239,556 |
| 1881-1891 | 248,051 | 836,636 | 692,376 | 114,260 | 103,791 |
| 1891-1901 | 558,165 | 1,122,041 | 896,635 | 225,406 | 332,759 |

(தொடரும்)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## பனங்கிழங்கு, ஒடியல், புளுக்கொடியல் பனங்கட்டி ஆகியவற்றின் மருத்துவப் பண்புகள்




டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

தானாக வளரக் கூடிய பனை மரத்தின் பாகங்களாகும். காற்றுத் தடைப் பயிராக வெப்ப மண்டல நாடுகளில் வளர்க்கப்படுகின்றது. பனைமரம் 100 ஆண்டுகளுக்குபின்னும் வளரும் தன்மை கொண்டது.

பனங்கட்டி மலச்சிக்கல் , சளித்தொல்லை ஏற்படாது இருக்க உணவுடன் பனங்கட்டியை சேர்த்து பயன்படுத்தலாம். பனங்கட்டியில் Non Reducing Sugar தாழ்த்தப்படாத வெல்லம்) கூடுதலாக இருப்பதால் நோயிலிருந்து விடுபட்டு உடல் தேறி வருபவர்கட்கு சக்தி அளிக்கும் உணவாகவும் பயன்படுத்தலாம். எனவே கஞ்சி வகைகள், ஆடிக்கூழ் , எள்ளுப்பாகு ஆகியவற்றில் பனங்கட்டி சேர்ப்பது சிறந்தது.

அத்துடன் இரும்புச்சத்து, கல்சியம் சத்தும் காணப்படுவதால் கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மாருக்கு இது சத்து மிக்க உணவாகும்.





அதே போல் ஒடியலில் இருந்து தயாரிக்கப்படும் ஒடியல் கூழ், ஒடியல் பிட்டு மலமிளக்கியாக செயற்பட்டு குடலை சுத்தம் செய்ய உதவும்.

இதிலுள்ள கரடு முரடான நார்ப்பொருள் இரத்தத்தில் கொலஸ்ரோலின் அளவை அதிகரிக்க விடாது. மற்றும் அவித்த கிழங்கை இரண்டாக பிளந்து காய வைத்து புளுக்கொடியல் மா– சத்து மாப் போல் பயன்படுத்தலாம். இதில் .இன்னொரு முக்கிய விடயம் பனங்கிழங்கு, ஒடியல்மா என்பன பூஞ்சணம் பிடிக்கும் போது அப்பூஞ்சணம் Aflatoxin எனும் ஒரு நச்சை உருவாக்கும். இது ஈரலில் நஞ்சை விளைவிக்கும். எனவே பனை உணவுகளை பயன்படுத்துவோர் அதை பூஞ்சணம் பிடிக்காது பாதுகாத்துபயன்டுத்துவதால்உரிய பயன்களை பெற்றுக் கொள்ளலாம்.

எனவே போசாக்கு நிறைந்ததும், பொருளாதார ரீதியில் இலகுவாக கிடைக்கக் கூடியதுமான எமது சீதோஷ்ண நிலைக்கு உகந்த பனம் பொருட்களை பயன்படுத்துதல் ஆரோக்கியத்திற்கு அவசியமாகும்.

மேலும் பனங்கிழங்கு சேர்ந்த வடை, துவையல் போன்றவற்றில் உள்ளி, வெங்காயம், மிளகு போன்றவற்றை சேர்த்து பயன் படுத்தலாம்.

**100 கிராம் பனங்கிழங்கிலுள்ள சத்துக்கள்**

ஈரலிப்பு -54.5 கிராம், புரதம்-5.4 கிராம், கொழுப்பு-0.6 கிராம், காபோவைதரேற்று- 67 கிராம் ,கல்சியம்- 21 மில்லிகிராம், பொசுபரஸ் 10 மி.கிராம், இரும்பு- 2.0 மி.கிராம், நார்ப் பொருள் 11.6 கிராம்.

**100 கிராம் பனங் கட்டி யிலுள்ள சத்துக்கள்**

ஈரலிப்பு- 4.7 கிராம், புரதம்- 0.2 கிராம், கொழுப்பு- 0.04 கிராம், காபோவைதரேற்று- 99 கிராம், கல்சியம்- 58 மி.கிராம், பொசுபரசு– 5.0 மி.கிராம், இரும்பு- 1.4 மி.கிராம், தயமின்- 21மைக். கிராம், ரைபோபிளேவின்- 82 மை. கிராம், உயிர்ச்சத்து- 11 மி.கிராம்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1662

### கிருசாந்தி

அழகான உருவத்தைவிட அழகான நடத்தையே மிக நல்லது



### அனு

கணவன்: நெஞ்சுவலிக்குது டாக்டருக்கு போன் பண்றியா?
மனைவி: உங்க செல்போன் பாஸ்வேர்ட் சொல்லுங்க
கணவன்: இப்ப பரவாயில்லை போன் பண்ண வேண்டாம்



### சஞ்சிகா

இன்னாரைப்போல் வாழவேண்டும் என்று நாம் நினைப்பதைவிட நம்மைப்போல் வாழவேண்டும் என்று பிறர் எண்ணும் அளவிற்கு நீாம் வாழ்ந்து காட்டுவதே சிறப்பு



### தனு

பிரியமானவர்கள் ஒருபோதும் நம்மைக் காயப்படுத்த மாட்டார்கள் என்று நம்பவேண்டாம் சில சமயம் எதிரியைவிட மோசமாகக் காயப்படுத்திவிடுவார்கள்



### மலர்

அடுத்த நிமிடம்கூட நமக்கு நிச்சயம் இல்லை. இதில் திமிர், வெறுப்பு, கோபம், ஆணவம் போன்ற அழுக்கை சுமந்து சாகாதே, அன்பை மட்டுமே நேசியுங்கள்



### சுந்தர்

உன்னைத் தேவையில்லை என்று முடிவு கட்டிவிட்டவர்களுக்கு நீ எதைச் செய்தாலும் தப்பாகவே தெரியும்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# உதவிக் கல்விப் பணிப்பாளரிடம் இலஞ்சம் பெற்ற இரண்டு போக்குவரத்து பொலிஸார் பணிநீக்கம்

(ஏறாவூர்)

மட்டக்களப்பில் மது போதையில் மோட்டார் சைக்கிளை நிறுத்தாது சென்ற உதவி கல்விப் பணிப்பாளர் ஒருவரை தாக்கி அவரிடம் 10 ஆயிரம் ரூபாய் இலஞ்சம் வாங்கிய இரண்டு போக்குவரத்து பொலிஸார் இடைக்கால பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக மட்டு.தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்து மேலும் தெரிய வருதாவது,

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரண்டு போக்குவரத்து பொலிஸார் சம்பவதினம் மாலை 6 மணியளவில் பிள்ளையாரடி பகுதியில் வீதிச் சோதனைக் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது குறித்த மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு பணித்தனர்.

போக்குவரத்து பொலிஸாரின் கட்டளையை மீறி குறித்த நபர் மோட்டார் சைக்கிளை நிறுத்தாது சென்றதையடுத்து பொலிஸார் அவரை பின் தொடர்ந்து சத்துருக் கொண்டான் பகுதியில் வைத்து மடக்கிப்பிடித்த போது அவர் மதுபோதையில் இருப்பதைக் கண்டு அவரை தாக்கி அவரிடம் இருந்து 10 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாக இரண்டு போக்குவரத்து பொலிஸாரும் பெற்றுள்ளனர்.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் பொலிஸ் உயர் அதிகாரியின் கவனத்திற்கு கொண்டு சென்றதையடுத்து பொலிஸ் திணைக்களத்திற்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் செயற்பட்ட குற்றச்சாட்டில் இரண்டு போக்குவரத்து பொலிஸாரையும் கிழக்கு மாகாண பொலிஸ் மா அதிபர் உடனடியாக கடமையிலிருந்து இடைக்கால பணிநீக்கம் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த ஜனவரி மாதம் 5 ஆம் திகதி கல்லடி பாலத்திற்கு அருகில் சாரதி அனுமதிப்பத்திரமின்றி மோட்டார் சைக்கிளைச் செலுத்திய ஒருவரிடம் 7 ஆயிரம் ரூபாய் இலஞ்சம் வாங்கிய இரண்டு போக்குவரத்து பொலிஸார் கைது செய்யப்பட்டு அவர்களும் கடமையில் இருந்து இடைக்கால பணி நீக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# திகன வன்முறையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசால் விரைவில் நட்டஈடு வழங்கப்படும்

## அமைச்சர் ஹலீம் தகவல்



(கொழும்பு)

கண்டி, திகன பகுதிகளில் 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட சொத்துகளுக்கான நட்டஈடுகளை துரிதமாக வழங்குவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். அதற்கிணங்க விரைவில் பாதிக்கப்பட்ட சொத்துக்களுக்கு நட்டஈடுகள் வழங்கப்படும் என அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் எம். எச்.ஏ. ஹலீம் தெரிவித்தார்.

கண்டி மற்றும் திகன பகுதிகளில் வன்செயல்கள் இடம்பெற்று ஒரு வருடம் பூர்த்தியாகியுள்ள நிலையில் நூற்றுக்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்ட சொத்துகளுக்கு இதுவரை நட்டஈடு வழங்கப்படாமை தொடர்பில் வினவியபோதே அமைச்சர் ஹலீம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இடம்பெற்ற வன்செயல்களால் பாதிக்கப்பட்ட சொத்துக்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கான அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. வழங்கப்படவுள்ள நட்டஈடுகள் பற்றி கண்காணிப்பு (Observation) செய்வதற்காக விபரங்கள் நிதியமைச்சு உட்பட சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட அமைச்சுகளிடமிருந்து பதில்கள் கிடைத்ததும் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் நட்டஈடுகள் வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட சொத்துக்களில் 174 சொத்துகளுக்கே இதுவரை நட்டஈடு வழங்கப்படாதுள்ளது. 174 சொத்துகளுக்கும் 17 கோடி 5 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய் நட்டஈடு வழங்கப்படவுள்ளது. இச்சொத்துகள் ஒவ்வொன்றும் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட இழப்பீடுகளைக் கொண்டுள்ளதால் அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றே வழங்கப்பட வேண்டும். தற்போது அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என புனர்வாழ்வு அதிகாரசபையின் மேலதிகப் பணிப்பாளர் எஸ்.எம். பதூர்தீன் தெரிவித்தார்.

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட சொத்துக்களுக்கு நட்டஈடு கோரிய விண்ணப்பங்களில் 546 சொத்துகளுக்கு நட்டஈடு வழங்குவதற்கு புனர்வாழ்வு அதிகாரசபை தேவையான நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்திருந்தது.

இவற்றில் தலா ஒரு இலட்சத்துக்கு உட்பட்ட நட்டஈடுகள் 372 சொத்துகளுக்கு வழங்கப்பட்டு விட்டன. இச்சொத்துகளுக்கு 19 கோடி 48 இலட்சத்து 45 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. தற்போது 174 சொத்துகளுக்கே நட்ட ஈடு வழங்கப்பட வேண்டியுள்ளது. இதில் பள்ளிவாசல்களும் அடங்கியுள்ளன.

நட்டஈடு பெற்றுக் கொள்ள விண்ணப்பித்த விண்ணப்பங்களில் 16 விண்ணப்பங்கள் நிலுவையிலுள்ளன.

அச்சொத்துக்களின் நட்டங்களை மதிப்பீடு செய்ய முடியாது என மதிப்பீட்டு திணைக்களம் அறிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட பொருட்களுக்கான ஆவணங்கள் இன்மையே இதற்கான காரணமாகும். இதற்கென ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் சிபாரிசின்படி 16 சொத்துகளுக்கான நட்டஈடு வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை கண்டி, திகன வன்செயல்களால் பாதிக்கப்பட்ட சொத்துகளுக்கு தாமதமில்லாமல் நட்டஈடுகளை வழங்குமாறு அமைச்சர்கள் ரவூப் ஹக்கீம், றிசாத் பதியுதீன் ஆகியோரும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கட்டுநாயக்கவில் மூவர் கைது




(கொழும்பு)

டுபாயிலிருந்து சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட ஒருதொகை சிகரெட்டுகளுடன், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து, நேற்று அதிகாலை மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கொழும்பு, மாளிகாவத்தை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த, 58,40,18 வயதுடையவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனரென, விமான நிலைய சுங்கப்பிரிவின் ஊடகப் பேச்சாளர் சுனில் ஜயரத்ன தெரிவித்தார்.

குறித்த நபர்களின் பயணப் பொதிகளை சோதனை செய்த போது, அவற்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 354 பொதிகளிலான, 70 ஆயிரத்து 800 சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. (இ-7)

# மகேந்திரன், உதயங்கவின் மேன்முறையீடு நிராகரிப்பு





தங்களுக்கு எதிரான சர்வதேச சிவப்பு அறிவித்தலை நீக்குமாறு கோரி, மத்திய வங்கி முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கை தூதுவர் உதயங்க வீரதுங்க ஆகியோர் சர்வதேச பொலிஸாரிடம் முன்வைத்த மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் (இன்டர்போல்) எனும் சர்வதேச பொலிஸாரின் மேன்முறையீட்டு சபை இந்த மேன்முறையீடுகளை நிராகரித்துள்ளதாக இலங்கை பொலிஸ் தலைமையக தகவல்கள் தெரிவித்தன.

இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவு பணிப்பாளரின் கீழ் இயங்கும் சர்வதேச பொலிஸ் கிளைக்கு, சர்வதேச பொலிஸார் எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகவும் அந்த தகவல்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

# செய்தித்துளிகள்

## கான்ஸ்டபிள், வன இலாகா அதிகாரிக்கு விளக்கமறியல்

(காலி)

காலி, ரத்கமவில் வர்த் தகர்கள் இருவரை கடத் திக் கொலை செய்த சம்ப வம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் மற்றும் வன இலாகா அதிகாரி ஆகி யோரை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க காலி நீதிமன்றம் உத்தரவிட் டது.

சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட நிலையில் 48 மணி நேர தடுப்பு விசாரணைகளின் பின் னர் காலி நீதவான் ஹர்ஷன கெக்குனவல முன்னிலை யில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், இந்த விளக்க மறியல் உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. (இ-7)

## போதைப்பொருளுடன் சிக்கிய 17 பேருக்கும் விளக்கமறியல்

(கொழும்பு)

கொக்கெய்ன் மற்றும் போதை மாத்திரைகளு டன் கைதுசெய்யப்பட்ட 3 பெண்கள் உட்பட 17 பேரை யும் விளக்கமறியலில் வைக்குமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றம் உத் தரவிட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாத்தறை, பொல்ஹேன பகுதியிலுள்ள களியாட்ட விடுதி ஒன்றிலிருந்து கொக்கெய்ன் மற்றும் போதை மாத்திரைகளு டன் 3 பெண்கள் உட்பட 17 பேர் கைது செய்யப்பட் டனர்.

இந்நிலையில் குறித்த 17 பேரையும் நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர் படுத்தியபோது அவர் களை நாளை மறுதினம் 8 ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக் குமாறு மாத்தறை நீத வான் நீதிமன்றம் உத் தரவிட்டுள்ளது. (இ-7)

## வியாழனுடன் நிறைவடைகிறது முறைப்பாடுகளை ஏற்கும் பணி

(கொழும்பு)

அரச நிறுவனங்களின் ஊழல் மோசடிகள் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் முறைப்பாடுகளை ஏற்கும் பணி நாளை வியாழக் கிழமையுடன் நிறைவடைகிறது.

அரச நிறுவனங்களில் இடம்பெற்றதாகக் கருதப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் முறைப்பாடுகள் ஏற்கும் காலம் நாளை வியாழக்கிழமை நிறைவடைகிறது.

இந்நிலையில், நேற்று முன்தினம் வரையில் இந்த ஆணைக்குழுவிற்கு 295 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 100 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 180 | 170 | 200 |
| தக்காளி | 30 | 60 | 50 | 40 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 110 | 100 | 80 | 60 |
| கோவா | 30 | 40 | 50 | 50 | 60 |
| கரட் | 80 | 80 | 100 | 80 | 140 |
| பூசணி | 40 | 25 | 20 | 30 | 40 |
| புடோல் | 60 | 50 | 60 | 70 | 80 |
| வாழைக்காய் | 80 | 70 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 60 | 80 | 80 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 60 | 80 |
| பாகற்காய் | 100 | 120 | 140 | 70 | 120 |
| வெண்டிக்காய் | 50 | 80 | 80 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 35 | 100 |
| பயற்றங்காய் | 140 | 150 | 100 | 70 | 120 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 | 70 | 120 |
| பீற்றூட் | 50 | 50 | 60 | 30 | 60 |
| கறிமிளகாய் | 100 | 130 | 100 | 70 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 300 | 300 | 400 |
| போஞ்சி | 100 | 100 | 80 | 70 | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | — | 30 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 80 | 80 | 80 | 55 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 40 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 120 | 150 | 120 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 100 | 60 | 80 | 70 | 120 |
| முள்ளங்கி | 40 | 50 | 60 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 50 | 15 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 10 | 30 |
| ஈரப்பலா | — | — | 60 | 100 | 80 |

# சிறுவர் அரங்கம்

## எலுமிச்சம்பழத்தின் ஆசை



ஒரு பெரிய தோட்டம் இருந்தது, அந்தத் தோட்டத்தில் ஏராளமான காய், கறிகள், பழங்கள் காய்த்து இருந்தன.

ஒரு பக்கம் கத்தரிக்காய், முட்டைக்கோஸ், தக்காளி, பாகற்காய் போன்றவைகளும் மறுபுறம் ஆங்கில வகை காய்கறிகளான பீட்ரூட், நூல்கோல், காலிபிளவர் போன்ற காய்கறிகளும் பயிரிடப்பட்டிருந்தன. இன்னொரு பக்கம் அன்னாசி, எலுமிச்சை, பிளம்ஸ் போன்ற பழ வகைகளும் பயிரிடப்பட்டிருந்தன.

தினமும் ஆட்கள் அந்தத் தோட்டத்துக்குள் வந்து காய்கறிகளையும் பழங்களையும் பறித்து வண்டியில் எடுத்து சந்தைக்கு கொண்டு செல்வர்.

ஒரு நாள் காய்கறிகள் அனைத்தும் ஏற்றப்பட்டு விட்டன. பழச் செடிகள் வரிசையில் இருந்த எலுமிச்சை செடிகளில் எலுமிச்சை பழம் நன்கு பழுத்து மஞ்சள் கலராய் பார்ப்பதற்கு அழகாய் இருந்தது. அதில் இருந்த ஒரு எலுமிச்சை பழம்தானும் வெளியே போக வேண்டும், எப்படியும் தன்னை வண்டியில் ஏற்றுவார்கள் என எதிர்பார்த்திருந்தது. கடைசி வரை வண்டியில் ஏற்றாததால் ஏமாற்றத்தில் அதன் நிறம் கூட மங்கலானது போலத் தெரிந்தது. வண்டி கிளம்ப போகும்போதுதான் கவனித்தார்கள், அட.... எலுமிச்சை பறிக்கவே இல்லையே, பாருங்க எப்படி பழுத்து இருக்குதுன்னு, சொல்லிவிட்டு வண்டியை நிறுத்தி விட்டு எலுமிச்சை பழம் பறிக்க ஆரம்பித்தார்கள்.

அந்த எலுமிச்சைக்கு ஒரே சந்தோசம், பார்த்தீர்களா? எப்படியும் என்னை ஏற்றி விடுவார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தேனே, அதேபோல ஆகி விட்டதல்லவா, மற்ற எலுமிச்சை பழங்களிடம் சொல்லி சந்தோசப்பட்டுக்கொண்டது.

சந்தையில் அனைத்து காய்கறிகள், பழங்கள் இறக்கப்பட்டன. எலுமிச்சை பழங்கள் கொண்ட மூட்டை இறக்கப்பட்டவுடன் அந்த எலுமிச்சைக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. எவ்வளவு பெரிய சந்தை, எல்லாத் தோட்டத்திலே இருந்தும் பழங்கள் வந்திருந்தன. பக்கத்து மூட்டையில் இருந்த ஒரு எலுமிச்சையுடன் பேச்சுக் கொடுத்தது.

அண்ணே நீங்க எந்தத் தோட்டத்தில இருந்து வாறீங்க? நாங்க மேட்டுப்பாளையத்தில இருந்து வருகிறோம். அப்படியா அந்த ஊர் எங்க இருக்கு? அந்த எலுமிச்சை கொஞ்சம் யோசித்து எனக்கு சரியாத் தெரியலை, எங்களை இன்றைக்கு காலையிலைதான் செடியில இருந்து பறித்து வண்டியில ஏற்றிக் கொண்டு வந்தார்கள். அப்படியா, எங்களையும் இன்றைக்குத்தான் ஏற்றிக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

பேசிக்கொண்டிருக்கும் போதே, அந்த மூட்டையை ஒரு ஆள் தலை மீது ஏற்றிக் கொண்டு சென்றார். அந்த மூட்டையை எடை பார்க்கும் இயந்திரத்தில் வைக்கப்பட்டு ஐம்பது கிலோ இருக்கு என்று சொல்லி ஒரு சீட்டை எழுதிக்கொண்டு வந்த ஆளிடம் கொடுத்தார்கள்.

அவர் அந்த மூட்டையை மீண்டும் தலையில் ஏற்றிக் கொண்டு நடக்க ஆரம்பித்தார். உள்ளிருந்த அந்த எலுமிச்சைக்கு ஆடி ஆடி செல்வது சந்தோசமாய் இருந்தது.

மற்ற நண்பர்களிடம் பார்த்தீர்களா என்ன ஒரு ஆட்டம். சொல்லிவிட்டு கலகலவென சிரித்தது. அந்த மூட்டை சிறிது நேரத்தில் ஒரு இடத்தில் இறக்கப்பட்டது.

மீண்டும் அந்த மூட்டை பிரிக்கப்பட்டு பழங்கள் தரம் பிரிக்கப்பட்டன.

இந்த எலுமிச்சம்பழம் தன்னை எப்படியும் நல்ல இடத்தில் பிரித்து வைப்பார்கள் என எதிர்பார்த்தது. அதேபோல் அந்தப் பழம் நல்ல ரகமாக சேர்க்கப்பட்டு, கடையில் அனைவரும் பார்க்கும் இடத்தில் வைக்கப்பட்டது. தனக்குள்ளேயே பேசிக்கொண்டது எலுமிச்சை, என்னுடைய கலரும் உருவத்தையும் பார்த்தாலேயே யாராவது ஒருவர் எடுத்திடுவார்களென்று எனக்குத் தெரியுமே.

இப்பொழுது ஒரு பெண் தன்னை எடுத்து பார்ப்பதை பார்த்த எலுமிச்சைக்கு மீண்டும் ஒரு மகிழ்ச்சி, எப்படியும் என்னை எடுத்து தன் பைக்குள் போட்டுக் கொள்வாள் என்று எதிர்பார்த்தது.

அந்தோ பரிதாபம், இந்தப் பழம் எவ்வளவு விலையப்பா? ஒரு பழம் ஐந்து ரூபாய். ரொம்ப அதிகமாகச் சொல்லுகிறாய், சொல்லி விட்டு அடுத்த ரகத்தைப் பார்த்து இது என்ன விலையப்பா? அது ஒரு பழம் இரண்டு ரூபாய், சரி அப்படியென்றால் அதிலேயே இரண்டு கொடுத்துவிடு. அந்த அம்மாள் சொல்லி விட்டு கையில் இருந்த காசை கொடுத்துவிட்டு அந்த பழங்களை தன் பைக்குள் போட்டுக்கொண்டாள்.

சே...நோஞ்சானாய் இருக்கும் அவனுக்கு வந்த வாழ்க்கையைப் பார், தனக்குள் அலுத்துக்கொண்டது, அன்று முழுக்க அந்த எலுமிச்சையை யாரும் எடுக்கவே இல்லை.

மறுநாள் சற்று சுருக்கம் விழுந்து விட்ட தன் உடம்பைப் பார்த்து மிகவும் வருத்தப்பட்டுக்கொண்டது. நேற்று எவ்வளவு அழகாய் இருந்தோம், இன்று இப்படி ஆகிவிட்டோமே என்று வருத்தப்பட்டது. அன்றும் அதனை யாரும் எடுத்து செல்லவில்லை. பேசாமல் நம்மோட செடியிலேயே இருந்திருக்கலாம், இப்படி அநியாயமாய் வெளியில வந்து வெயிலிலே வாடிப் போயிட்டோமே, அதற்கு கவலை பிடித்துக் கொண்டது. நாம் இப்படியே இருந்து காய்ந்து போயிடுவோமா?

நான்காம் நாள் அந்த பழத்தை கையில் எடுத்த பெண் ஏம்பா இந்தப்பழம் என்ன விலை? அம்மா இந்த பழம் இரண்டு ரூபாய், சொன்னவரிடம், நாலு நாளைக்கு முன்னால இந்த பழம் ஐந்து ரூபாயென்று சொன்னாய், ஆமாம்மா, அப்ப நல்லா பக்குவமா இருந்துச்சு, இப்ப வெயிலிலே கொஞ்சம் வாடி போயிடுச்சு, அதுதான்.

சொன்னவரிடம் மறு பேச்சு பேசாமல் அந்த பெண் காசை கொடுத்து விட்டு தன் பையில் போட்டு சென்றாள்.

இப்பொழுது தான் ஏதோ குளிரூட்டப்பட்ட பெட்டிக்குள் இருப்பது தெரிந்தது.


அந்த வெயிலுக்கு இந்த அறை பரவாயில்லை, நினைத்துக்கொண்ட அடுத்த நிமிடம் பெண்ணின் கரம் ஒன்று தன்னை எடுத்து பார்த்து கையில் உருட்டுவதை உணர்ந்தது.

ஆஹா..ரொம்ப சந்தோசமாக அனுபவித்தது. சட்டென தன்னை அறுப்பதை உணர்ந்தது, அதற்கு வலி தெரியவில்லை.

ஏதோ குழலுக்குள்வைத்து திருகுவது கூட அதற்கு கிச்சு கிச்சு மூட்டுவது போல் இருந்தது. அப்புறம் தன்னை பிழிய பிழிய ஆனந்தமாய் நீரை உதிர்த்தது.

பாட்டி உங்க எலுமிச்சை ஜூஸ் பிரமாதம், நல்லா ருசியாவும் வெயிலுக்கு இதமாவும் இருந்துச்சு, நான்கைந்து குழந்தைகள், தங்கள் வாயை துடைத்துக் கொண்டு அந்த பெண்ணிடம் சொல்லிக்கொண்டிருப்பதை மகிழ்ச்சியுடன் பார்த்து கொண்டிருந்தது பிழியப்பட்ட வெற்றுத்தோலான அந்த எலுமிச்சை பழம்.

## சேவல்



பாஞ்சாலங் குறிச்சியிலே
வாங்கி வந்த சேவல்
பழமதுரைப் பட்டணத்தைப்
பார்த்து வந்த சேவல்

கொச்சிமலை யாளமெல்லாம்
கொடியெடுத்த சேவல்
கும்ப கோணம் தஞ்சாவூர்
குமுறி வந்த சேவல்

கொல்லிமலை குடகு மலை
கூத்தடித்த சேவல்
கொக்கரித்துப் பறந்து வரும்
குமரேசன் சேவல்

பூமியெல்லாம் சுற்றிவந்து
பொங்கி நிற்கும் சேவல்
பொன்னுருக்கு மேனி கொண்ட
புத்தம் புது சேவல்.

## பொது அறிவு

- மலரின் உறுப்புகள் என்ன?

**பூவடிச் செதில், பூக்காம்பூச் செதில், பூத்தளம், அல்லி வட்டம், மகரந்தத்தாள் வட்டம், சூலக வட்டம்**

- மிக வேகமாக வளரும் தாவரங்கள் ஒன்று? இத்தாவரம் வெப்பமண்டல தென்னமெரிக்காவை பூர்வீகமாகக் கொண்டது?

**ஆகாயத்தாமரை**

- அல்லி வகைகள் என்ன?

**குளிரை தாங்குகிற நீர் அல்லிகள் பகலில் மட்டுமே பூக்கும், ஆனால் வெப்ப நீர் அல்லிகள் பகலில் அல்லது இரவில் பூக்கின்றன**

- தையல் இயந்திரம் கண்டுபிடித்தவர் யார்?

**ஐசக் சிங்கர்**

தூய்மையான இதயம் கொண்டவர்கள் யாருடைய நம்பிக்கையையும் குலைக்கமாட்டார்கள்.
– *பகவான் இராமகிருஷ்ணர்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இராயப்பு ஜோசப் ஆண்டகை இருந்த ஆயர் இல்லமோ!

மன்னார் மறைமாவட்டத்தின் ஆண்டகையாக அருட்பணியாற்றியவர் மேதகு இராயப்பு ஜோசப் அடிகளார்.

மன்னார் மறைமாவட்டத்தின் ஆண்டகையாக அவர் இருந்தபோதும் அதற்கு முன்னரும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்தியதில் அவரின் வகிபங்கு காத்திரமானது.

இராயப்பு ஜோசப் ஆண்டகையின் கருத்துக்கள் உலகு வாழ் தமிழ் உள்ளங்களை அவர் பால் ஈர்த்துக் கொண்டது.

ஈழத் தமிழ் மக்களுக்கு நடந்த அநியாயங்களை, அட்டூழியங்களை மிகத் துணிச்சலுடன் சர்வதேசத்திடம் முன்வைத்தவர்.

அவரின் துணிச்சலும் தமிழ்ப்பற்றும் தமிழ் மக்களை ஆற்றுப்படுத்தியது.

ஒருமுறை யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடந்த நினைவுகூரல் நிகழ்வுக்கு வந்திருந்த ஆண்டகை அச்சபையில் உரையாற்றுகையில்,

*பால் நினைந்தூட்டும் தாயினும் சால...*

என்ற திருவாசகத்தைப் பாடினார்.

இதன்போது அவையில் இருந்த அத்தனை பேரும் தங்களை அறியாமலே கண்கலங்கினர்.

தமிழ் மக்களின் உரிமைக்கான அவரின் அறப்பணிக்காக அகில இலங்கை கம்பன் கழகம் கொழும்பில் நடந்த கம்பன் விழாவில் வைத்து உயரிய விருதை அவருக்கு வழங்கியது.

எங்கள் கெடுகாலம் அந்த உத்தமர் உடல் ஆரோக்கியக் குறைவுக்கு ஆளானார். ஒட்டுமொத்த தமிழ் அரசியல்வாதிகளையும் தமிழ்த் தரப்புகளையும் ஒற்றுமைப்படுத்த வேண்டும் என அரும்பாடுபட்ட இராயப்பு ஜோசப் ஆண்டகையின் திடீர் சுகயீனம் தமிழ் மக்களுக்குப் பெரும் பாதிப்பாயிற்று.

எனினும் ஆண்டகை எடுத்த முயற்சிகள் ஏதோவொரு வகையில் நிஜமாகி வருகின்றன என்பதைக் கூறும் அதேநேரம்,

மன்னார் திருக்கேதீச்சரத்தில் அமைக்கப்பட்டிருந்த சிவராத்திரி வளைவு கத்தோலிக்க மதகுரு ஒருவர் முன்னிலையில், அந்த மதம் சார்ந்த சிலரால் அடித்து நொருக்கப்பட்ட சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

இச்சம்பவம் ஊடகங்களிலும் சமூகவலைத் தளங்களிலும் வேகமாகப் பரவிக் கொண்டது.

இந்நிலையில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இல்லம் நீண்ட அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது.

அந்த அறிக்கையை வாசித்தவேளை; மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை ஆயராக அமர்ந்திருந்த மன்னார் ஆயர் இல்லமா! இப்படியொரு அறிக்கையை வெளியிட்டது என நினைத்தபோது இதயம் அடைத்துக் கொண்டது.

அந்தளவுக்கு அந்த அறிக்கை நியாயமற்றதாக, இயேசு பிரானின் போதனைக்கு ஒவ்வாததாக, சைவ மக்களை நிந்தனை செய்வதாக இருந்ததுடன் சைவ – கத்தோலிக்க மக்களிடையே முறுகலையும் வன்மத்தையும் தூண்டுகின்ற அறிக்கையாகவும் இருந்தது.

அந்த அறிக்கையில் உண்மை மறைக்கப்பட்டு மதச்சார்பு முதன்மைப்படுத்தப்பட்டிருந்தமை பெரும் வேதனைக்குரியது.

எனினும் யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் இல்லம் புனிதமான இதய சுத்தியுடன் விடுத்த அறிக்கை தமிழ் மக்களின் ஒற்றுமைக்கு உரம் கொடுத்தது.

அதுவொன்றுதான் தமிழ் மக்களுக்கு ஆறுதலைத் தருகிறது.

# இம்ரான் கானிடம் மனித உணர்வுகளை கற்றுக்கொள்ள வேண்டும் – சிறிநேசன்

(மண்முனை)

நல்ல விடயங்களை யார் செய்தாலும் பாராட்ட வேண்டும். தேசத் தலைவர்களுக்கு பாகிஸ்தான் பிரதமர் நடந்து கொண்டது முன்னுதாரணமாகவிருக்கும். எமது நாட்டின் முன்னாள் தலைவர்கள் இம்ரான் கானிடம் மனித உணர்வுகளைக் கற்றுக் கொள்ள வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்ற செமட்ட செமன மாதிரிக் கிராம நிர்மாணப் பணிகளின் ஆரம்ப நிகழ்வு மண்முனை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நடராஜநந்தபுரம் கிராமத்தில் மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபை தலைவர் மா.ஜெகநாதன் தலைமையில் 20 வீடுகளுக்கு நேற்று அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்ட போது மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார்.

இந்திய விமானி அபிநந்தன் ஒரு தமிழன். பாகிஸ்தான் எல்லைக்குள் அவரது விமானம் வீழ்ந்ததும் பரசூட் மூலமாக குதித்தபோது அவர் பாகிஸ்தான் எல்லைக்குள் பாகிஸ்தான் படையாலும் மக்களாலும் பலவந்தமாக முகமெல்லாம் இரத்தத்துடன் சிவப்பு முகமாகக் தாக்கப்பட்டிருந்தார்.

இருந்தாலும் கூட அந்நாட்டின் பிரதமராகவிருக்கும் இம்ரான் கான் அவரை விடுதலை செய்வதற்கு எடுத்த நடவடிக்கை பாராட்டத்தக்க விடயமாகும்.

யுத்த கைதிகள் கண்ணியமாக நடத்தப்பட வேண்டும். கவனமாக கையாளப்பட வேண்டியது ஒரு யுத்த தர்மமாகும். அந்த இடத்தில் பாகிஸ்தான் பிரதமர் இப்படி நடந்திருப்பது அவரின் பண்பாகும். அது பாராட்டுக்குரியது.

நல்ல விடயங்களை யார் செய்தாலும் பாராட்ட வேண்டும். தேசத்தலைவர்களுக்கு பாகிஸ்தான் பிரதமர் நடந்து கொண்டது முன்னுதாரணமாகவிருக்கும்.

எமது நாட்டின் முன்னாள் தலைவர்கள் இம்ரான கானிடம் மனித உணர்வுகளைக் கற்றுக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ ஸ்ரீமான்புருஷோத்தம பாலனின் ஜென்மதின மகோற்சவ விழாவும் பவித்திர ஆரோக்கிய முக்திவரமும் ஸ்ரீ பாலனின் ஜென்ம தினத்தன்று பாதுகாபிஷேகம், பக்தி சங்கீர்த்தனம் மற்றும் இணையத்தினூடான ஸ்ரீ புருஷோத்தம பகவானின் திவ்ய மங்கள தரிசனமும் யாழ்ப்பாணம் சட்டநாதர் சிவன் கோவிலடி, திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. (ம-3)

# எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாக நாடாளுமன்ற சுற்றுவட்டத்தில் நேற்று கடும் வாகன நெரிசல்

(கொழும்பு)

சேவை யாப்பினைப் பெற்றுக் கொள்ளல் உள்ளிட்ட 17 கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் நாடாளுமன்ற சுற்றுவட்டத்துக்கு அருகில் நேற்று பிற்பகல் ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டது.

இதனால் இந்தப் பகுதியில் கடுமையான வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக சில கிராம உத்தியோகத்தர்கள் சுகவீன விடுமுறையைப் பதிவு செய்துள்ளனர்.

இதேவேளை, நள்ளிரவு முதல் ஆரம்பிக்க உத்தேசித்துள்ள பணிப்புறக் கணிப்பு போராட்டத்தில் எந்த மாற்றமும் இல்லை என்றும், தொடருந்து இயந்திரச் சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆளிணைப்பு விதிமுறைகள் மீளப்பட்டு தொடருந்து சாரதிகள் சிலர் இணைத்துக் கொள்ளப்பட்டமைக்கு எதிராக இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இதற்குத் தொடருந்து நிலைய அதிபர்கள், கட்டுப்பாட்டாளர்கள் உள்ளிட்டவர்களும் ஆதரவளித்துள்ளதாகத் தெரியவருகிறது. (இ-7)

# சிறுவன் மீது துஷ்பிரயோகம்; குற்றவாளிக்கு தண்டனை

## யாழ்.மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

2009ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 3ஆம் திகதி அளவெட்டி தெற்கு பிரதேசத்தில் வைத்து 13 வயது சிறுவன் மீது மேற்கொள்ளப்பட்ட பாலியல் துஷ்பிரயோக வழக்கு நேற்றைய தினம் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேம்சங்கர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அளவெட்டிப் பகுதியில் 2009ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 3ஆம் திகதி 13 வயது சிறுவன்ஒருவர்மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்தவேளை இருவர் அந்த சிறுவனைப் பலவந்தமாக இழுத்துச் சென்று ஒரு வீட்டில் வைத்து கைகளைப் பின்னால் கட்டப்பட்ட நிலையில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பான வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துச் கொள்ளப்பட்டபோது குற்றவாளிகள் இருவருக்கும் தனித்தனியே 10 வருடம் ஒத்திவைக்கப்பட்ட 10 மாத கால சாதாரண சிறைத் தண்டனையும் 10 ஆயிரம் ரூபாய் தண்டமும் விதிக்கப்பட்டதோடு இதனை செலுத்த தவறின் 10 மாதம் சாதாரண சிறைத் தண்டனையும் பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு இரண்டு குற்றவாளிகளும் தலா ஒரு லட்சம் ரூபாய் செலுத்த வேண்டும் எனவும் செலுத்தத் தவறின் 4 வருட சாதாரண சிறைத்தண்டனையும் பாதிகப்பட்ட சாட்சிகளுக்கான பாதுகாப்பு நிதியத்துக்கு 25 ஆயிரம் ரூபாய் செலுத்த வேண்டும் எனவும் செலுத்த தவறின் 12 மாத சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்க வேணடும் எனவும் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்துள்ளார். (ம-10)

## சிவராத்திரி வளைவை அகற்றியமைக்கு யாழ்.இந்து சமயப் பேரவை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

இந்துக்களின் புனித நாளான சிவராத்திரி தினத்துக்கு முன் திருக்கேதீஸ்வரத்துக்கு செல்லும் வாயிலில் அமைக்கப்பெற்ற வளைவை இடித்தழித்தமை கத்தோலிக்கர்களின் மத வெறிச் செயலைத் துல்லியமாக எடுத்துக் காட்டுவதாக யாழ்ப்பாணம் இந்து சமய பேரவை தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது.

இந்த வளைவு அழிப்புத் தொடர்பாக இலங்கை அரசும் குறிப்பாக வடக்கு மாகாண ஆளுநரும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்வதாக யாழ்.இந்து சமயப் பேரவை அனுப்பி வைத்துள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்.பிரதேசத்தில் வெற்றிலைக் கேணி, வெற்றிலைக் கேணி இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில குமுழ முனை, முழங்காவில், நாச்சிக்குடா, வெள்ளாங்குளம், ஜெயபுரம், வேரவில், வலைப்பாடு, ஆனைவிழுந்தான் அக்கராயன், 651ஆவது படைப் பிரிவு முகாம், நாச்சிக்குடா கடற்படைமுகாம், இயாஸ் மொகமட்ஐஸ்தொழிற்சாலை, 652வது படைப் பிரிவு முகாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் பட்டாணிச்சூர் கிராமம், ஆண்டியப் புளியங்குளம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் நானாட்டான் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## ஆன்மீகச் சிந்தனைகள்

### கடவுளை எளிமையாக வழிபடுங்கள்

- உன்னை யாராவது புகழும்போது மகிழ்ச்சி அடையாதே. அதேபோல், உன்னை இகழும் போது கவலையும் கொள்ளாதே.
- புகழையும், இகழையும் சமமாகக் கருதுபவனே மனஅமைதியுடன் வாழ முடியும். ஆண்டவனை வழிபடுவதைக் காட்டிலும், அடியாரை வழிபடுவது சிறந்தது. ஆண்டவனை வழிபட்டால் ஒரு மடங்கு பலன். அடியாரை வழிபடுவோருக்கு இருமடங்கு பலன். தாய், தந்தையரின் பழக்கம் தான் பிள்ளைகளிடத்தில் உண்டாகும். ஆகவே, நல்ல பழக்கவழக்கங்களைப் பிள்ளைகளிடத்தில் உண்டாக்க தாயும், தந்தையும் நெறிமுறைகளைப் பின்பற்றி ஒழுக்கத்தோடு வாழ வேண்டும்.
- நாம் செய்த செயல்களின் விளைவு நம்மை வந்து சேரும். நல்வினையும், தீவினையும் வயலில் விதைத்த விதைபோல, பலமடங்கு பெருகி நம்மையே வந்தடையும். இளகிய தங்கத்தில் ரத்தினக் கல் பதியும். அதுபோல,
- இறைவனை மனமுருக வழிபட்டால் உருகிய நமது உள்ளத்தில் கடவுள் ஒன்றி விடுவார். எங்கும் நிறைந்த இறைவனை எளிமையாகவே வழிபடுங்கள். சாதாரணநீரும், பூவும் கொண்டு இறைவனின் திருப்பா தங்களை பூஜியுங்கள். அவரை ஆடம்பரமாக பூஜிக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. அன்பையும், ஒழுக்கத்தையும் மட்டுமே ஆண்டவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார்.

யாழ்.மத்திய கல்லூரி – சென்.ஜோன்ஸ் கல்லூரி

அணிகள் மோதும்

# வடக்கின் போர் நாளை ஆரம்பம்







வடக்கின் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான நூற்றாண்டு கால கிரிக்கெட் போட்டி நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகி 3 நாட்கள் நடைபெறுகின்றது.

113 ஆவது இன்னிங்ஸ் போட்டியான இது இம்முறையும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறுகிறது. போட்டியின் பாதுகாப்பு இரண்டு கல்லூரி சமூகத்தாலும் பொலிஸாரிடம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டி தொடர்பான செய்தியாளர்கள் சந்திப்பும் வீரர்கள் அறிமுக நிகழ்வும் யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

மதுபோதை அல்லது போதைப் பொருள்கள் பாவனையுள்ள எவரும் போட்டியைப் பார்க்க அரங்குக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இரு கல்லூரி மாணவர்களும் சீருடையுடன் மட்டுமே மைதானத்துக்குள் அனுமதிக்கப்படுவர். பழைய மாணவர்களும் நலன்விரும்பிகளும் இருப்பிட வசதிகொண்ட பகுதிக்காக 100 ரூபாய் பணத்தை வழங்கி அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

சுப்பிரமணியம் பூங்கா பக்கம் உள்ள நுழைவாயில் மூடப்படும். சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் பழைய மாணவர்களும் பொதுநூலகப் பக்கமாக மைதானத்துக்கு மேற்குத் திசையிலிருக்கும் வாயில் ஊடாக அனுமதிக்கப்படுவர்.

ரிம்பர் மண்டப பக்கமாக உள்ள வாயில் ஊடாக மத்திய கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.

அணிகளின் வீரர்களும் மாணவ தலைவர்களும் தவிர்ந்தோர் எல்லைக் கோட்டுக்குள்ளே எக்காரணம் கொண்டும் உட்பிரவேசிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஆரம்ப நாள் நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 9.15 மணிக்கு வீரர்கள் அறிமுகம் இடம்பெற்று போட்டி முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும் என கல்லூரி அதிபர்கள் தெரிவித்தனர். (க)

## நண்பர்களின் போர் மகாஜன அணி சம்பியன்




படங்கள்–சிவசாந்தன்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர்களுக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர்களுக்குமிடையிலான நண்பர்களின் போர் இருபதுக்கு–20 போட்டி நேற்று முன்தினம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் மகஜனக் கல்லூரி பழைய மாணவர்கள் அணி சம்பியன் பட்டத்தைப் வென்றது.

15 ஆவது தடவையாக நடைபெற்ற இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜன பழைய மாணவர்கள் அணி 20 ஓவர்களில் 183 ஓட்டங்கள் பெற்றது.

184 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஸ்கந்த வரோதயக் கல்லூரி பழைய மாணவர் அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 73 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது.

இதன்மூலம் 110 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மகாஜன பழைய மாணவர் அணி வெற்றி பெற்று 2019 ஆம் ஆண்டின் நண்பர்கள் கிண்ணத்தை வென்றது. (க–105)

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மற்றும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் மாமனிதர் பாராளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசன் ஞாபகார்த்த வடமராட்சி அணிகளுக்கிடையிலான அணிக்கு 7 பேர்கள் கொண்ட மாபெரும் துடுப்பாட்டப் போட்டி எதிர்வரும் 9, 10 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

எனவே இச் சுற்றுப் போட்டியில் பங்குகொள்ள விரும்பும் அணிகள் 077 563 1296, 077 711 0955 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## கோப்பாய் பிரதேச செயலக மட்ட துடுப்பாட்டம் சம்பியனாகியது கோல்ட்ஸ்ரார் அணி




கோப்பாய் பிரிவுக்குட்பட்ட 21 அணிகள் கலந்து கொண்ட இந்த தொடரில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் ஞானவைரவர் அணி ரொக்கட் அணியை வீழ்த்தியது. இரண்டாவது அரையிறுதியில் சென். மேரிஸ் அணியை கோல்ட்ஸ்ரார் அணி வீழ்த்தியது. தொடர்ந்து இறுதிப் போட்டி நடைபெற்றது. இறுதிப் போட்டியில் ஞானவைரவர் அணியை எதிர்த்து கோல்ட்ஸ்ரார் அணி மோதியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று துடுப்பெடுத்தாடிய கோல்ட்ஸ்ரார் அணி ஆரம்பம் முதலே இலக்கை இழந்த வண்ணம் இருந்தது. இருப்பினும் பிறேம், கஜித் ஆகியோரின் நிதான ஆட்டத்தின் உதவியுடன் 9.4 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்கையும் இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் கோல்ட்ஸ்ரார் அணி சார்பாக பிறேம் 15, கஜித் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஞானவைரவர் அணியினால் கோல்ட்ஸ்ரார் அணியின் துல்லியமான பந்து வீச்சினால் 10 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்கினை இழந்து 50 ஓட்டங்களை மாத்திரம் பெறமுடிந்தது. துடுப்பாட்டத்தில் ஞானவைரவர் அணி சார்பாக கஜறூபன் 20 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் கோல்ட்ஸ்ரார் அணி சார்பாக பிறேம் 3, மகி 2 இலக்கினை வீழ்த்தினர்.

இறுதியில் கோல்ட் ஸ்ரார் அணி 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியீட்டி கோப்பாய் பிரதேச மட்ட துடுப்பாட்டத்தில் முதற்தடவையாக சம்பியனாகியது. (க)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## மகுடம் சூடியது வவுனியா பிரதீஸ்




அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடத்தப்பட்ட வடமாகாண ரீதியான கபடி தொடரில் முல்லைத்தீவு உதயதாரகை விளையாட்டுக்கழக அணியினை வீழ்த்தி சம்பியனாகியது வவுனியா பிரதீஸ் விளையாட்டுக்கழக அணி. (க)

## 2019 - வரவு செல...

வரவு - செலவுத்திட்டத்தில் உள்ளடங்கும் முக்கிய விடயங்கள் வருமாறு,

விசேட தேவையுடையவர்களுக்கு 3000 ரூபாய் வழங்கப்படுகிறது. அதனை 5000 ரூபாயாக அதிகரித்து, குறைந்த வருமானம் பெறும் 72 ஆயிரம் பேருக்கு வழங்க 4300 மில்லியன் ஒதுக்கப்படவுள்ளது.

சூதாட்ட விடுதிகளுக்கான அனுமதி கட்டணம் 400 மில்லியன் ரூபாயாக அதிகரிப்பு - சூதாட்ட விடுதிக்கான நுழைவு கட்டணம் 50 அமெரிக்க டொலரினால் அதிகரிப்பு.

கடவுச்சீட்டுகளை பெற்றுக் கொள்வதற்கான கட்டணம் அதிகரிப்பு. ஒருநாள் சேவை 5 ஆயிரம் ரூபாயாகவும், வழமையான சேவை 3500 ரூபாயாகவும் அதிகரிக்கப்படவுள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பனை அபிவிருத்தி நடவடிக்கைக்கு 5 மில்லியன் ஒதுக்கீடு.

மடு தேவாலய அபிவிருத்திக்கு 200 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

கம்பெரலிய திட்டத்தின் கீழ் சமய வழிபாட்டுத் தலங்களை அபிவிருத்தி செய்ய ஒரு மில்லியன் ரூபாய்.

இயற்கை அனர்த்த முகாமைத்துவ வேலைத்திட்டத்துக்காக 20,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் உற்பத்திகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் செப்டெம்பர் முதலாம் திகதிக்கு முன்னர் பதிவு செய்வது கட்டாயம்

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவை வலுப்படுத்த 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் கிராம சக்தி வேலைத்திட்டத்துக்காக 500 மில்லியன் ரூபாய்.

சமுர்த்தி திட்டம் மறுசீரமைக்கப்படும் அதற்காக 6 இலட்சம் புதிய பயனாளிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இதற்கென 10,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குடிநீர் திட்டத்துக்காக 45,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இராணுவ கொடுப்பனவு அதிகரிக்கப்படும். அதில் கட்டளை தளபதிகளுக்கு கொடுப்பனவு 5000 ரூபாய் வழங்கப்படும். வாடகைக் கட்டணம் 100% அதிகரிக்கப்படும். சீருடை கொடுப்பனவு அதிகரிக்கப்படும்.

அதிக வசதிகளையுடைய ரயில் சேவைக்காக 4 புதிய ரயில் பாதைகள் அமைக்கப்படவுள்ளன. அதில் மாலபே - கொழும்பு இலகு ரயில் பாதைக்காக 5000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒய்வூதிய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சரி செய்ய 12 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

மேல் மாகாணம் மத்திய மாகாணங்களில் பேருந்து சேவைகளுக்கு முற்கொடுப்பனவு அட்டைகள் மற்றும் ஜீபிஎஸ் சேவைகள் ஆரம்பிக்கப்படும்.

பொது போக்குவரத்து சேவை அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. அடுத்த 5 ஆண்டுகளில் பேருந்து சேவை அபிவிருத்தி திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அருவக்காடு கழிவு முகாமைத்துவ வேலைத்திட்டத்துக்கு 7000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

போகம்பரை சிறைச்சாலை பொது இடமாக அபிவிருத்தி செய்ய 750 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

தேசிய ஒலிம்பிக் நிதியத்தை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். பல்கலைக்கழக உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு 25,000 மில்லியன், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம் நிறுவப்படும்

சுகாதார துறையில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் வேலைத்திட்டங்களுக்காக 24,750 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு. இலங்கையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளும் மாணவர்களுக்கு உலகில் தலை சிறந்த பல்கலைக்கழகங்களில் உயர் கல்வியைத் தொடர வாய்ப்பு.

கொலன்னாவ மற்றும் அலுவிகார விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்ய 300 மில்லியன். விளையாட்டுத்துறையில் ஆர்வம் கொண்டவர்களுக்கு இலவச பயிற்சிகளை வழங்க நடவடிக்கை

கல்வித் துறைக்கு 32 ஆயிரம் மில்லியன் ரூபாய். தகவல் தொழிநுட்ப சேவை தொழிற்றுறைக்கு கலைப்பட்டதாரிகளை இணைத்துக்கொள்வதற்காக 1300 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு. சுற்றுலாதுறையில் பதிவு செய்யப்பட்ட ஹோட்டல்களுக்கு வெளிநாட்டு நாணய பற்றுச்சீட்டுகளுக்கு என்பீர் நீக்கம்.

சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பெண்களுக்கு கைவினைப் பொருட்களை செய்யும் மத்திய நிலையம் தொம்பே கிராமத்தில் அமைக்கப்படவுள்ளது. அதற்காக 50 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை திணைக்களத்துடன் இணைந்து போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டவர்களை அதிலிருந்து மீட்கும் வகையில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

தனியார் நிறுவனங்களும் பிரசவ விடுமுறையை 3 மாத காலம் வழங்கும் வகையில் வழிவகைகளை செய்தல்.

25 வருடங்களில் செலுத்தக் கூடிய வகையில் 6 சதவீத வட்டி அடிப்படையிலான இலகுக் கடன் திட்டங்களை இளம் திருமண தம்பதிகளுக்கு வழங்க நடவடிக்கை.

சிறுநீரக நோயாளர்களுக்கு 5,000 ரூபா கொடுப்பனவு வழங்க 1,480 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

3 மாதங்களுக்கு மகப்பேறு விடுப்பு வழங்கும் நிறுவனங்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கப்படும்.

பருத்தித்துறை மற்றும் பேசாலையில் மீன்பிடி துறைமுகங்களை அமைப்பதற்கு 1300 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

அனைத்து வீடுகளுக்கும் கழிவறை வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க 4 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரதான பேருந்து நிலையத்திலும் ரயில் நிலையத்திலும் புதிய கழிவறைகள் நிர்மாணிக்கப்படும்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள பிரச்சினைத் தொடர்பில், தேயிலை சபையுடன் கலந்துரையாடி விரைவான தீர்வைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

கறுவா ஏற்றுமதியின் போது தகுதிச்சான்றிதழ் பெறல் கட்டாயம். அதன் சர்வதேச அங்கீகாரத்தை உறுதி செய்ய விசேட நிதி ஒதுக்கீடு. சிறிய டிரக் வாகனம் மீதான உற்பத்தி வரி நீக்கம்.

இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு சலுகைகளை வழங்குவதற்கு என்ரர்பிரைஸ் ஸ்ரீலங்கா திட்டத்தை விரிவுபடுத்த 500 மில்லியன் நிதி ஒதுக்கீடு.

இறப்பர் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கு 800 மில்லியன் நிதி ஒதுக்கீடு.

கடந்த காலங்களில் விவசாயத்தில் பெறப்பட்ட பாரிய இழப்பை ஈடுசெய்ய விசேட களஞ்சியப்படுத்தல் இடங்களுக்கு நிதி ஒதுக்கீடு. அதனை ஊக்குவிக்க 250 பில்லியன் ஒதுக்கப்படும்

சிறிய மற்றும் மத்திய தர வர்த்தகர்களை ஊக்குவிக்க நடவடிக்கை. பல ஏற்றுமதி வரிகள் 2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளது. (ம-3)

## வடக்கு மாகாண...

வரவு-செலவுத் திட்டம் அமைந்துள்ளது.

வரவு -செலவுத் திட்டத்தில் வடக்குக்கு முன்வைக்கப்பட்டுள்ள சில முக்கியமான சலுகைகள் வருமாறு,

மண்டைதீவிலும், பேசாலையிலும் புதிய மீன்பிடித் துறைமுகங்களை அமைக்க, 1.3 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு ஒரு கோப்பை பால்.

வறுமை நிலையில் உள்ள 72 ஆயிரம் மாற்றுத் திறனாளிகளுக்கு மாதம் தோறும் 5 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை. இதற்காக, 4300 மில்லியன் ரூபாய்.

வடக்கு- கிழக்கில் 15 ஆயிரம் வீடுகள் அமைப்பு. ஏற்கெனவே இதற்கு 4500 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், மேலும் 5500 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும்.

ஆயிரம் கலைப்பட்டதாரிகளுக்கு, 25 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவுடன், உள்ளகப் பயிற்சி. க.பொ.த உயர்தரத்தில் அதிதிறமைச் சித்தி பெறும் மாணவர்களுக்கு ஹவார்ட், கேம்பிரிட்ஜ், மசாசுசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவகத்தில் பயிலும் வாய்ப்பு. இந்த ஆண்டு 14 மாணவர்களுக்கு அனுமதி. அடுத்த ஆண்டில் 28 பேருக்கு வாய்ப்பு.

ஒய்வூதிய முரண்பாடுகளை தீர்க்க 12 ஆயிரம் மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

வடக்கில் பனை அபிவிருத்திக்கு 2 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு. வடக்கில் போத்தலில் கள் அடைக்கும் திட்டத்துக்கு 100 மில்லியன் ரூபாய்.

தமிழ்மொழி மூல ஆசிரியர்களை பயிற்றுவிக்க 400 மில்லியன் ரூபாய்.

போர்க்காலத்தில் அழிவடைந்த பகுதிகளின் அபிவிருத்திக்கு 5 பில்லியன் ரூபாய். வடக்கில் 10 பொருளாதார மத்திய நிலையங்கள் அமைப்பு ஆகியன அவற்றில் அமைந்துள்ளன. (ம-3)

## யாழ் - கொழும்பு...

மொனராகலையில் மாத்திரம் 35 ஆயிரம் குடும்பங்களுக்கு கழிப்பறை வசதிகள் இல்லை. கடந்த அரசு இதனை கவனிக்கவில்லை. இந்த வருடம் அனைத்து வீடுகளுக்கும் கழிவறை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க 4 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரதான பேருந்து நிலையத்திலும் ரயில் நிலையத்திலும் புதிய கழிவறைகள் நிர்மாணிக்கப்படும். (ம-3)

## அதிக நிதி ஒதுக்கீ...

மன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் 2019ஆம் ஆண்டிற்கான வரவு -செலவு திட்டம் நிதியமைச்சர் மங்கள சமரவீரவினால் நேற்று செவ்வாய்க்கிழமை சமர்ப்பிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டமானது பொறுப்புணர்ச்சியுடன் செய்யப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கு விசேடமாக 5000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

இதனை சரியான முறையில் எடுத்து செயற்படுத்தினால், வாழ்வாதாரத்தை உயர்த்துவது மட்டுமன்றி, இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புக்களையும் அதிகரிக்க முடியும்.

மேலும் மங்கள சமரவீர முன் வைத்த இந்த திட்டங்கள் வரவேற்கத்தக்கது என கூறினார். (ம-3)

## காணாமல் போ...

காணாமல் போனோரின் குடும்பத்திற்கு மாதாந்தம் 6000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படும் என நிதி அமைச்சர் மங்கள சமரவீர அறிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் 2019ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்டத்தை பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

காணாமல் போனோருக்கான அலுவலகம் உருவாக்கப்பட்டு அவர்களது பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரையில் மாதாந்தம் இந்த கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (ம-3)

# மோட்டார் சைக்கிளுடன் டிப்பர் மோதி விபத்து

## தாயும், மகனும் படுகாயம்



(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் பயணித்த மகனும், தாயும் டிப்பர் வாகனத்துடன் மோதுண்டு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கொடிகாமம் மிருசுவில் புகையிரத நிலையத்திற்கு அண்மையில் நேற்று மாலை நிகழ்ந்துள்ளது.

மிருசுவில் பகுதியில் இருந்து கொடிகாமம் நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனத்தை மறுபக்கத்தில் பயணித்துக் கொண்டிருந்த வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் மறித்துள்ளனர்.

இதனால் டிப்பர் சாரதி சடுதியாக பிரேக் பிடித்துள்ளார், இதனால் பின்புறமாக மோட்டார் சைக்கிளில் பயணித்த மகனும், தாயும் டிப்பர் வாகனத்துடன் மோதுண்டு படுகாயம் அடைந்து ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் இடம்பெற்ற பகுதி வளைவான வீதிப் பகுதி, அத்துடன் டிப்பர் பயணித்த பகுதியின் மறுபக்கத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவாறே வீதிப் போக்குவரத்து பொலிஸார் டிப்பர் வாகனத்தை நிறுத்துமாறு சைகை செய்தமை பின்னால் பயணித்த மோட்டார் சைக்கிளை கவனத்தில் எடுத்துக் கொள்ளத் தவறிய வீதிப் போக்குவரத்து பொலிஸாரின் கவனயீனத்தால் இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். (ம-10-30-89)

மஹஜன சம்பத
திகதி 2019/03/05
சீட்டிழுப்பு இலக்கம் 3869
N 1 1 3 9 4 6
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2019.03.05
சீட்டிழுப்பு இலக்கம் 2054
W 18 31 43 62
தேசிய லொத்தர் சபை

செவண
திகதி 2019/03/05
சீட்டிழுப்பு இலக்கம் 167
N 01 57 61 64
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2019/03/05
சீட்டிழுப்பு இலக்கம் 520
விருச்சிகம் 06 14 40 46 05
தேசிய லொத்தர் சபை

## வேலைவாய்ப்பு

தற்போது யாழ்நகரில் சாதாரண / உயர்தரத்திற்கு பின் சர்வதேச தரம் வாய்ந்த தொழில்வாய்ப்பிற்கு இட்டுச் செல்லும் பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு.

கணக்கியல்/வியாபாரமுகாமைத்துவம். சந்தைப்படுத்தல் / மனித வளமுகாமைத்துவம் / முகாமைத்துவம்.

தொழில்வாய்ப்பு மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற ஒரே நிறுவனம்.

இன்றே டயனமிக் யாழ் வளாகத்துடன் இணைந்து உங்கள் கனவினை நிஜமாக்குங்கள். **தொடர்புகளுக்கு : 076 459 7725**

(7735)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## ராஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: **ராஜ் - 077 679 6623**

# PHYSICS
## Paper Classes

குறுகிய பாடக்குறிப்புகளுடன் கடந்த கால வினாக்களை உள்ளடக்கிய துரித மீட்டல்

திங்/புதன்/சனி 4-6 PM

ஒளியியல் - 10
இலத்திரனியல் - 8
வெப்பவியல் - 20
சடத்தின் பொறியியல்
மின்புலம் - 10
இயல்புகள் - 7
ஓட்ட மின்னியல் - 15
சடமும் கதிர்ப்பும் - 7

மொத்தம் 77 வகுப்புகள்

**Mr.C.Thivyan B.Sc.,PGDE** (யாழ்.தேசிய பாடசாலை ஆசிரியர்)
கோலாசிற்றி 234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 077 843 5224

## வேலை ஆள் தேவை

போக்குவரத்து நிறுவனம் ஒன்றிற்கு பெண் வேலை ஆள் தேவை (யாழ்ப்பாணம்)

**0777 852 456**

(7760)


## இளம் தம்பதிகள்...

னுக்கும் அதிகமான சலுகை கடன்கள் வழங்கப்படும். 6 சதவீத வட்டி விகிதம், 25 ஆண்டுகளில் மீளச்செலுத்தப்பட வேண்டும்என்றுநிதிஅமைச்சர்மங்களசமரவீர அறிவித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின், 'மங்கள' வரவு - செலவுத் திட்டம், பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது. அதனை சமர்ப்பித்து உரையாற்றும் நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்ததாவது, வடக்கில் யுத்தத்தின் போது இடம்பெயர்ந்த முஸ்லிம்களை மீள் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

வடக்கு கிழக்கு ஆகிய பகுதிகளில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும். அத்துடன் அங்குள்ள மக்களுக்காக வீடமைப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுக்க 24 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பெண்களுக்கு கைவினைப் பொருட்களை செய்யும் மத்திய நிலையம் தொம்பே கிராமத்தில் அமைக்கப்படவுள்ளது. அதற்காக 50 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்றார். (ம-3)

## கிளிநொச்சியில் ஒருவர்...

பிறேமரமணன் (வயது 32) என்பவரே கொலை செய்யப்பட்டுள்ளார். வவுனியா வேப்பங்குளத்தை சேர்ந்த இவர் ஒரு பிள்ளையின் தந்தை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை தனது அலுவலகப் பணிப்பாளருடன் கிளிநொச்சி ஏ-9 வீதியில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு உதயநகர் கிழக்கில் தங்கியிருக்கும் இடத்திலிருந்து புறப்படும்போதே உந்துருளியில் வந்த ஒருவர் சரமாரியாக வெட்டியுள்ளார். தலை, கை, கால் மற்றும் உடம்பில் வெட்டுக்காயங்களுக்குள்ளான அவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முன் உயிரிழந்துள்ளார். உறவினர் ஒருவரே வெட்டியதாகவும் வெட்டிய நபர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-271,312,315)

## தாய்ப்பால்...

இடம்பெற்ற இச் சம்பவத்தில் பிறந்து 52 நாட்களேயான யோய்தயன் மகீசன் என்ற பாலகனே உயிரிழந்தவராவார்.

இரவு தாயார் பிள்ளைக்கு பால் கொடுத்துவிட்டு உறங்கியதாகவும் அதிகாலையில் எழுந்து பார்த்த போது பிள்ளை அசைவற்று இருந்ததை அடுத்து பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் அனுமதித்த போது குழந்தை இறந்துவிட்டதாக வைத்தியர்களால் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை மரணவிசாரணை அதிகாரி திருமதி அன் ரலா வின்சன்தயான் விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பருத்தித்துறை பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ம-60)

## யாழ். மாநகர...

அவர் மேலும் தெரிவித்ததாவது,

விளையாட்டுத்துறையில் ஆர்வம் கொண்டவர்களுக்கு இலவச பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இலங்கைப் போக்கு வரத்து சேவைக்கு 250 புதிய பேருந்துகள். இத்திட்டத்திற்கு 1.5 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (ம-3)

## அரச ஊழியர்...

2019ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரச பணியாளர் களுக்கு 2,500 ரூபாய் அதிகரிப்பும் ஓய்வூதியர்களின் கொடுப்பனவை வழங்குவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்களுக்கு தீர்வுகாணவும் நடவடிக் கை. ஓய்வூதிய கொடுப்பனவுக்காக 12 ஆயிரம் மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ம-3)

## சிகரெட் ஒன்று...


கப்படவுள்ளது.

நிதி அமைச்சர் மங்கள சமரவீரவினால் நேற்றைய தினம் பாராளுமன்றில் முன் வைக்கப்பட்ட 2019ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்டத்திலேயே குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சிகரெட்களுக்கு தேசிய கட்டுமான வரி விதிக்கப்படும் எனவும் பீடி இலைகள் இறக்குமதிக்கான செஸ் வரி 3,500 ரூபாயால் அதிகரிக்கப்படவுள்ளது எனவும் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (ம-3)

# மரண அறிவித்தல்

## அருமைராசா அருள்சேகர்



யாழ்.உடுவிலைப்பிறப்பிடமாகவும், சுவிஸ் Zürich ஐ வசிப்பிடமாகவும் கொண்ட அருமைராசா அருள்சேகர் அவர்கள் 02.03.2019 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் அருமைராசா - நீலாம்பிகை தம்பதிகளின் அன்பு மகனும், சின்னராசா - கமலாதேவி (பட்டு) தம்பதிகளின் அன்பு மருமகனும், புஸ்பமாலா (மாலா) அவர்களின் அன்புக் கணவரும், லத்திகன், லக்ஷ்சன், லஜின் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அனிலா, அனித்தா, அனுஷா, அயில்டா, ஆனந்தி, துசிஜந்தன், அனிஸ்ரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், றவிச்சந்திரன் (சந்திரன் - லண்டன்), விஜிந்தன் (இலங்கை), நெல்சன் (ஜேர்மனி), றூபன் (பிரான்ஸ்) கசின் (பிரான்ஸ்), செல்வகுமார் (லண்டன்), உதயகுமார் (இலங்கை), சசிகுமார் (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், தனிசலா (இலங்கை), சாந்தா (இலங்கை), அனற்தர்சினி, புஷ்பா ஆகியோரின் அன்பு மைத்துனரும், யோகபுத்திரன், மகேஸ்வரி (ஜேர்மனி), காண்டீபன், றிஷா (இந்தியா), காலஞ்சென்ற சௌந்ராஜன் (ரவி), பிறேமச்சந்திரன் (ராசன்), யசோதா, ஞானசந்திரன், செல்லா (இலங்கை), ஜெயசந்திரன், சசி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மருமகனும், ஜிது, அக்சயன், நிவி, அட்சயா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், ஜதுர்ஷா, நிதுர்ஷா, ஜீனுகா, அபிநாத், ஜஸ்மன், திஷானா, சஜிந், சகானா, ஜெமிமா, கப்றியல், நீலயா, றோசனா, லென்சி, றோஜி, லெச்சி, மிதுஷன், மதுஷா, லத்திகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நீலேஸ்வரி, காலஞ்சென்ற நீலோசனா, நீலாவதி (இலங்கை), செல்லத்துரை, வவா, சின்ராசு, சந்திரன், பெரியவன், சின்னவன் ஆகியோரின் பெறாமகனும், சறோஜினியின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.03.2019) வியாழக்கிழமை சுவிஸில் நடைபெறும் அதேநேரம் அவருடைய பிறப்பிடமான உடுவிலில் உள்ள அவரது தாயாரின் இல்லத்திலும் துயர்பகிர்வுகள் இடம்பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிறிலங்கா லேன்,
உடுவில், சுன்னாகம்.
(7750)

- குடும்பத்தினர்
077 960 6105


WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-5686)

வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் – மீசாலை – கிளிநொச்சி – கனகராயன்குளம்
முல்லைத்தீவு – மன்னார் – வவுனியா – திருகோணமலை
(C-5668)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-5632)

## வேலையாட்கள் தேவை

சுப்பர் மாக்கற் இல் வேலை செய்வதற்கு ஆண்/பெண் இருபாலாரும் உடன் தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**கணக்காளர் / பயிலும் கணக்காளர் :** A/L கணக்கியலில் திறமைச் சித்தி பெற்றவர்கள் விரும்பத்தக்கது. (பாடசாலையில் இருந்து விலகிய ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.)

**வாகன சாரதி :** (A,D வாகன அனுமதிப்பத்திரம், வயது 35 - 55)
குறிப்பு : கிராம அலுவலரின் நற்சான்றுப்பத்திரத்துடன் கீழ் உள்ள முகவரிக்கு நேரில் வரவும்.

தூர இடங்களில் வசிப்பவர்களாயின் உணவு மற்றும் தங்குமிட வசதி ஒழுங்கு செய்து தரப்படும்.

**SUNJEYS A to Z SUPER MART**
இல : 100 அரசடி வீதி, யாழ்ப்பாணம். (இந்து மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)
(C-5695)

## ஸ்ரீ கொல்லிமலை மாந்திரீக ஜோதிடர் மாந்திரீக சித்தர் யாழ்ப்பாணம் வருகை



ஜாதகம், குறிப்பு, கைரேகை ஆண்,பெண் வசியம். தொழில் கணவன் மனைவி பிரபலம் மீற்றும் குழந்தை பாக்கியம், வெளிநாட்டுயோகம் ஆகிய அனைத்தும் சிறந்த முறையில் சொல்லப்படும்.



நேரம் காலை 8.00 மணிமுதல் மாலை 8.00 மணி வரை
076 495 1787, 077 897 1672
யாழ்ப்பாணம் ஓட்டுமடம் வீதி (கொழும்பு வேர்க் ஷாப் எதிரில்)
(7755)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.